ஈராப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஐப்பசி திங்கள் 15-ம் நாள் (31—10—1965) ஞாயிற்றுக்கிழமை றஜப் 5 | இதழ் 23

# 'மறக்க முடியாத விஜயம்'

## ஈழத்து மக்களுக்கு மக்கள் திலகம் விடுத்த விசேட பிரியாவிடைச் செய்தி

'சாதாரண கலைஞர்களாக கட்டிய ஆடைகளோடும் மாற்றிக் கொள்ள சில உடைகளோடும் இலங்கை வந்த நாம் இன்று பெருஞ் செல்வர்களாகத் திரும்புகிறோம். இந்தச் செல்வத்தை எடுத்துச் செல்ல எந்த அரசாங்கமும் எம்மைத் தடுக்க முடியாது. மக்கள் தந்த இந்த மதிக்க முடியாத செல்வத்தை எங்கள் வாழ் நாள் முழுவதும் கட்டிக் காப்போம்' என்று மக்கள் திலகம் அவர்கள் சுதந்திரன் மூலம் விடுத்த விசேட பிரியாவிடைச் செய்தியில் ஈழத்து மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஒரு வார காலத்திற்கு மேலாக ஈழத்தில் விருந்தினராக வந்திருந்த மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வெள்ளிக்கிழமை தாயகம் திரும்புகையில் சுதந்திரன் மூலம் விடுத்த செய்தியில் மேலும் கூறுவதாவது:

'தான் பிறந்த பொன்னாடு' என்று பெருமையாகக் கூறுவது வழக்கம். இலங்கையைப் பற்றி எண்ணும் போதெல்லாம் என்னுள்ளத்தில், எங்கோ ஒரு மூலையில் இப்படி ஒரு உயிரோட்டமுள்ள எண்ணம் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

பிறந்த மண்ணைப்பார்க்க வேண்டுமென்ற பேரார்வம் ஒருபுறம் இருந்தாலும், இலங்கையில் உள்ள ரசிகப் பெருமக்களை சந்தித்து அவர்களின் வாழ்த்துக்களையும், அன்பினையும் பெற வேண்டும் என்ற ஆவலும் என்னைத் தூண்டிக் கொண்டிருந்தது. அந்த ஆர்வமும், ஆவலும்தான் என்னை இந்தியத்துணைக்கண்டத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே இலங்கை மண்ணை மிதித்தேன் கண்டேன் இலங்கையை! களிப்பு மிகப்பெற்றேன். இலங்கை மக்களிடையே என்ன ஆர்வம்! எவ்வளவு அன்பு! எங்களைக் காணவேண்டுமென்பதிலே எவ்வளவு ஆவேசம்! கையைத் தொட்டுப் பார்த்துவிட வேண்டுமென்பதிலே எவ்வளவு தூய்மையான உள்ளத்துடிப்பு...மக்கள் வெள்ளம், நாங்கள் போகிற இடங்களில் எல்லாம் கொட்டும் மழையிலும், கொழுததும் வெயிலிலும், கடுமையான பனியிலும் பல ஆயிரக்கணக்கில் கூடி நின்று, குழந்தை குட்டிகளுடன் தாய்மார்களும் சகோதரிகளும் அன்பைப் பொழிந்த காட்சியைக் கண்டபோது, இந்த இன்பத்தை எவ்வளவு கஷ்டங்களை விலையாகக் கொடுத்தாலும் பெறமுடியாத ஒரு பேரின்பமாகவே எண்ணி நாங்கள் மகிழ்ந்தோம்.

இலங்கை மக்கள் காட்டிய அன்புணர்ச்சி, சில நேரங்களில், எங்களின் தாயகத்தில் எங்களுக்குக் கிடைக்கும் அன்பைவிடப் பெரியதாக, சிறந்ததாக எண்ணும்படி அமைந்ததைக் கண்டு பெரிதும் ஆச்சரிய மடைந்தேன்.

வெறும் நடிகர்களாக எங்களை அவர்கள் எண்ணவில்லை. உடன்பிறப்புக்களாக, உற்றார்களில் ஒருவராக எண்ணி எங்களுக்கு அவர்களின் நல்ல இதயங்களைக் காணிக்கையாக்கிய காட்சிகள் என்றும் எங்கள் உள்ளத்தைவிட்டு அகலமுடியாத ஜீவ நிகழ்ச்சிகளாகும். கொழும்பு நகர மக்களிடையிலே கண்ட களிப்புணர்ச்சியை பூரணமாக்கியது நூரேலியாப் பகு

(9-ம் பக்கம் பார்க்க)



கொழும்பிலேயுள்ள [illegible] திலகத்தில் [illegible]ன்பான திரு. எஸ். சற்குருநாதன் [illegible]டைய இல்லத்தின் மாடி மேல் நின்று மக்களுக்குக் [illegible]றுகிறார் மக்கள் திலகம். உடன் சரோஜா [illegible]வியும் காணப்படுகிறார்.

படம்: ராஜப்பன்

## தமிழ் மொழி பெயர்ப்புக்கு தனிப் பிரிவு வேண்டும்

அரசாங்க சேவை ஆணைக்குழுப் பிரமாணங்கள் நடைமுறைக் கைநூல், நிதிப் பிரமாணங்கள் ஆகியன 1958ம் ஆண்டுக்குப் பின் இதுவரை, அரசகரும மொழித் திணைக்களத்தினால், தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை. இது குறித்து பாராளுமன்றத்தின் நவம்பர் 18ந் திகதி கூட்டத்தில் கிளிநொச்சி பிரதிநிதி கா.பொ. இரத்தினம் நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளரிடம் கேள்வி எழுப்ப இருக்கிறார்.

மேற்குறிப்பிட்ட பிரமாணங்களைத் தமிழில்மொழி பெயர்க்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அவர் உதவி மந்திரியை வினவுவார்.

மேலும் 1965—1966ம் நிதி வருட மதிப்பீடுகளின் 116ம் தலைப்பின் 3ம் இலக்கப் பங்கீட்டை உதவி ஆணையாளரின் கீழ் தனிப்பட்ட ஒருபிரிவாக நிறுவி அரசாங்க திணைக்களங்களின் மொழி

[9-ம் பக்கம் பார்க்க]



யாழ்ப்பாண விளையாட்டரங்க நிதிக்காக யாழ். முற்ற வெளியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட மக்கள் திலகம் எம். ஜி. ஆர். தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிறார். யாழ். நகர முதல்வர் திரு. எஸ். சி. மாதேவா அவர்கள் தேசிய உடையிலும், நீதியரசர் கலாநிதி தம்பையா, சரோஜாதேவி ஆகியோரும் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.

—படம்: ராஜப்பன்

மட்டக்களப்பு விமான நிலையத்தில் வைத்து மட்டக்களப்பு முதற் பிரதிநிதி செ. இராசதுரை, மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி ஜனாப் மக்கீன் சின்ன லெப்பை, மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம், பட்டிருப்புப் பிரதிநிதி சி. மூ. இராசமாணிக்கம், கற்குடாப் பிரதிநிதி கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் மக்கள் திலகத்தையும், சரோஜாதேவியையும் வரவேற்கும் காட்சி.

—படம்: ராஜப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# இலக்கியத்தில் நாம்

ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றின் மீது நுனிப்புல் மேய்ந்திருக்கும் இக் கட்டுரையாசிரியர், கவிதைத் துறையில் ஈழத்தவர்கள் பெருமளவில் வளர்ந்திருப்பதாகக் கூறுகிறார். கவிதைத் துறை தவிர்ந்த ஏனைய இலக்கியத் துறைகளில் நம்மவர்களின் வளர்ச்சி குழந்தை நிலையிலேயே உள்ளதாம். ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் பட்டியல் வளர்ந்திருக்கிறது என்றும், அதில் பிரச்சார எழுத்தாளர்களை நீக்கிவிட்டால் எஞ்சுபவர்கள் மட்டுமே சிறுகதையின் உயர்வுக்காக உழைத்தவர்கள் என்றும் கட்டுரையாசிரியர் கூறுகிறார்.

மனிதமனதின் நுண்ணிய உணர்ச்சிகளை—அனுபவங்களை—வாழ்வில் ஏற்படும் ஆசாபாச உணர்ச்சிகளை தேக்கி வைக்கும் இடமே இலக்கியமாகும். நிகழ்ந்த—நிகழ்கின்ற காலங்களை மட்டுமல்ல, எதிர்காலத்தை எவ்வாறு மனிதன் நீந்திச் செல்ல வேண்டுமென்பதையும் இலக்கியம் புகட்டி நிற்கின்றது. இவ்வித மாபெரும் சக்தி கொண்ட இலக்கியத்தின் நுட்பங்களைப் பேசுவதே சிரமசாத்தியமான ஒன்று.

ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு நாடும் தன[...]கெனக் குறிப்பிட்ட இல[...]யக் கருவூலங்களையுடை[...]வாக, விளங்குகின்ற[...]லியத்தின்தன்மை, [...] வனப்பு என்பன [...] மொழி கலாசார[...]யின் எடை க[...] விளங்குகின்றன.

## ஆரம்ப[...]

இலங்கையில் சுதேசிய மொழிகளாகவுள்ளவை சிங்களம், தமிழ் என்பன. ஈழத்தின் வடக்குக் கிழக்கு ஆகியன மட்டுமன்றி மலைநாடு ஆகியன வற்றிலும் தமிழ்மக்கள் வாழ்கின்றனர். இவர்களது வாழ்க்கைமுறை இந்தியப் பண்பாட்டோடு தொடர்புடையனவாயினும், இங்கு எயக்கென்று தனிக்கலாசாரப் போக்கு உண்டென்பதை மறுப்பதற்கில்லை.

நீண்ட காலத்துக்கு முன்னிருந்தே தமிழ் இலக்கியத்திற்கு நம்மவர் செய்துவரும் சேவை, பொதுவான தமிழ் மொழிக்குட்பட்டதாயினும் எம்மைப் பிரதிபலிக்கும் சரித்திர, கலாசார, பண்பாட்டின் வழியிலேயே எம் இலக்கியத்தின் போக்கு அமைந்திருக்கின்றது.

தமிழகத்தில் தலை-இடை-கடையாகிய முச்சங்கங்கள் தமிழ் வளர்த்திருக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர் தெளிவுபடுத்தியுள்ளனர். இச்சங்ககால நூல்களே இன்றைய தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளாக விளங்குகின்றன.

சங்க காலம் தொட்டே ஈழத்தில் வாழ்ந்த புலவர்கள் தமது இலக்கியப் பணியை மேற்கொண்டுள்ளனர். ஈழத்துப் பூதந்தேவனாரின் சரித்திரத்துடனேயே இலங்கையின் இலக்கிய வளர்ச்சி ஆரம்பமாகின்றது.

## நாவலரைத் தொடர்ந்து

ஆனால் இக்கால இலக்கியத்தில் நாம் என்று என் கருத்துக்கு முற்கண இடத்தைப் பெறுபவர் ஆறுமுகநாவலர். ஆறுமுக நாவலர் அவர்களே ஈழத்து இலக்கிய உணர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்தவர் என்பதை மறந்துவிடக் கூடாது.

செய்யுள் நடைபயின்ற தமிழ் மொழிக்கு புத்துருவமாகிய உரைநடை உருவம் கொடுத்து எல்லோர் மத்தியிலும் இலங்கவைத்த பெருமை இவருக்குரியதாகும். உரை நடை முறையைத் தமிழிற்கு அறிமுகம் செய்துவைத்த பெருமையும் நாவலர் பெருமானுக்கே உரியதாகும். அன்றுவரை செய்யுள் நடையில் இருந்து வந்த இலக்கியச் செல்வங்கள், ஓரளவு படித்துப் புலமை பெற்றவர்களே அண்டும் பொருளாக இருந்து வந்தது. ஆனால் நாவலர் அதன் தன்மையை இலகுபடுத்தி எல்[...]லோரும் படித்து இன்புறத்[...]க்க நல்ல வாய்ப்பை ஏற்[...]படுத்திக் கொடுத்தார் என்றால் அது மிகையான ஒன்றல்ல.



### யாழ்வாணன்

[...]ருக்கு அடுத்ததாகவரு[...] வை. தாமோதரம் [...] அவர்களே. செல் [...] துலையன்றி மெய்ப் [...] விரவாத செந்நா[...] தன் கண்ணீராற் க[...] அவற்றை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வந்தார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக ஈழத்து தமிழ் வளர்ச்சியல் அக்கறையோடு உழைத்தவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவர். வடமொழி நூல்களைத் தமிழாக்கியும், புராண இதிகாச நூல்கள் சிலவற்றை ஆக்கியும் இலக்கியத் துறைக்குத் தொண்டாற்றியுள்ளார்.

இவர்களைத் தொடர்ந்து தமிழ் இலக்கியக் கடலுள் தமது பங்கை, நம்மவர்க்காக்கி நல்கிய பெருமைக்குரியோர்கள் வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை, தமிழ் வரலாறு எழுதிய மட்டக்களப்புப் பூபாலபிள்ளை, ஈழமண்டல சதகஞ் செய்த ம. கதிரவேற்பிள்ளை என்பவர்களையாம் மறந்துவிடலாகா. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, வித்துவான் சரவணமுத்து, சிவசம்புப் புலவர், திரு. கனகசுந்தரம்பிள்ளை, மத்திய கல்லூரி அதிபராக விளங்கிய மதிப்புக்குரிய பேர்சிவல் பாதிரியார் ஆகியோர் இக்காலகட்டத்தில் தமிழ் வளர்த்த சிறப்புக்குரியோர்.

## சிறுகதையின் தோற்றம்

நாவலர் பெருமானுக்கும், குமாரசாமிப் புலவருக்கும் இடைப்பட்ட காலம் சரித்திர ஏடுகளில் பாராட்டப்படவேண்டிய காலமாகும். ஈழநாடு பொன்னெழுத்துக்களால் மேற்படி காலகட்டத்தைப் போற்றினும் அது நிறைவுடைத்தாகாது.

இக்காலத்துக்குட்பட்ட இப்பெரியார்களின் இலக்கிய சேவை தமிழிற்குகந்த பணியைக் கொடுத்ததாயினும் இன்றைய இலக்கிய உலகத்திற்குரிய காலதேச வர்த்தமானத்தை அனுசரிப்பதாக அமைந்துவிட்டதென்று கூறமுடியாது.

இக்காலத்திலே பாரத நாட்டில் தோன்றிய சுதந்திர எழுச்சியின் பேறாக பல பத்திரிகைகள் உருவாகின. இவற்றுள் பல தேசிய உணர்ச்சியை ஊட்டக்கூடியனவாக வார ஏடுகளாகவும், மாத சஞ்சிகைகளாகவும் மிளிர்ந்தன. இப்பத்திரிகைகள் வெறுமனே அரசியல் உணர்ச்சிக்கு மட்டுமல்ல, இலக்கிய ஆர்வம் ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்தன.

'இக்காலகட்டத்தில், மேனாட்டு இலக்கியங்களுட்பட' அதுவரை காலமும் இலக்கியத்துக்குரிய கவிதை அமைப்பு என்ற தனியுருவம் நீங்கிஉரை நடை இலக்கியங்களும் ஆக்கப்பட்டன. உரை நடை இலக்கியத்தின்

(14-ம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கை ஒரு போராட்டம்!

—"சத்தியசீலன்"—

'வாழ்க்கையொரு போராட்டம்' என்றழுதார் என்நண்பர்
'நல்ல பகிடி'என்று நான்சிரித்தேன்! கோபித்தார்!
'எல்லாமே வாழ்க்கையிலே இன்னல்—போராட்டமென்றால்
முத்தம் கொடுத்தல், முதலிரவு போராட்டம்!
தைத்திங்கட் பொங்கல் தமிழருக்குப் போராட்டம்!
அத்தன் அடியபரவல் ஆர்வலர்க்குப் போராட்டம்!
பித்தமிதே' என்று பிரித்துப் பொருள் உரைத்தேன்.
சத்தம் அடங்கி இருந்தார் தமிழ்செய்தார்!
'ஒன்றாய்ப் பழகி உடனே பிணங்குகிறோம்
என்றால் பார்நண்பாளா இங்கு கொள்கைப் போராட்டம்!
தேர்தல் முழக்கம், திசையெல்லாம் நீள்கொடிகள்
பார்வை பறித்துவைக்கும் பச்சைச் சிவரொட்டி
கொட்டை எழுத்திற் குவிகின்ற பத்திரிகை
அட்டை மணிமொழிகள் ஆயவெல்லாம் இவ்வகையே.
பின்னும் சிரித்தேன்! பிறகும் தொடர்கின்றார்.
தின்னவழி இல்லாமற் திண்டாடு வானொருவன்.
அன்னத்தைத் தின்ன அலுப்படைகி றானொருவன்!
முனேனன் உழைப்பு முதலுக் குயிர்கொடுக்க
பின்னவனோ அத்தொழிலின் பேற்றைத்தானேநுகர்ந்தும்
இன்னும் பெருங்கிஇங்கே இந்திரனாய் வாழுகிறான்!
என்ன மனிதர்! இருந்தும் தொழிலாளி
தன்நலத்தைக் காக்கத் தளராது போராடி
வந்துள்ளான்' என்று வாய்மூடப் போகுங்கால்
'வர்க்கப்போர் என்று வருணிப்பீர்' என்று சொன்னேன்.
சர்க்கரையாய் அதைச் சுவைத்துச் சபாசென்று
கைதந்தார் நண்பர்! களைப்பாற விட்டுவிட்டுப்
பைய இதைச் சொல்லுகிறேன்: 'பாரும் இந்தப் போராட்டம்
என்று முடியும்? எவர் இதிலே வென்றிடுவார்?
ஓயாப் போராட்டம் ஒருவருக்கும் வெற்றியில்லை
பார்நண்பா இங்கும் பகிடி தெரியவில்லை!
அத்தன் படைத்தான்! அவனுக்கது பகிடி!
பித்த மனிதன் பெரிய கடவுளைப்போல்
எத்தனையோ எண்ணை இயற்றத் துணிகின்றான்!
பாடுகிறான் ஆடுகிறான் பாவையரைத் தேடுகிறான்
மாடிமனை கட்டி மலையாய்ப் பொருள் குவித்தும்
சாளன்றோர் நாள்இதயம் சட்டென்று நின்றுவிட
ஓ 'வென்றலறி உடனே புதைக்கின்றார்!
பாவம், மனிதப் பகிடி புதைகிறது!
இந்தப் பகிடி இதனோடு நிற்கிறதா
தந்தை முறையில்அவன் தானுவந்தே செய்துவிட்ட
பிள்ளைப் பகிடி பிறகும் தொடர்கிறதே!
மொத்தத்தில், வாழ்க்கை முழுதும் தொடர்ப்பகிடி!'

## இலக்கிய உலகு
### வேதாளம்

## வானொலிச் சிறுகதை

இலங்கை வானொலி சிறுகதை வாரத்தில் இடம்பெற்ற சிறுகதைகளை ஒலிப்பதிவுசெய்வதற்காக வானொலி நிலையத்திற்கு சிறுகதை ஆசிரியர்கள் எழுவரும் வந்திருந்தார்கள். ஒலிப்பதிவு இருபகுதிகளாக ஒன்று காலையிலும் மற்றையது மாலையிலும் நடந்தது. கனக. செந்திநாதன், ஆரையம்பதி தங்கராஜா, அகஸ்தியர் மூவரும்ஒருங்கே காலை ஒலிப்பதிவிற்காக வந்து நிலையத்தில் சந்தித்துக் கொண்டார்கள்.

'கிளியோபத்ரா' பார்த்த களைப்போடு கனக. செந்திநாதன் நிற்க, புதிய விடத்தில் புதியநிலையில் சிறிது தடுமாற்றத்தோடு ஆரையம்பதி தங்கராஜா நிற்க, தங்கராஜாவோடு கதை கொடுத்தபடி அகஸ்தியர் நின்றார். அகஸ்தியர் 'இப்புதுப் பொடியனை' தமது குழுவில் இழுத்துவிட முயன்றாராம். கனக. செந்திநாதன் தனது கதையைப் படித்த, போது அகஸ்தியர் பக்கத்திலிருந்த தங்கராஜாவிற்கு விமர்சனம் கூறினாராம்.

மாலையில் நடந்த ஒலிப்பதிவில் சு. வே., சொக்கன், செம்பியன் செல்வன், நந்தி என்போர் இடம் பெற்றனர். ஒரு வார்த்தை வாசிக்க எத்தனை செக்கண்டுகள், ஒரு பந்தி வாசிக்க எத்தனை நிமிடங்கள் என்று கணக்கிட்டு நந்தி தனது கதையைப்படித்தாராம். சொக்கன் நீண்ட தனது கதையில் பலபக்கங்களை வெட்டிக் கழித்துவிட்டு, சுவையாக நடித்தாராம். சு.வே. அளவோடு எழுதினதால் பிரச்சினை எழவில்லை. செம்பியன் செல்வன் தனது கதையில் மூன்று பக்கங்களை வெட்டி விடும்படி கேட்டதற்குச் சம்மதிக்காது, பதின்மூன்றுமணித்துளிகளில் முழுவதையும் படித்து முடித்தார்.

வானொலியில் தமது சிறுகதைகள் இடம் பெற்றதால், அதற்கு ஒரு விழா வெடுக்கலாம் எனச் சிலர் எண்ணியுள்ளனர். ஆனால், இவர்களுக்கு பலநூறு விழா வெடுப்பவர்களும் சிறுகதை எழுதி வானொலிக்கு அனுப்பித் தோல்வி கண்டதால் விழாவெடுப்பு நடைபெறுமோ என்பது கவலைக்குரியது. அதுமட்டுமல்ல—

வானொலிச் சிறுகதை வாரத்தில் பங்குபற்றக் கதைகள் எழுதியவர்கள், இப்போது தாம் பங்குபற்றவில்லை என்று கூறிக் கொள்கின்றனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. குழந்தைவேலு,
கண்டாவளை

கே: பெண்கள் உத்தியோகம் பார்க்கக் கூடாது என்கிறேன். என் சகோதரியோ பெண்கள் கள் உத்தியோகம் பார்க்கலாம் என்று வாதாடுகிறார். உங்களின் கருத்து?

ப: பெண்கள் உத்தியோகம் பார்ப்பதில் தவறில்லை. சகல துறைகளிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக முன்னேறிச் சென்றாலன்றி நாடு முன்னேறாது.

❀

கே. வி. துரை,
அறல்வத்து

கே: மக்கள் திலகம் எம். ஜீ. ராமச்சந்திரனின் இலங்கை விஜயம் பற்றி தங்களின் கருத்து என்ன?

ப: அவர் விஜயத்தை நான் வரவேற்கிறேன். இன்னும் 4 மாதங்களில் மீண்டும் இங்கு வருவதாகக் கூறியிருக்கிறார். அடிக்கடி அவர் இங்கு வந்து இரு நாடுகளுக்குமிடையே கலைப் பாலம் அமைக்க வேண்டுமென்பதே பலரது அவா.

❀

ஜே. இம்மானுவேல்,
குருநாகல்

கே: ருஷ்யாக்காரனும் சீனாக்காரனும் வந்தால் படம் போட்டு காட்டும் பத்திரிகைகள் கொடை வள்ளல் எம். ஜி. ஆர் வருகை பற்றி மௌனம் சாதித்தது எதைக் காட்டுகிறது.

ப: பொறாமையைக்காட்டுகிறது.

❀

ஏ. எல். எம். தம்பி,
நிந்தவூர்-1

கே: "தமிழரசார் கோரிய தமிழ் பல்கலைக் கழகம் என்னவாயிற்று?"

ப: தேசிய அரசாங்கம் ஆட்சியிலிருப்பதால் மிக விரைவில் அந்தக் கோரிக்கையும் நிறைவேறும்.

❀

ஆர். ஆனந்தகம்பிரமணியம்,
முன்னேஸ்வரம்

கே: மனிதனுக்கு இரு கண்களைப் படைத்த ஆண்டவன் இரு நாக்குகளைப் படைக்க வில்லையே ஏன்?

ப: நாக்கின் சக்தியை அவர் உணர்ந்திருந்ததால்! இரு நாக்குகளைப் படைத்திருந்தால் மனிதன் ஆண்டவனையும் மிஞ்சிவிடுவானே!

❀

டி. எம். வி. கான்,
கண்டி

கே: கன்னிப் பெண் என்று கூறுவது எத்தனை வயது வரை?

ப: அதற்கு வரையறுத்தல் சாத்தியமில்லை. கன்னித் தன்மை கழியும்வரை ஒவ்வொரு பெண்ணும் கன்னிப் பெண்தான். எனவே வயது கூறமுடியாது.

❀

வி. முத்துகைலா, பதுளை

கே: ஆண்களைவிட பெண்கள் தான் உயர்ந்தவர்களென்று எமது நண்பன் கூறுகிறான். நான் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். நீங்கள்...?

ப: நானும் மறுக்கிறேன். பெண்களை உயர்த்துபவர்கள் ஆண்களே. எனவே ஆண்களே உயர்ந்தவர்கள்.

❀

மூர்த்தி, மட்டக்களப்பு

கே: மங்கையின் கண்கெண்டைமீனைப்போன்றது என வர்ணிக்கிறார்களே! கண் மீனைப் போலவா இருக்கிறது?

ப: கண் மீனைப் போலல்லாவிட்டாலும், அக்கண்ணை உடையாள் மீனைப் போன்று வழுக்கி வழுக்கி வலையில் விழுவதால் அப்படி வர்ணிக்கிறார்கள்.

குமரன், காலி

கே: எனது உறவினர் ஒருவர் கடன் தொல்லை பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். அவர் தங்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தாவது கடனைச் செலுத்தியே தீருவார் என்று கூறித்திரிகிறார்கள் கடன்காரர்கள். இப்படி நடக்குமா?

ப: இல்லை. அவர்கள் கூற்று தவறு. 'செத்தால் எல்லாக் கடனும் செலுத்தியாச்சு' என்பது மறுக்க முடியாத சித்தாந்தம். அதைத் தெரிந்து கொண்டுதான் அவரும் செத்து வைத்தார்.

❀

என். ரத்தினம், கொழும்பு-10

கே: எனது அத்தை மகளைத் திருமணம் செய்யும்படி தந்தை வற்புறுத்துகிறார். அவளோ பெரிய சண்டைக்காரி. என்ன செய்யலாம்?

ப: சண்டைக்காரியைக் கலியாணம் செய்வதை விட கலியாணம் செய்யாமலே காலத்தைக் கழித்து விடலாம்.

❀

செல்வி கனகாம்பிகை,
கொழும்பு-

கே: தேகாரோக்கியமுள்ள ஒரு பெண்ணின் கூந்தல் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?

ப: இது ஆராய்ச்சிக் குரிய விஷயம். குறைந்த பட்சம் 2 அடி 2 அங்குலம் நீளமாவது இருக்க வேண்டுமென்பது இதுவரை நான் செய்த ஆராய்ச்சியின் முடிவு-ஆனால் சவுரி இல்லாமல்!

❀

என். எச். எம்.,
மன்னார்

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் காதலிக்கிறாளோ தெரியவில்லை. ஆனால் என்னிடம் புத்தகம் (நாவல்) வாங்குகிறாள்!

ப: வாங்கிய புத்தகத்தை திருப்பிக் கொடுத்ததும் அதைப் பரிசோதித்துப் பாருங்கள். அதனுள் குறிப்பு எழுதிய ஏதும் கடுதாசி இல்லையேல் அவள் உங்களைக் காதலிக்கவில்லை என்று தெரிந்து கொள்ளுங்கள்.

❀

ஆர். கணேசன், திருமலை

கே: காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் எல்லா விபத்துக்களுக்கும் இன்ஷுர் செய்கிறார்களா?

ப: செய்கிறார்கள், காதல் விபத்து தவிர.

❀

அபூபக்கர், மன்னார்

கே: நானோ ஒரு முஸ்லிம். ஆனால் என்னை ஒரு தமிழ்ப் பெண் காதலிக்கிறாள். இது முறையாகுமா?

ப: தவறில்லை-காதலுக்கு கண்ணுமில்லை, சாதியுமில்லை.

❀

வ. வர்ணகுலசிங்கம்,
அல்வாய்

கே: திரு. இராசமாணிக்கம் மட்டு. மகாநாட்டில் நிகழ்த்திய உரைக்கும், ஐ. நா. சபையில் திரு. பொன்னம்பலம் நிகழ்த்திய உரைக்கு முள்ள வித்தியாசம் என்ன?

ப: திரு. இராசமாணிக்கம் தனது கருத்தைச் சுதந்திரமாக வெளியிட்டார். திரு. பொன்னம்பலம் அரசாங்கத்தின் கருத்தை மட்டும் வெளியிட்டார். ஐ. நா. வில் தன் கருத்தை வெளியிட அவருக்கு அதிகாரமோ உரிமையோ கிடையாது.

கே: தற்பொழுது நிறைய சில இந்திய நட்சத்திரங்கள் இலங்கை வருவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: வருவது நன்றே! அந்த நட்சத்திரங்களும் நம் வானில் ஜொலிக்கட்டுமே!

❀

'மகா விருவன்', பதுளை

கே: மலை நாட்டு "லக்ஷமி" தேர்வில் கலந்து கொள்ளாத மகளிரைப் பற்றிக் கருத்தென்ன?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1182
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: அவர்களும் அழகிகளே. அழகுக்குத் தெரிவு எதற்கு? தோட்டங்களின் பதிவுபிரக்கணக்கான செட்சுமிகள் இருக்கிறார்களே.

❀

எம். எஸ். காதர்,
கொழும்பு-6

கே: தேசிய அரசாங்கம் தமிழர் பிரச்சினையை தீர்க்காவிடின் தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன?

ப: போர்க்கொடி உயர்த்துதல்.

❀

க. தமிழரசன்,
கரவெட்டி

கே: தமிழ் காங்கிரஸ் கட்சியின் இலட்சியம் என்ன?

ப: யு. என். பிக்கு அப்பாற்பட்ட இலட்சியம் எதுவும் அதற்குக் கிடையாது.

❀

எம். எம். அபூபக்கர்,
மன்னார்

கே: எனது தேசீய விளையாட்டு என்ன?

ப: கை குலுக்கு செய்தல்.

கே: சிகரெட் பீடி பிடித்தலால் உள்ள கெடுதல் என்ன?

ப: கச நோய்க்கும், புற்று நோய்க்கும் வழி வகுக்கும்.

❀

எம். ரட்னாம்,
மின்ன நாகலைந்தை

கே: எங்கள் வீட்டில் ஒரு நாய் வளர்க்கிறோம். அது சோறு சாப்பிடாமல் தினமும் ரொட்டி கேட்கிறது. அதை சோறு சாப்பிட வைக்க ஒரு உபாயம் சொல்லுங்களேன்!

ப: அரிசிக்காக கோடிக்கணக்கான ரூபாய் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் செய்தி அதற்கும் எப்படியோ தெரிந்திருக்கிறது அதுதான் ரொட்டியைத் தின்கிறது. எனவே உணவு உற்பத்தியைப் பெருக்கி அரிசிப்பங்கீட்டை அகற்றினாலன்றி அதைச் சோறு சாப்பிட வைக்க வேறு வழியே கிடையாது.

கே: இன்றுள்ள அரசாங்கம் ... என்று சொல்லிக் கொண்டு நாளுக்கு நாள் விலையை அதிகரிக்கிறதே இதன் மர்மம் என்ன?

ப: இது பற்றி விசாரணை நடத்தி மர்மத்தைக் கண்டு பிடிக்க ஒரு கமிஷன் நியமிக்க உத்தேசித்துள்ளேன்.

❀

இ. சங்கரப்பிள்ளை,
கொழும்பு-10

கே: "மக்கள் திலகம்" எம். ஜீ. ஆர். அவர்கள், சரோஜாதேவி ஆகியோர் இலங்கைக்கு வந்ததைப் பற்றியும், அதன் பின்பு அவர் கலந்துகொண்ட கலை நிகழ்ச்சிகள் யாவற்றையும் ஏரிக்கரை பத்திரிகைகள் பிரசுரிக்காமல் இருட்டடிப்புச் செய்ததின் மர்மத்தைத் துலக்குவீர்களா?"

ப: இதற்கு மூன்று காரணங்களுண்டு:— (1) 'தவச' பத்திரிகை நிறுவனந்தான் இருவரையும் இலங்கைக்கு அழைத்தது. ஏரிக்கரை நிறுவனமும் தவச நிறுவனமும் ஒரே குடும்பத்துக்கு சொந்தமானவையெனினும் இரண்டுக்கும் இலாபம் திரட்டுவதில் கடுமையான போட்டியுண்டு. அந்தப் போட்டியின் விளைவே இந்த இருட்டடிப்புக்குக் காரணம். (2) ... வின் வீழ்ச்சி ... கொண்டிருப்பதா... படும் ஏரிக்கரைப் பத்திரிகைகளின் ... எம். ஜீ. ஆர், சரோஜாதேவி விஜயம் பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதால் சிங்களவர் மத்தியில் மேலும் வீழ்ச்சியடையக்கூடுமென்ற பயம் மற்றொரு காரணம் (3) எம். ஜீ. ஆர். விஜயம் பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதால், சிங்களவர்கள் மத்தியில் யு. என். பி. க்குப் பாதகமான நிலை ஏற்படும் என்பது ஏரிக்கரையின் முடிவாம். அந்த முடிவு இந்த இருட்டடிப்புக்குப் பிரதான காரணமாகும். இவ்வாறு செய்திகளுக்கு இருட்டடிப்பு செய்தும், செய்திகளை திரித்து வெளியிட்டுமே ஏரிக்கரை தனக்குத் தேவையானபடி பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி வருகின்றது.

❀

கே. ஏ., திருகோணமலை,
திருகோணமலை

கே: திருகோணமலை அரசாங்க அதிபரின் உத்தரவுடன் திருமலை நகராண்மை கழக எல்லைக் கருகில் உள்ள முடிக்குரிய காணிகளில் சிங்கள மக்கள் அத்து மீறி குடியேறியுள்ளார்கள் இது விஷயமாக திருமலை எம். பி. திரு. மாணிக்கராஜா நடவடிக்கை எடுப்பாரா?

ப: இனி அதுபற்றி கவலை வேண்டாம். அந்த அரசாங்க அதிபருக்குக் கல்தா கிடைத்துவிட்டது.

❀

பொன். கென்னடி,
யாழ்ப்பாணம்

கே: பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் விரைவில் மண் கவ்வாரென சோதிட அடிகூறுகிறதே!

ப: இந்த ஆண்டு முடிவு முன்பு வீழ்ச்சியடைவாரென பிரபல சோதிடர் இராமன் ...டம் கூறியிருக்கிறார் இது ...அச் செய்திக்கு ஆதாரமாயிருக்கலாம்.

❀

... கொழும்பு

...ன் குழந்தைகளுக்குத் தாயாகிய என்னை ஒரு வாலிபர் காதலிக்கிறார். அவரை எனக்கும் பிடிக்கிறது. எனக்காக எதுவும் செய்வார். நான் என்ன செய்வது?

ப: நீங்கள் கைம்பெண் அல்லது விவாகரத்து செய்தவராயின் அவரும் உங்களை மணக்கத் தயாராயிருந்தால் அவரைத் திருமணம் செய்து கொள்வதே சாலவும் நன்று.

## தேவை

தமிழ் மாத இதழின் கொழும்புப் பிரதிநிதியாகக் கடமையாற்றுவதற்குத் தமிழபிமானமும் சேவையுணர்வும் மிக்க ஒருவர் தேவை. ஆங்கில அறிவு அவசியம். சம்பளமும், கமிஷனும் கொடுக்கப்படும். பிணைப் பணம் தேவை. இரு நற்சான்றிதழ்களுடன் 15-11-63க்கு முன்னர் விண்ணப்பிக்க. பெட்டி இல. இ. க. T, கே/பா சுதந்திரன், த. பெ. எண் 1182, கொழும்பு-13.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களின் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு படர்கள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் கைத்தறி நிலையங்கள் நிறுவ அரசாங்கம் முயற்சி

## உள்ளூர் உற்பத்தியில் பெரும் புரட்சி

**நாடு பூராவிலும் தேர்தற் தொகுதி யொன்றிற்கு ஏழு கைத்தறி நிலையங்கள் வீதம் ஆயிரம் கைத்தறி நிலையங்களை நிறுவ அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 25,000 மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்று ஆட்சியாளர்கள் நம்புகிறார்கள். இக் கைத்தறி நிலையங்கள் அனைத்தும் ஆண்டொன்றுக்கு 2,22,50,000 யார் துணிகளை உற்பத்திசெய்யும் என்றும் நம்பப்படுகிறது.**

நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை கட்டுப்படுத்தும் முறையிலும், துணி உற்பத்தியைப் பெருக்கும் முறையிலும் நாடு பூராவிலும் கைத்தறி நிலையங்களை நிறுவ கைத்தொழில் அமைச்சு முடிவு செய்துள்ளது. இத் திட்டம் அடுத்த ஆண்டு யூன் மாதம் முடிவிற்குள் முற்றுப் பெற்றுவிடும் என்றும்கைத்தொழில் அமைச்சு வட்டாரங்கள் உறுதியளித்துள்ளன.

தொகுதி ஒன்றிற்கு ஏழு கைத்தறி நிலையங்கள் வீதம் நிறுவப்படவிருக்கும் இத்திட்டத்திற்கான ஆலோசனைகளை அவ்வத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து மாவட்ட அரசாங்க அதிபர்கள் கோ[illegible]யிருக்கிறார்கள். பாரா[illegible]மன்ற உறுப்பினர்களு[illegible] வேண்டிய ஆலோசனை[illegible] வழங்கும் வண்ணம் கா[illegible]யாதிகாரிகளையும் அவ்வப் பகுதி அரசாங்க அதிபர்கள் பணித்திருக்கிறார்கள்.

இக் கைத்தறி நிலையங்களை நிறுவுவதற்கு வசதியான இடங்களையும், அது பற்றிய ஆலோசனைகளையும் 10-11-65க்கு முன்னர் அனுப்பி வைக்கும் வண்ணம் அரசாங்க அதிபர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டியிருக்கிறார்கள்.

தொகுதி ஒன்றிற்கு ஏழு வீதம் நிறுவப்படவிருக்கும் இக் கைத்தறி நிலையங்கள் முதலில் கைத்தறியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முகாம்களாகவே பயன்படுத்தப்படவிருக்கின்றன. இக் கைத்தறி நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் ரூபா 6,000 மானியமாக முதலில் வழங்குவதுடன், ஆறு கைத்தறிகளையும் இலவசமாகக் கொடுத்துதவும்.

இதற்கான கட்டடங்கள் 60 அடி நீளமும் 20 அடி அகல[illegible]ம் உடையனவாக இருப்ப[illegible]டன் இத் திணைக்களத்தி[illegible]ல் கொடுக்கப்படும் மாதி[illegible] படத்திற்கு அமையவே கட்டப்பட வேண்டும், கட்டடங்கள் 20 பரப்பிற்குக் குறையாத அரசாங்க நிலங்களில் அல்லது நன்கொடையாக வளங்கும் நிலங்களில் கட்டப்படுவதையே கிராம முன்னேற்ற சிறு கைத் தொழில் இலாகா வரவேற்கும் என்று தெரிகிறது. இந் நிலங்கள் பிரதான வீதிகளுக்கு அண்மையில் அமைந்திருக்க வேண்டுமென்பதும் ஒரு நிபந்தனையாகும்.

இந்நிலையங்கள் 1966 யூன் திங்களுக்கு முன்னர் முற்றுப் பெறும் என்றும், அதன் பின்னர் பயிற்சியாளர்கள் திரட்டப்படுவார்கள் என்றும் தெரிகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 25 பேர் பயிற்றப்படுவார்கள். இவர்களைப் பயிற்றுவதற்கான பயிற்சியாளர்களை கிராம முன்னேற்ற சிறு கைத்தொழிற் திணைக்களம் கொடுத்துதவும்.

பயிற்சி பெற விரும்புபவர்கள் 15 வயதுக்கு உட்படாதவர்களாக இருப்பதுடன், அவ்வப் பயிற்சி நிலையங்களுக்கு அண்மையில் இருப்பவர்களுக்கே தெரிவின்போது முதலிடம் கொடுக்கப்படும். பயிற்சிபெற விரும்புபவர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அவ்வப் பகுதிக் காரியாதிகாரியுடையதாகும். எட்டு மாதங்களுக்குப் பயிற்சியளிப்பதுடன், பயிற்சிபெறும் காலத்தில் நாளொன்றுக்கு ரூபா 1-25 வாழ்க்கைப்படியாகக் கொடுக்கப்படும்.

இக் கைத்தறி நிலையங்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பயிற்சிபெற்ற பின்னர் இந்த நிலையங்கள் அருகில் உள்ள கூட்டுறவுக் கைத்தறி நிலையங்களுடன் இணைக்கப்படும்.

பயிற்சிபெற்று வெளியேறுபவர்களுக்கு ஒவ்வொரு கைத்தறி வழங்கப்படும். அவர்கள் கூட்டுறவு முறையில் தொடர்ந்து தங்கள் தொழிலை மேற்கொள்ளலாம்.

19,000 மேலதிக கைத்தறிகள் பயிற்சி பெற்றவர்கள் தொடர்ந்து தொழில் நடாத்துவதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடாத்த, வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்க அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். இவற்றிற்கான நிதி ஒதுக்கும் பொறுப்பும் அவர்களையே சார்ந்ததாகும்.

இத்திட்டம் பற்றிய மேலதிக விபரங்களை கிராம முன்னேற்ற சிறு கைத் தொழில் அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

# அண்ணா விழா

—ஒரு விமர்சனம்—

அறிஞர் அண்ணாதுரையின் 57 வது பிறந்த தின விழா கொழும்பு விவேகானந்த மாவித்தியாலய மண்டபத்தில் திரு. ஆ. நடராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது கருத்துரை வழங்கியவர்களில் கடைசியாக இடம் பெற்றவர் சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினமாகும். அவரது சுகவீனத்துக்குப்பின் அவர் பங்குபற்றிய முதல் நிகழ்ச்சி அண்ணா விழாவே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதைத்தொடர்ந்துஅண்ணா விழாவிற்கு மேலும் சிறப்பளிப்பதாக இடம் பெற்றிருந்த திரு. கே. என். நவரத்தினத்தின் மாணவிகளின் நாட்டிய விருந்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மூன்றே மூன்று நடன நிகழ்ச்சிகள் தான் இடம் பெற்றிருந்தன வெனினும் முத்தாது அமைந்திருந்தன. நடன நிகழ்ச்சிகளில் முதலாவதாக செல்வி. கஸ்தூரி சின்னையாசிவம் என்ற மாணவியின் தமிழ்த்தாய் வணக்க அபிநயம் மிகவும் அற்புதமாக அமைந்து அவ்வரது பாராட்டையும் பெற்றது. இதைத்தொடர்ந்து செல்வி. கலாதேவி நடராசாவின் தில்லானாவும் பாராட்டக் கூடியதாக இருந்தது. கடைசியாக இடம் பெற்ற 'பாம்பாட்டி நடனம்' மிகவும் தான்மை வாய்ந்ததெனினும் இதை வெகு திறம்பட ஆடிய செல்வன் சிறீஸ்கந்தா கந்தசாமி, செல்விகள். கலாதேவி நடராசா, உமாராணி நடராசா ஆகியோர் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

விழாவைச் சிறப்பாக்கிய இன்னுமொரு அம்சம் அண்ணாமலர் என்ற நூல் வெளியீடாகும். அனைவரும் வியக்கத்தக்க வகையில் மூவர்ண அட்டைகொண்ட அருமையான மலர் ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். அண்ணாவின் நூல்களிற் சிலவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இவ்வளவு சிறப்பான அம்சங்களைக்கொண்ட இப்பெருவிழாவை ஒரு இளைஞரான வேலணை வீரசிங்கம் நன்னின்று நடத்தி வைத்தார் என்பதை எண்ணும் போது அவருக்கே ஒரு விழா எடுத்தாலும் மிகையாகாது என்று துணிந்து கூறலாம்.

—'மதி'

## மூவர்ண வேட்டி


இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் சார்பில் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் பிறந்த தினத்தன்று விற்பனைக்கு விடவிருந்த மூவர்ணக் கரைகளையுடைய வேட்டிகள் எதிர்பாராத முறையில் உரிய காலத்திற் கிடைக்கவில்லையென்று கிளைப் பொருளாளர் திரு. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். அடுத்த மாத ஆரம்பத்தில் இவ் வேட்டிகள் விற்பனைக்குக் கிடைக்குமென்றும், காலதாமதத்திற்கு உற்பத்தியாளர்களே காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மங்கையர் விரும்பும் மகோன்னத 'மினேர்வா'

சிறப்பும் வனப்பும் மிக்க சிறந்த

தையல் மெஷின்

இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



Minerva 126

நுண்ணிய தயாரிப்பு, நாசுக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும், அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

516, ஸ்கின்னர்ஸ் ரோடு, தெற்கு.

கொழும்பு-10.

டெலிபோன் : 4261-2, 3.

# கிராம முன்னேற்றத்துக்கு மக்களே காரணம்

## கட்டைக்காட்டில் கா.பொ.இ.பேச்சு

ஓர் ஊர் காடாயிருந்தாலென்ன, மேடாயிருந்தாலென்ன, பள்ளமாயிருந்தாலென்ன அவ்வூரில் வாழும் மக்கள் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வூர் முன்னேற்றமடையும், என்று 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஔவையார் கூறியுள்ளார். உங்கள் கிராமம் போக்குவரத்து வாய்ப்புகளில் குறைந்த கிராமமாயிருந்தாலும் உங்களுடைய ஒத்துழைப்பால் இந்த கிராமத்தை விரைந்து முன்னேற்றமடையச் செய்யலாம், என்று கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் பளைப் பகுதியில் உள்ள கட்டைக்காடு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தையும், நூல் நிலையத்தையும் திறந்து வைத்து பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் 'இக்கிராம முன்னேற்றச் சங்க வாயிலாக, குடி[illegible] தொடக்கி நடத்த வேண்டுமெனவும், வளர்ந்தோர் கல்வி வகுப்புகளை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இயக்கச்சி முள்ளியான் வீதி விரைவில் திருத்தப்படுமென்றும் விரைவில் இயக்கச்சி முள்ளியான் வீதி வரையில் பஸ் சேவை தொடங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். விரைவில் மாவட்ட சபைகள் அமைக்கப்படுமென்றும், அம் மாவட்ட சபைகள் மூலம் எங்கள் அலுவல் பலவற்றை நாங்களே திட்டமிட்டுச் செய்ய முடியுமென்றும் கூறினார். இக்கிராமத்தில்வாழும் மக்கள் எல்லோரும் சிறந்த அரசியல் அறிவு படைத்தவர்களாதலால் இவர்கள் எல்லோரும் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வருகிறார்களென்றும் இறுதியில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பளை காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை, செந்தமிழ்ச் செல்வன் சேனாதிராசா ஆகியோரும் மற்றும் பலரும் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகித்திய மசோதா மீது "தவச" பாய்ச்சல்

## தமிழ் வளர்ச்சிக்கு இடம் அளித்ததால் அநீதியானதாம்

**"உ** ணவு ஏராளமாக இருக்குமிடத்தில் மென்மேலும் உணவைக் கொண்டுவந்து கொட்டுவதைப் போல புதிய சாகித்திய மசோதாவால் தமிழ் மொழி வளர்ச்சிக்கு மென்மேலும் இடமளிக்கப்பட்டுள்ளது. இது அநீதியாகும். சிங்களத்துக்கு நாட்டில் முதலிடம் கொடுக்கப்படாத ஒரு மசோதா உண்மையில் ஒரு மசோதா வன்று. அது ஓர் அக்கிரமமாகும்" என்று "தவச" பத்திரிகை 27-10-65ம் இதழில் எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது**

'தவச'த் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது!—

"புதிய சாகித்திய மசோதாவில் சிங்கள மொழிக்கு ஆறு குழுக்களும் தமிழுக்கு ஆறு குழுக்களும், முஸ்லிம்களுக்கு ஒரு குழுவும் நியமனம் செய்யப்படும் என்ற விஷயம் அம்பலமாகியுள்ளது.

தமிழ்க் குழு ஆறும் முஸ்லிம் குழு ஒன்றும் ஒரே மொழியை அடிப்படையாகக் கொண்டவை. எனவே இதனால் ஆறு சிங்களக் குழுக்களும் வலுவிழந்துவிடும்.

தமிழ் சாகித்திய வளர்ச்சிக்காகப் பாடுபட இன்னும் எத்தனையோ தமிழ் அரசுகளும்திருகுர்-ஆன் சாகித்திய வளர்ச்சிக்காக எத்தனையோ முஸ்லிம் அரசுகளும் இருக்கின்றன. ஆனால் சிங்கள சாகித்திய வளர்ச்சிக்காக உலகிலுள்ள ஒரே ஒரு நாடு இச் சிறிய இலங்கை மட்டுமே. இதனை நினைக்கும் போது பெருந் துக்கம் ஏற்படுகிறது.

தமிழ் வளர்ச்சியடைந்துள்ள மொழி வளர்ச்சி பெற்ற இலக்கியம் அதற்கு உண்டு. தென்னிந்தியாவில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகத் தமிழறிஞர்கள் செய்த முயற்சியின் விளைவாக தமிழ் மொழியில் சகல அம்சங்களையும் கொண்ட அகராதிகள் பல எழுதப்பட்டுள்ளன. சிங்களத்தில் ஒன்று கூட கிடையாது. இத்துறையில் சிங்களம் இன்னும் அநாதையாகவே இருக்கிறது".

## சிங்கள இதழ்களில்...

### 'இலங்கை தமிழருக்கு சுதந்திரம் பெற்றுத் தருவோம்'

—எம். ஜி. ஆர்.

'இந்திய திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடிக்கொண்டிருக்கிறதென்றும், எதிர்காலத்தில் இப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு மட்டக்களப்புப் பிரதேச மக்களின் உதவியைத்தான் எதிர்பார்ப்பதாகவும் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மட்டக்களப்பில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் பலத்த கரகோஷத்துக் கிடையே கூறினார்' என்று 'எத்த' பத்திரிகை (27-10-65) 'ராமச்சந்திரன் அரசியலில் இறங்குகிறார்' என்ற தலைப்பின் கீழ் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச்செய்தி மேலும் கூறுவதாவது:—

'இவ்வாறு சிறிய அரசியற் பிரசங்கமொன்றை நிகழ்த்திய அவர் கறுப்பு, சிவப்பு நிறங்களைக் கொண்ட தி. மு. க. இயக்கத்தின் கொடியை கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

(சிகப்புக் கோடிட்ட கறுப்புச் சால்வை அணிந்து கொண்டே அவர் இந் நாட்டில் பவனி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஜே! அண்ணுதுரைக்கு ஜே! இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்க! என்ற கோஷங்களுடன் அவர் தமது பிரசங்கத்தை முடித்தார்.

இக் கூட்டத்தில் தமிழரசு எம். பி. திரு. இராசதுரை பேசும் போது தி. மு. க. வும் தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றன என்றும், எனவே தி. மு. க. தலைவர்களிலொருவரான திரு. ராமச்சந்திரனை வரவேற்பதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்.'

### ஆபத்து பிக்குவின் எச்சரிக்கை

'செருவாவிலை பிரதேசத்திலும் திருமலை முதல் கந்தளாய் வரையுள்ள பிரதேசத்திலும் சிங்களவர்களைக் குடியேற்றி சிங்களவர்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துங்கள்! இல்லையேல், கிழக்கு மாகாணத்தில் சிங்கள பௌத்தர்களுக்கு இடமில்லாது போய்விடும்' என்று கிழக்கு மாகாண நாயக்கதேரோ, சிறி சுமேதங்கார தேரோ பிரதம மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

'கிழக்குப் பகுதியில் தமிழரசு வாதிகள் திட்டமிட்டு நடத்தும் பௌத்த-எதிர்ப்பு சிங்கள—எதிர்ப்பு நடவடிக்கையின் விளைவாக, இந்தப் பிரதேசத்தில் எதிர்காலத்தில் ஒரு சிங்களவர்கள் கூட இருக்கமாட்டார்கள் கடந்த காலத்தில் சிங்கள பௌத்தர்களின் ஆதிக்கத்தை வளர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை யெல்லாம் அழித்து சிங்களவர்களைத் துடைத்தெறியும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையை உடனே தடுக்க வேண்டும் என்று அவர் தமது மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

—எத்த (22-10-65)

### சிங்களத் தொழிலாளர் வேலை நீக்கம்

'திருகோணமலைத் துறைமுகத்தில் இரு தொழிற் சங்கங்களுக்கிடையே அண்மையில் ஏற்பட்ட மோதுதலுக்குப்பின்னர் அங்கு வேலை செய்யும் சிங்களத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும் திட்டமொன்று அமுல் நடத்தப்படுகிறது.

திருமலைத் துறைமுகத்தில் வடிமவல் கம்பெனியில் கடமையாற்றும் சிங்களத் தொழிலாளர்களுக்கு கப்பல்களில் வேலை கொடுக்க மறுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

சிங்களத் தொழிலாளர்களைத் திருமலைத்துறை முகத்திலிருந்து அப்புறப்படுத்தும் வகுப்புவாத நடவடிக்கைக்கு தனிப்பட்ட கன்டிராக்டர்களும், தமிழரசுக் கட்சியும் உதவி அளிப்பதாகக் கூறப்படுகிறது'

—ஜனதின (21-10-65(

### சிங்களக் கடிதங்களுக்கு ஆங்கிலத்தில் பதில்

'இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அரசாங்கத் திணைக்களங்களுக்குச் சிங்களத்தில் அனுப்பும் கடிதங்களுக்கெல்லாம் இப்பொழுது ஆங்கிலத்தில் பதில் கிடைப்பதால், அங்கு பணியாற்றும் சிங்கள லிகிதர்களின் நிலை சங்கடமாகியுள்ளது.

குறிப்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சிங்களத்தில் அனுப்பப்படும் கடிதங்களுக்கெல்லாம் ஆங்கிலத்தில் பதில் கிடைக்கின்றன. இதுகாப்புறுதி கூட்டுத்தாபனத்திலுள்ள சிங்கள எழுது விளைஞர்களுக்குப் பெரும் தலையிடியாகியுள்ளது. இந்த நிலைமை நீடித்தால் சிங்களக் கடிதங்களுக்குத் தமிழில் பதில் கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் [illegible] கின்றனர்.'

—ஜனதின (21-10-65)

## சிங்களப் படங்களும் தமிழரிடம் சரண்

### எம். ஜி. ஆர்— ஜே. ஆர். பேச்சு

தவச கம்பெனியின் அழைப்பின் மீது இங்கு வந்துள்ள தி. மு. க. வின் தலைவர்களிலொருவரான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நுாரளையில் நடைபெற்ற அழகுராணிப் போட்டி விழாவில் கலந்து கொண்டு திரும்பும் வழியில் கண்டிக்கு வந்து குவீன்ஸ் ஓட்டலுக்குச் சென்றார். அப்பொழுது அந்த ஓட்டலில் ராஜ்ய மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இருப்பதைக் கண்டு பலர் ஆச்சரியமடைந்தனர். பின்னர் திரு. ராமச்சந்திரனும் அவரைச் சார்ந்தவர்களும், திரு. ஜே. ஆர். ஜயவர்தனவும் குவின்ஸ் ஓட்டலின் மாடியில் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர்.'

—எத்த (28-10-65)

'திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், திரு. ஜே. ஆர். ஜயவர்தனவும் கண்டி குவீன்ஸ் ஓட்டலில் இரகசியமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கும் போது அவர்களைப் படமெடுக்கச் சென்ற முதலாளிப் பத்திரிகைகளின் படப்பிடிப்பாளர்களைத் திரு. ஜே. ஆர். துரத்தியடித்தார். தங்களுக்கு இடைஞ்சல் செய்யாமல் வெளியே செல்லும்படி அவர்களிடம் திரு. ஜே. ஆர். கூறினர். ராஜ்ய மந்திரி திரு. ஜயவர்தன எம். ஜி. ஆர். அவர்களுடன் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர்.'

—ஜனதின (28-10-65)

### ஆத்திர மூட்டினராம்

"கடந்த வார இறுதியில் கொழும்பில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் மாநாட்டை யொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில் கோஷமிட்ட கோஷங்களைப் பார்க்கும் போது வகுப்புவாதத்தைத் தூண்டி விடுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

"சிறிமா எங்களைப் போகச் சொன்னர்! டட்லி எங்களை இருக்கச் சொன்னர்" என்ற கோஷங்களைக் கொச்சைச் சிங்களத்திலும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவமானப்படுத்தும் கோஷங்களைத் தமிழிலும் அவர்கள் ஊர்வலத்தில் கோஷித்துக் கொண்டு சென்றதையும், ஊர்வலத்தின் போது அவர்கள் நடந்து கொண்ட முறையையும் பார்க்கும் போது, இதற்கு முன்பு என்றுமே கொழும்பில் நடத்தப்படாத தோட்டத் தொழிலாளர் மகாநாட்டை இம்முறை கொழும்பில் நடத்தியது ஆத்திர மூட்டும் செயலாகும் என்று சுதந்திரக் கட்சி தொழிற் சங்க சம்மேளனத்தின் உதவித் தலைவர் திரு. ஐ. சி. பெரேரா கூறினர்".

—எத்த (20-10-65)

'யு. என். பி—தமிழரசு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் சிங்கள சினிமாப் படத் தயாரிப்பாளர்களுக்கு ஒரு பெரிய அடி விழுந்துள்ளது.

தற்போது சிங்களப் படங்கள் பெரும்பாலும் தமிழர்களால் தயாரிக்கப்படுவதாலும், இலங்கையில் சினிமாத் தியேட்டர்கள் பெரும்பாலும் தமிழர்களுக்குச் சொந்தமாயிருப்பதாலும், அவர்கள் தயாரிக்கும் படங்களை கூடிய விரைவில் திரையிடுகின்றனர். ஆனால் சிங்களவர்களால் தயாரிக்கப்படும் படங்களைத்திரையிடுவதைத் தாமதப்படுத்துகின்றனர்.

சிங்களவர்களால் தயாரிக்கப்பட்டு திரையிடத் தயாராகப் பல படங்கள் இருக்கிறதெனினும், தமிழர்களால் தயாரிக்கப்பட்ட சிங்களப்படங்களே முதலில் திரையிடப்படுகின்றன. இதனால் சிங்களத் தயாரிப்பாளர்கள் சினிமாத் தொழிலையே கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது'

—ஜனதின (21-10-65)

### நடனத்தைக் நையாண்டி செய்தனர்?

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெரும் புகழ் பெற்று விளங்கும் சித்தவெல குணயாவின் கண்டியர் நடனத்தை முதற்தடவையாகக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு சுகததாச ஸ்டேடியத்தில் ஹூ...ஹூ எனக் கூச்சலிட்டு நையாண்டி செய்தனர்.

எம். ஜி. ராமச்சந்திரன் கலந்துகொண்ட இந்தக் கலை நிகழ்ச்சியின் ஓர் அம்சமான திரு. குணயாவின் கண்டியர் நடனத்தையே இவ்வாறு கூச்சலிட்டு நையாண்டி செய்தனர். இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக கண்டியர் நடனத்துக்கு இத்தகைய அவமானம் ஏற்பட்டது பற்றி அனைவரும் கவலைக் கொண்டுள்ளனர்.

—ஜனதின (25-10-65)


**ஜீ. சீ. ஈ. (சா. த.)**

பரீட்சையில் தேற உதவி புரியும்.

பட்டதாரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாவிடை பயிற்சிக் கோவைகள்.

| | |
|---|---|
| தமிழ் பாஷை | 5-00 |
| எண் கணிதம் | 5-00 |
| குடியியல் | 5-00 |
| உடனலவியல் | 5-00 |
| சரித்திரம் | 5-00 |
| இஸ்லாம் | 5-00 |
| பொது அறிவும் விவேகமும் | 5-00 |
| 101 கட்டுரைகள் | ரூ. 7-50 |

**சர்வகலாசாலை போதனு கழகம்**

(U T I)

540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையர் சங்கம்

கருத்துமேடை

# மேலைநாட்டு நாகரீக மோகம் எமக்கு வேண்டாம்

மேலை நாடுகளிலிருந்து வரும் படங்கள் பெரும்பாலும் ஆபாசப் படங்களாகவே இருக்கின்றன. வியாபாரத்துக்காக—பணம் பெருக்கும் ஒரே நோக்கை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் மேலைநாட்டுப் படங்களில் ஆபாசம் புகுத்தப்படுவதற்குக் காரணம், அந்நாட்டின் நாகரீகமேயாகும். முற்றிலும் மாறுபட்ட நாகரீகமுடையோர்களான நாம் இப்படங்களைப் பார்த்துவிட்டு நமது பண்பாட்டுக்கு முரணாக நடக்க எத்தனிக்கின்றோம்.

கொள்ளைக் கூட்டத்தினர் கொள்ளையடிக்க, முடிச்சுமாறிகள் பொருட்களைத் திருட புதுப் புது மார்க்கங்களைக் கண்டு பிடித்து அவற்றைத் திரையில் காண்பிக்கின்றனர். இதனைப் பார்த்துவிட்டு உள்ளூரிலேயே திருடர்களும் முடிச்சுமாறிகளும் தம்மைத் தயார் செய்து கொள்ளுகின்றனர்.

இதேபோன்று மதுகுடித்துவிட்டு மங்கையருடன் கூடிக் குலாவி மகிழ்ந்து கூத்தடிப்பதையும் திரையில் காட்டும் போது, அவ்வண்ணமே தாங்களும் நடக்க வேண்டும் என்ற எண்ணமும் அவாவும் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுவது இயற்கையே.

### பணமாகும் ஆபாசம்

மேற்கத்தைய நாடுகளில் இரவு வேளைகளில் தான் கேளிக்கைகள் ஆரம்பமாகின்றன. ஆபாச நடனங்களும், அநாகரீக விளையாட்டுகளும் விடியும் வரை தொடரும். இவற்றையெல்லாம் அப்படியே படமாக்கி பணமாக்கும் முதலாளிமார் அவ்

### ஆபாச சினிமா ஆபத்தானதா? [2]

செல்லாம் அதிகரித்துவிட்டனர். இத்தகைய படங்கள் இலங்கையில் கடந்த சில

**'ராஜேஸ்'**
கல்லடி உப்போடை

ஆண்டுகளில் மிகவும் வேகமாகப் பரவத்தொடங்கி விட்டன. எந்த விதமான கட்டுப்பாடுமின்றி வயோதிபர்களும் இளைஞர்களும் மாணவ மாணவியரும் இப்படங்களைப் பார்க்கச் சென்று விடுகின்றனர்.

இத்தகைய ஆபாசப் படங்கள் திரையிடப்படும் போது, கொழும்பிலுள்ள பாடசாலைகளுக்கு பின்னேர வகுப்புகளில் மாணவர்கள் தொகை குறைந்துவிடுவதுண்டு. சிலவேளைகளில் பகல் 2-30 மணிக்காட்சிகளில் மாணவ மாணவிகளே குவிந்திருப்பர். வயது வந்தவர்களுக்கு என்று விதிக்கப்படும் கட்டுப் பாட்டுக்கு அங்கே எவரும் மதிப்பளிப்பது கிடையாது.

### மெட்டினிக்கு மாணவர்கள்

சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பாடசாலைகளில் நடைபெறும் சங்கீத வகுப்புக்களுக்காகச்செல்லுவதாக வீட்டில் கூறிவிட்டு 'மெட்னி'க் காட்சிகளுக்குச் செல்லும் மாணவிகளையும் கண்ணாரக் கண்டுள்ளோம். இத்தகைய இரவுக் காலக் கேளிக்கைக் காட்சிகளைக் காணும் போது இளைஞர்கள் இதயங்களில் எழும் விபரிக்க முடியாத ஆசைகளின்முடிவு எங்கே கொண்டு செல்லும் என்பதனை நாம் நினைக்கவே நடுக்கம் ஏற்படுகின்றது.

வெளிநாட்டிகளிலும் ஆபாசமான படங்களைச் சித்தரிப்பதை அனுமதிக்கலாகாது. இவைகளைப் பார்க்கும் சின்னஞ்சிறு குழந்தைகளின் உள்ளத்திலும்தேவையற்ற உணர்ச்சிகள் கிளர்ந்தெழுகின்றன.

திரைப்படங்களிலு, சுவரொட்டி விளம்பரங்களிலும் புத்தகங்களிலும் ஆபாசம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்னும் கிளர்ச்சிக்கு மங்கையர் அனைவரும் ஒத்துழைப்புத்தரவேண்டும்.

# மறந்து வாழ முடியாவிடில் இருவரையும் மணக்கட்டும்

கேள்வி 1.

நான் கடந்த மூன்று வருடங்களாகக் காதலித்து, மணம் முடிப்பதாகக் கூறிக் கொண்டிருந்தவருக்கு அவருடைய தாயார் பலவந்தமாக வேறோர் பெண்ணை மணமுடித்து வைத்து விட்டார். என்னை அவர் மறக்கவுமில்லை. என்னாலும் அவரை மறக்க முடியாது. தவிக்கும் எங்கள் இரு உள்ளங்களுக்கும் சாந்தி ஏற்பட வழியுண்டா?

சந்தர்ப்பங்கள் சதிபுரிந்து விடுவதனால், இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்து விடுகின்றன. எப்படியோ மறந்து புதுவாழ்வு தொடங்க இருவரும் முயற்சிப்பதுதான் நல்லது. உங்கள் காதலுக்கு சக்தி இருக்குமானால் உங்களையும் சேர்த்து இருவருடனும் வாழ்க்கை நடத்தலாமே!

### மகளின் காதல்

கேள்வி 2.

எனது மகள் அவளுக்கு விருப்பிய வாலிபனைக் காதலிக்கின்றாள். அந்த விசயம் எனக்குத் தெரிந்தும் மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டு இருக்கிறேன்.

செல்வி சி கே வி ள்
அக்காவிடம் ல ள் க

எனது மகள் காதலிக்கும் வாலிபனை எனக்கோ விருப்பம் இல்லை. இதற்குதான் செய்யவேண்டிய காரியம் என்ன?

—இ. எஸ். சி—சே
திருகோணமலை.

உங்கள் மகளுக்குத் தகுந்த புத்திமதியைக் கூறுங்கள். மகளின் ஆசை நிறைவேறுவது அவளுடைய வயதையும் பருவத்தையும் உளப் போக்கையும் பொறுத்தது. நீங்கள் உங்கள் மகளின் காதலனை வெறுப்பதற்கான காரணம் யாதோ? தங்கள் கேள்வியை சற்றுத் தெளிவாக எழுதிக் கேட்டால் விளக்கமான பதிலைத் தருகிறோம்.

### துணிவு வேண்டும்

கேள்வி 3.

நான் ஒருவரை விரும்புகிறேன் அவரும் என்னை விரும்புகிறார். ஆனால் என் தோழிகள் பலர் அவரைப்பற்றி அவதூறு கதைக்கின்றனர். எனக்கு அவரில்லாவிட்டால்வாழ்வேஇல்லை. அவர் ஒரு இந்து வாலிபர். இந்நிலையில் எனக்கு மனதில் நிம்மதியும் மகிழ்ச்சியும் மறைந்து விட்டது. உண்மையிலே அவர் என்னை [illegible] அறிந்து கொள்வது. தயவுசெய்து எனக்குப் பதில் அளிப்பீர்களா?

'சுதி'
நுவரெலிய

இந்து முஸ்லீம் கலப்புத் திருமணத்தை வரவேற்க தமது சமூகம் தயாராயில்லை. மேலும் அவரின் விருப்பத்தையே நீங்கள் அறியவில்லை. அவர் விரும்பி நீங்கள் துணிந்தால், யார்தான் தடுக்க முடியும்.

### தடுப்பு எடுங்கள்

கேள்வி 4.

எனக்கு வயது 24 இருமணமாகி ஆணும், பெண்ணுமாய் இருகுழந்தைகள் உள்ளனர். எங்கள் வறுமை நிலையை உத்தேசித்து நான் என் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்கிறேன். ஆனால் என் கணவர் அப்படியல்ல. இதனால் எங்கள் குடும்பத்தில் அடிக்கடி சண்டையும், மனஸ்தாபங்களும் உண்டாகின்றன. தயவு செய்து இதை நீக்கி எங்கள் வாழ்க்கையில் சந்தோஷம் நிலவ ஓர் வழி சொல்லுங்கள்.

திருமதி. ராஜா
மட்டுநகர்.

கணவனின் மனம் கோணாது நடப்பதே புத்திசாலித்தனம். கர்ப்பத்தடை செய்து கொள்ளுவது இந்நாட்களில் வெகு சுலபமானது. இதனால் எதுவித இடையூறும் ஏற்படாது. இருவரில் எவராவது ஒருவர் கர்ப்பத்தடையைச் செய்து விடுங்கள். இருவருடைய கவலையும் தீர்ந்துவிடும்.

### சில கேள்விகள்

செல்வி அக்கா,
சுதந்திரன்
த. பெ. எண் 1185
கொழும்பு.

குடித்தனக் குறிப்பு

# ஜோர்ஜட் சேலை சலவை முறை

—செல்வி நளினி நாதன்—

நீரில் நனைந்ததும் பொதுவாக ஜோர்ஜட் சேலைகள் சுருங்கிவிடும் தன்மை படைத்தவை. எனவே சேலையை நனைக்கு முன்னர், சேலையின் அளவை ஒரு நீண்ட உருளைத் தடியில் குறித்துக் கொள்ளவும். (சேலையின் அளவு என்பது இங்கே சேலையின் அகலத்தையே, நீளத்தையல்ல.)

சவர்க்காரக் கரைசலில் சேலையை மெதுவாகக் கசக்கிப் பிழியவும். அடித்துத் தோய்ப்பதையோ அல்லது பிரஷ்ஷினால்உரசுவதையோ தவிர்க்கவும். நீரில் நன்கு அலம்பியபின், ஒரு துவாலையில் வைத்து இலேசாக அழுத்திப் பிழியவும். பின்னர் உருளைத்தடியில் சுற்றவும்.சுற்றும் போதுசேலையை முன்பு கணித்த அளவிற்கு இழுத்துச் சீர்படுத்த மறக்க வேண்டாம்.

இப்படிச் செய்வதால் சுருங்கிய சேலை பழைய அளவிற்குக் கொண்டு வரப்படுகின்றது—ஆனால், இழுக்கும் போது எச்சரிக்கையாயிருக்காவிடில் சேலை கிழிந்து விடும்.

சேலை முழுவதையும் தடியில் சுற்றி நேர்ப்படுத்தியபின், சிறிது நேரத்துக்குத் தடியினின்றும் சுழற்றி உலரவிடலாம். இப்படிச் சலவை செய்யப்பட்ட சேலையை இலேசாக இஸ்திரி செய்யலாம். சேலையைச் சீக்கிரம் முடிப்பதற்கு 50 அங்குல நீளமும், 2 அங்குல விட்டமும் கொண்ட உருளைத் தடிகளைத் தயார் செய்தால் உபயோகமாயிருக்கும்.

கம்பளி சலவை முறை

# காணாதவள்

நீண்ட கதை

'அவளைக் காணவில்லை. ஐயோ...! எங்கே போயிருப்பாள்? நான் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் போது கதிரையிற்தானே இருந்தாள். அம்மாவும், தங்கையும் சமையலறையில் இருக்கும் பொழுதுதானே அவளைக் கதிரையில் இருந்துவிட்டுச் சென்றேன். கடவுளே...! இது என்ன சோதனையப்பா...!...'

'எத்தனை தொல்லைகளுக்கு மத்தியில் நண்பர்களையும் வெறுத்துக்கொண்டு கடத்தி வந்தேனே......! ஒரு வேளை அவள் மீதே கண்ணிவைத்திருந்த குமார் எனக்குத் தெரியாமல் வந்து கூடத்தில் கதிரையில் இருந்த 'அவளை'க் கடத்திக் சென்றிருப்பானோ......?

'சீ.....சீ..... அப்படியென்றால் வீட்டில் இஞ்சி சாப்பிட்டுக்கொண்டா இருந்தார்கள்?

எனது உள்ளத்தையும், உணர்ச்சியையும், தூண்டிவிட்டு அவள் எங்கே மறைந்து விட்டாள்?'

விசர் பிடித்த நாய்போல் கோபால் அவளைத் தவற விட்டு அந்த வீட்டையே பிரளயமாக்கிக் கொண்டிருந்தான்.

கோபாலின் தாய்க்கு ஒன்றுமே புரியவில்லை. தங்கைக்கும் புரியவில்லை. அவளை அவன் கொண்டுவந்ததும் தெரியாது. இப்படியிருக்கையில் கோபால் தன் ஆத்திரத்தை யெல்லாம் சேர்த்து வீட்டுப் பெருட்களை வாரியிறைத்துக் கொண்டிருந்தான். ஒரே ஒரு ஆசைமகன் கோபால். ஆதலால் தாய் பதறினாள் அவளும், மகளுமாகச் சேர்ந்து தேடாத இடமில்லை. பாவம்......! எங்கே தேடுவார்கள்? 'என்ன நீன்பண்டமா, பக்கத்து வீட்டிலே விசாரிக்க...... என்று பக்கத்து வீட்டிலும் விசாரிக்கவில்லை.

கோபாலின் மனக்கண்முன் அவள் வந்து நர்த்தனம் புரிந்தாள். பாவம் கோபால்...... கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லை.

'மாமா!...... மாமா......!' என்ற பக்கத்து வீட்டுச்சிறுமி பாமாவின் குரல் கேட்டுக் கோபால் திடுக்கிட்டான். 'மாமா...! 'தம்பி சுகு, உங்கட கதிரையில் இருந்த ஒரு புத்தகத்த எடுத்து விளையாடிட்டுஇருந்தான். பறிச்சிட்டு வந்தன்' என்று 'அவளை'க் கொடுத்தாள். ஆம்... அது 'அவள்' என்னும் நாவல் தான்.

நண்பன் ஒருவன் வைத்திருந்த நாவலை அவனுக்குத் தெரியாமற் களவாக எடுத்துவந்தான் கோபால். இப்போது 'அவள்' அவளாக இல்லை. தம்பி சுகு தன்னுடைய கைவரிசையைக் காட்டியிருந்தான். ஆம்! 'அவள்' என்னும் நாவலின் ஒற்றைகளைக் கிழித்து விளையாடியிருக்கின்றான்.

செல்வி. நேர். இராசம்மா

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சியை நோக்கி திட்டங்கள் வேண்டும்

## வாழ்க்கைத் தரம் உயர்ந்து வாழ்க்கைச் செலவு குறைய இதுவே சிறந்த மார்க்கம்

**வாழ்க்கை உயர்வை முதல் நோக்கமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டங்கள் போடும் முறை உடன் மாற்றியமைக்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சியை முதல் நோக்காகக் கணிக்கும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் வாழ்க்கைச் செலவு சிர்பெற்று வாழ்க்கைத் தரம் சிறப்புறும். கடந்த கால ஆட்சியாளர் இந்த உண்மையைப் புறக்கணித்து நடந்தமையினலேயே தோல்வி கண்டார்கள். தேசிய அரசாங்கம் உருவாக்கப் போகும் 'ஐந்தாண்டுத் திட்டம்' பொருளாதார வளர்ச்சியை முதல் நோக்காகக் கொண்டதாக அமையும் என்று நம்புகிறோம்.**

வாழ்க்கை உயர்வை முதல் நோக்கமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வதா அல்லது பொருளாதார வளர்ச்சியை முதல் நோக்காகக் கொண்டு இறுதியில் வாழ்க்கைத் தர உயர்வை எதிர்பார்ப்பதா? என்ற கேள்வியை, இலங்கைப் பொது மக்களையும் அரசியலாரையும் பார்த்துக் கேட்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்களையும், அரசியல்வாதிகளையும் பொறுத்த வரையில் அவர்கள் வாழ்க்கைச்செலவு உயர்ந்துவிட்டது, அதைக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

கடந்த அரசாங்கம் சென்ற தேர்தலில் தோல்வியுற்றமைக்கும் இதுவே காரணமாகும். தேர்தற் படிப்பினையை நன்கு மனதிற் படியவைத்த தேசிய அரசாங்கம் தனது அரியணை உரையில் "வாழ்க்கைச் செலவைக் குறைப்போம்" என்று கூறியது. அரியணை உரையிற் கூறப்பட்டதற்கு ஏற்ப வரவு செலவுத் திட்டத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான பல வழிகள் கூறப்பட்டன.

### விலைக் கட்டுப்பாடு

பொது மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் பாவனைப் பொருட்கள், உணவு வகைகள் இவற்றின் விலையைக் கட்டுப்படுத்தி, தேவைக்கேற்ற விகிதத்தில் கிடைக்கச் செய்ய அரசாங்கம் முயற்சியெடுக்கும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் உறுதி கூறப்பட்டது. இதன் முதற்படியாக சில அன்றாடப் பாவனைப் பொருட்களின் தீர்வைகள் குறைக்கப்பட்டு, விலைகள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

இந்த வகையில் பொது மக்களின் அன்றாடத் தேவைகளில் அதி முக்கியமான மண்ணெண்ணெயின் விலை குறைக்கப்பட்டது. இதை யிட்டு சாதாரண ஏழைப் பொது மக்களிலிருந்து வசதி படைத்தவர்கள் வரை சந்தோசப்பட்டார்கள். அரசாங்கத்தின் முயற்சியைப் பாராட்டி வரவேற்றார்கள். ஆனால், மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் மறைய முன்னர் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு கிராமப் புறங்களில் ஏற்பட்டது.

மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்ய முடியாத சரிபொருட் கூட்டரவு, மண்ணெண்ணெய் விலையின் கட்டுப்பாட்டு விலைத் திட்டத்தை நீக்கியது. இதனால் கிராமப்புற மக்கள்

*பூங்குன்றன்*

மண்ணெண்ணெய் விலையில் ஏற்பட்ட மாற்றத்தினால் நன்மையடையவில்லை என்பது தெளிவாகிறது.

### பணம் படைத்தவர்கள்

இதே போன்று பல உண்மைகளை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. மக்கள், வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டது. அதற்கேற்ப வருவாய் கிடைக்கவில்லையென்கிறார்கள். பொது மக்கள் இவ்வாறு கூறுவதிலும் அர்த்தமுண்டு. வருவாய் கூட வேண்டும், அல்லது வாழ்க்கைச் செலவு குறைய வேண்டும். இதை யாரும் மறுக்க முடியாது.

ஆனல் ஒரு புறத்தில் மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டது என்று கூறிக் கொண்டு, சில பாவனைப் பொருட்கள் கிடைக்கவில்லையென்றும் குறைப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

நமது நாட்டு மக்களில் குறிப்பாக மேற் தட்டு நிலையில் வாழ்பவர்கள் தங்கள் வாழ்வு முறையை உயர்ந்த நிலையில் அமைத்துக் கொண்டதேயாகும். மேலை நாட்டு ஆதிக்கங்களின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாத நிலையில் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள். இவர்களைப் பொறுத்த வரையில் வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனல் அவர்களின் ஆடம்பர வாழ்க்கை முறைக்கு ஏற்ப பாவனைப் பொருட்கள் கிடைத்துக்கொண்டேயிருக்க வேண்டும்.

### இடை நிலையினர்

இந்த மேற்தட்டு நிலையில் வாழ்பவர்களின் வாழ்க்கை முறையைப் பின் பற்றி தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்ட நடுத்தர மக்களே வாழ்க்கைச் செலவு உயர்வதினல் பாதிக்கப் படுகிறார்கள். நாட்டு பொருளியல் முறையில் ஏற்படும் ஒவ்வொரு சிறு மாற்றங்களினலும் உடனடியாகப் பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர நிலையில் உள்ள மக்களே.

இந்த நடுத்தர நிலையில் உள்ள மக்களே நமது நாட்டில் பெருந்தொகையினராக உள்ளனர். நாட்டில் உருவாக்கக் கூடிய பொருளாதாரத் திட்டங்கள், பொருளாதார மாற்றங்கள் உடனடியாக இவர்களையே பாதிக்கின்றன என்பதையும் யாரும் மறுக்க முடியாது. அந்த முறையிலேயே இந்த நாட்டுப் பொருளாதாரத் திட்டங்களும் இதுவரை அமைந்துள்ளன.

இத்தகைய முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றால் நடுத்தர வர்க்கத்தினரைப் புறக்கணிப்பதாகவோ அல்லது அவர்களுக்கு இடர்ப்பாடுகளை ஏற்படுத்துவதாகவோ அமையக் கூடாது என்பதே இதன் பொருள். நடுத்தர மக்களின் வாழ்க்கை முறையைப் பலமற்றதாக்கும் முறையில் நமது நாட்டுத் திட்டங்கள் அமையக் கூடாது.

### காரியத்தில் சூனியம்

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் பொழுது உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும் ஏற்றதாக அவற்றைச்சரிசெய்து கொள்வது ஆபத்தனதாகும். அப்படியான குறைகள் பின்பற்றப்படுவதினலேயே நடுத்தர வர்க்கத்தினர் வாழ்க்கைச் செலவு உயர்வினல் பாதிக்கப்படுகிறார்கள். அதே போன்றுதான் உள்நாட்டு உற்பத்தியிலும் ஏனைய முறைகளிலும் நமது திட்டங்களைக் கவனமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனல் கடந்த காலங்களில் பதவியிலிருந்தவர்களும் சரி, இன்றைய தேசிய அரசாங்கத்தினரும் சரி இத்துறையில் ஒரு சீரான முறையைப் பின்பற்றி வருவதாகத் தெரியவில்லை. ஏதோ திட்டங்களைப் போடுகிறார்கள். வாழ்க்கைச் செலவு உயர்வதை நிறுத்துகிறோம் என்கிறார்கள். ஆனல் காரியத்தில் சூனியமாகவே இருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### தூண்டுதற் திட்டங்கள்

நாட்டு மக்கள் எளிய முறையில் வாழ்க்கை நடாத்தி, பணத்தைச் சேமித்து அதைத் தேசத்தின் தொழில்களுக்கு மூலதனமாக மாற்ற வேண்டும். இந்த முறையில் மக்களை பழக்கப்படுத்தும் தூண்டுதற் திட்டங்களை அவசரமும் அவசியமுமாக ஆட்சியாளர் செய்ய வேண்டும்.

விவசாய முறையில்பெரும் புரட்சியை ஏற்படுத்தி, மக்களை நிலம் நோக்கிச் செல்லும் முறையில் வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு மக்கள் மத்தியிலும், நாட்டில் உள்ள நிறுவனங்கள் மத்தியிலும் பெரிய மறுதல்கள் அவசியம். அந்த மாறுதல்களுக்கு ஏற்ற தூண்டுதல் முயற்சியை அரசியலார் கவனிக்க வேண்டும்.

நாட்டு மக்களின் சக்திகளையும், தேசத்தையும் தொழில்மயமாக்கும் முயற்சிகள் உடன் கவனிக்கப்பட வேண்டும். இதற்கான பரந்த முறைத்திட்டங்களை உருவாக்க ஆட்சியாளர் முன்வரவேண்டும்.

### முதல் நோக்கு எது?

பின் தங்கிய நிலையிலிருந்த உலக நாடுகள் செல்வம் கொழிக்கும் நிலையை அடைந்தமைக்கு இதுவே மூலகாரணம். வாழ்க்கை உயர்வை முதல் நோக்கமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வதான இன்றைய நடை முறைத்திட்டங்கள் அடியோடு மாற்றியமைக்கப்பட வேண்டும் வாழ்க்கை முறையை முதல் நோக்கமாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்வது குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டியது போன்றதாகும். கடந்த அரசாங்கள் இத்தகைய திட்டங்களைப் பின் பற்றிய படியினலேயே வாழ்க்கை செலவைக் குறைக்க முடியாது திண்டாடின.

ஆகவே பொருளாதார வளர்ச்சியை முதல் நோக்கமாகக் கொண்டுவாழ்க்கைத்

(14-ம் பக்கம் பார்க்க)

# முகத்தில் கறுப்பிருந்தால் காளையர் கண் வீசுவாரா?

## உங்கள் நோய்

வள்ளி,
அளவை.

கே: என் முகம் கறுப்பாக இருப்பதால் என்னை மணம் செய்ய ஒருவரும் முன்வருகின்றார்களில்லை. இது ஏற்பட்டு சுமார் 2 வருடங்களாகின்றன. வயது 18.

ப: முகம் கறுப்பாக இருப்பதென சோர்வடைய வேண்டாம். கஸ்தூரி மஞ்சள் பூசி தினசரி ஸ்நானம் செய்யவும். தகுந்த போஷணையுள்ள உணவு முக்கியம்.

சோப்புக்குப் பதிலாக கடலைமா—பாசிப்பயறு அரைத்துத் தேய்த்துக் குளிக்கவும். நல்ல பலன் கிடைக்கும்.

ஜெயசிலி,
திருகோணமலை.

கே: கலியாணம் செய்து இரண்டரை வருடம். குழந்தையில்லை. உடல் பருமனுக இருக்கிறது. மாதவிடாய் ஒழுங்கில்லை. ஆலோசனை கூறுங்கள் டாக்டர்?

ப: கொழுப்புச் சேர்ந்த உணவு வகைகளை குறைத்தல் வேண்டும். இரவில் அதிகம் உண்ண வேண்டாம். அயச்சத்து நிறைந்த கீரைகளை பாவிக்கவும். உடலுழைப்பு அவசியம். தகுந்த முறையில் தேக அப்பியாசம் செய்யவும். உணவில் நல்லெண்ணெய் மிதமாகப் பாவிக்கவும்.

குழந்தை இல்லையே எனக் கவலைப்பட வேண்டாம். காலம்போக 'குழந்தைகள்' கிடைக்கும். கணவனைச் சிறந்த முறையில் போஷிக்கவும்.

செல்வி தேவராணி,
மட்டக்களப்பு.

கே: எனது சகோதரிக்கு கர்ப்பிணியாக இருக்கும் காலங்களில் மலத் துவாரத்தில் சிறுவெங்காய அளவு முளை ஏற்படுகின்றது. மலச் சிக்கலுமுண்டு மிகவும் கஷ்டப்படுகின்றரே!

செல்வி. ம,
நாகலகமுவ.

கே: எனது இரு கைகளிலும் சொறிவு. அதிகம் சொறிந்தால் இரத்தம் கசிகின்றது. மலச்சிக்கலும் உண்டு.

ப: இது தோலைப் பற்றிய வியாதி. இரத்தம் கெட்டுப் போவதாலும் ஏற்பட இடமுண்டு.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ரசகிந்த (சீந்தில் தண்டு) சாத்தாவாரி இவற்றை சம எடை எடுத்து கசாயமிட்டுக் காலை மாலை குடிக்கவும். மச்ச மாமிசம் நன்றல்ல. சவர்க்காரம் பாவிக்க வேண்டாம். சுத்தமான வேப்பெண்ணெய் தடவிவரில் நன்மையுண்டு.

பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

ப: கர்ப்பிணியாக இருக்கும் காலங்களில் கருப்பை நாளங்களை அமர்த்துவதால் அசுத்த இரத்தம் மேல் நோக்கி வரத் தடைப்படுகின்றது. இதனல் மூல முளைகள் ஏற்படுகின்றன.

நீண்ட காலமாக இது இருந்தால் சத்திர வைத்தியமே சிறந்தது. கருணைக் கிழங்கு, கொயிலாக் கிழங்கு இவற்றை கறிசமைத்து உண்ணவும். கர்ப்பிணியாக இருக்கும் காலங்களில் ஒழுங்காக பிரசவத் தாய்சேய் பராமரிப்பு நிலையங்களுக்குச் சென்று சோதித்துக் கொள்ளல் அவசியம்.

க. சுபத்ரா,
காங்கேசன்துறை.

கே: 22 வயதுடைய எனது சிநேகிதிக்கு பரசை அமத்தினல் சிதழும் இரத்தமும் கசிகின்றது. வாய் நாற்றமுமுண்டு. ஆரம்பமாகி 1 வருடம்.

ப: சிரணக் கோளாறுகள் காரணமாகவும், மல பந்தம் காரணமாகவும் ஏற்படும். [illegible] [illegible] வீசும் [illegible] இருக்கும் என எண்ண

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஒக்டோபர் மாதம் 31-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# 25,000 மக்களுக்கு வேலை

நேர்தற் தொகுதி யொன்றிற்கு ஏழு கைத்தறி நிலையங்கள் வீதம் நாடு முழுவதும் 1000 கைத்தறி நிலையங்களை நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

இத்திட்டத்தின் மூலம் 25000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்க முடியுமென்று அரசாங்கம் நம்புகிறது. இன்னும் எட்டு மாதங்களில் இத்திட்டம் பூர்த்தியாகிவிடுமாம்.

வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதும், கைத்தொழில் வளர்ச்சியும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்துள்ளன. அம்மாதிரியே தொழில் வளர்ச்சியும் நாட்டின் சுபீட்சமும் ஒன்றாக இணைந்துள்ளன. வேறு சொற்களில் கூறின், வேலை வாய்ப்பு அளித்தல் நாட்டுக்குச் சுபீட்சத்தைக் கொண்டு வருவதாகும். 'எல்லாருக்கும் வேலை' என்ற நிலை ஏற்படும் போது நாடு சுபீட்சமடைவது திண்ணம்.

வேலையில்லாதோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் இது பூதாகாரமான ஒரு பிரச்சினையாக விசுவ ரூபமெடுத்து சமுதாயத்தின் ஆணிவேரையே தாக்கத் தொடங்கிவிடும். இந்நிலையைத் தவிர்க்கக் கைத்தொழில் முன்னேற்றமும் விவசாய முன்னேற்றமும் ஏற்பட்டாலன்றி சாத்தியமில்லை.

கடந்த அரசாங்கம் இத்துறைகளிற் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறிவிட்டது. தொழில்கள் பல தொடங்கப்பட்டதெனினும் அவை திட்டமிடப்பட்டு, ஒழுங்கு ரீதியான முறையில் செய்யப்படவில்லை. ஆதலின், அத்தொழில்கள் வேலையின்மையைப் போக்கவோ பொருட்களின் விலைவாசிகளைக் குறைக்கவோ பயன்படவில்லை. 400 க்கு மேற்பட்ட தொ[illegible]கள் தொடங்கப்பட்டன என்று பெருமை அடித்துக் [illegible]காண்டார்களெனினும், வேலையில்லாப் பிரச்சினையை [illegible]ரளவு தீர்ப்பதற்கு கூட அவை பயன்படவில்லை.

இப்பிரச்சினை தொழில் முன்னேற்றத்துடனும், விவசாய முன்னேற்றத்துடனும் இணைந்திருப்பதால் இவ்விரு துறைகளிலும் தேசிய அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

படித்த வாலிபர்களைக் கமத் தொழிலில் ஈடுபடுத்த அரசாங்கம் பல்வேறு திட்டங்களை அமுலாக்க சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்கிறது. இத்திட்டங்கள் மூலம் பல்லாயிரக் கணக்கான வாலிபர்களை விவசாயத்தி லீடுபடுத்த முடியுமென அரசாங்கம் கருதுகிறது.

அதே சமயத்தில் தேசிய வாலிபர் இயக்கம் என்ற பெயரால் 15,000 பேர்களைக் கொண்ட ஒரு வாலிபர் படையைத் திரட்டி தொழிற்பயிற்சி அளிக்க ராஜ்ய மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்தன ஒரு திட்டம் தயாரித்துள்ளார். இஸ்ரேல் நாட்டில் இத்தகைய வாலிபர் படைகள் அமைக்கப் பட்டு வெற்றிகரமாகச் செயல்படுகின்றன.

வேலை வாய்ப்புகள் அளிக்கக்கூடிய இன்னும் பல திட்டங்கள் அமுலுக்கு வரவிருக்கின்றன.

இவற்றில் ஒரு முக்கியமான திட்டமே கைத்தறி நிலையங்களை நிறுவும் முயற்சி. இது மிகச்சிறந்த திட்டமாகும். இதனுல் இன்று வேலையில்லாது திண்டாடும் மக்களில் சுமார் எட்டில் ஒரு பகுதியினருக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் அதாவது. வேலையில்லாப் பிரச்சினையில் ⅛ தீர்ந்து போகும். அத்துடன் துணிப்பஞ்சம் தீரவும் வழிபிறக்கும்.

இக்கைத்தறி நிலையங்களெல்லாம் தொடர்ந்து இயங்கும் போது ஆண்டு தோறும் 2,22,50000 யார் துணிகளை உற்பத்தி செய்ய முடியுமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே உடைப் பஞ்சத்தைத் தீர்க்க இத்திட்டம் பெருமளவு பயன்படும். வேலையின்மை, துணிப்பஞ்சம் ஆகிய இரு பிரச்சினைகளையும் தீர்க்க உதவுவதால் ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தும் திட்டம் இது.

இந்தியாவில் ஆயிரக்கணக்கான இயந்திரத்தறிகளைக் கொண்ட நெசவாலைகள், பஞ்சாலைகள் பல இருந்தும், கைத்தறிதான் அந்நாட்டுக்கு விமோசன மளித்துள்ளது. பாரதத்தில் லட்சோப லட்சம் மக்கள் கைத்தறியால் சீவனம் நடத்துகின்றனர். அத்துடன் அங்கு துணிப்பஞ்சத்தையும் போக்கியுள்ளது கைத்தறி.

இங்கும் திட்டமிட்டு கைத்தறி நெசவை வளர்த்தால் உடைப் பஞ்சத்தைப் போக்கவும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும் அதுவே போதுமானது.

பெரிய பெரிய தொழிற்சாலைகள் நம்நாட்டுக்கும் அவசியமே. ஆனுல் அத்தகைய தொழிற்சாலைகள் நிறுவ நீண்ட காலமாகும் அவை உடனடியாக வேலை வாய்ப்பளிக்கவும் பயன்படா. அஃது ஓர் நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையிற் செய்ய வேண்டியதாகும். உடனடியாகக் கை கொடுத்துதவக் கூடியவை சிறு சிறு கிராமக் கைத்தொழில்களே. மக்களின் பசிப்பிணியைப் போக்கவும், வேலையின்மையைப் போக்கவும் குடிசைத் தொழில்கள் பெரிதும் பயன்படுமென்று கூறினுர் காந்தி அடிகள்.

கைத்தறி நிலையம் அமைப்பதுடன் இன்னும் பல கிராமத் தொழில்களைத் திட்டமிட்டுத் தொடக்கத் தேசிய அரசாங்கம் முன் வரவேண்டும். இத்தொழில்களை எல்லாத் தொகுதிகளுக்கும் சமமாகப் பங்கிடுவதென்பது சனநாயக முறைக்கு உகந்ததாக இருக்கலாம். வேலையின்மையால் மக்கள் அதிகமாக இடர்ப்படும் பிரதேசங்கள் பற்றிய முழுப்புள்ளி விவரங்களையும் அரசாங்கம் முதலில் திரட்டிக் கொள்ள வேண்டும். பின்னர் அதற்கேற்ப தொழில் நிலையங்களை அந்தந்தப் பிரதேசத்தில் நிறுவவேண்டும்.

இம்மாதிரி சரியான புள்ளி விபரங்கள் திரட்டப்பட்டிருந்தால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்னும் அதிகமான கைத்தறி நிலையங்களை நிறுவ வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கும்.

தேசிய அரசாங்கத்துக்கு உலக வங்கியும், பிறநாடு[illegible]தால் அவற்றைச் சரிவரப் பயன்படுத்தி கிராமத் தொழில்களைப் பெருமளவு வளர்க்கத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

# காரியப்பர் நிலை என்ன?

# பதவியில் தொடர சட்டம் இடம் கொடுக்குமா?

## குடியுரிமை தடுப்பு மசோதா பற்றி ஒரு கண்ணோட்டம்

**கலாநிதி ஏ. ஜே. வில்சன்,**
அரசியல் விரிவுரையாளர்,
பல்கலைக் கழகம்.

இலங்கை பாராளுமன்றத்தில் 142 வாக்குகளைப் பெற்று நிறைவேற்றப்பட்ட குடியுரிமைத் தடுப்பு (விசேட சரத்துக்கள்) மசோதா திரு. வால்டர் தல்கொடப்பிட்டியா ஆணைக்குழுவினுல் இலஞ்சக் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களின் குடியுரிமைகளைத் தடுக்கின்றன. இவ்வாணைக்குழுவினுல் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களில் ஒருவரான முதலியார் காரியப்பர் இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராகவுள்ளார். இவர் தமது பதவியை இராஜிநாமச் செய்யவேண்டியது தடுக்க முடியாததாகிவிட்டது. அதற்கான ஆதாரங்களை இலங்கை அரசியற் சட்டங்களின் துணைகொண்டு ஆராய்ந்துள்ளார் இலங்கைப் பல்கலைக்கழக பிரதம அரசியல் விரிவுரையாளர் கலாநிதி ஏ. ஜே. வில்சன். இது குடியுரிமைத் தடுப்பு (விசேட சரத்துக்கள்) மசோதா பற்றிய அரசியற் கண்ணோட்ட ஆராச்சியாகும். இம்மசோதா பற்றிய சட்டக்கண்ணோட்டத்திலான கட்டுரை யொன்றும் மிகவிரைவில் இடம் பெறும்.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைக் கொண்டு நிறைவேற்றப்பட்ட குடியுரிமைத் தடுப்பு (விசேட சரத்துகள் மசோதா மூலம் பாதிக்கப்பட்ட ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான முதலியார் எம். எஸ். காரியப்பர் கடந்த 22-ம் திகதிய 'ஒப்சேவர்' பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் நீதி மன்றம் சென்று இதிலிருந்து மீட்சி பெறப் போவதாக அறிவித்துள்ளார். மேலும் அவர் பாராளுமன்றப் பதவியைத் துறக்கும் எண்ணமும் தனக்குக் கிடையாது என்று கூறியுள்ளார். இப்பிரச்சினை எப்படியாயினும் முதலியார் காரியப்பருக்கு இலேசானது அல்ல.

### ஆணைக்குழு நியமனம்

பாராளுமன்ற உறுப்பினர்களை இலஞ்சக் குற்றச்சாட்டிலிருந்து விலக்களிக்கும் பிரிவு இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 13 (3) (K) பிரிவாகும். இப்பிரிவும் ஒரு உறுப்பினரை நீக்குவதற்கு அவர் முழுமை பெற்ற நீதிமன்றத்திலுலோ அல்லது ஒரு ஆணைக்குழு— பாராளுமன்றத்தின் அல்லதுமூதவையின் அனுமதியுடன் நியமனம் பெற்றதாகவோ அல்லது அதுபோன்ற ஒன்றினுலோ குற்றவாளியாக கண்டு நிரூபித்திருக்க வேண்டும்.

முதலியார் காரியப்பரின் நிலையைப் பொறுத்தவரையில்,இதுபோன்ற தீர்மானம் எதுவும் பாராளுமன்றத்திலுலோ அல்லது மூதவையிலுலோ, திரு. வால்டர் தல்கொடபிட்டியாவின் கீழ் ஆணைக்குழுவை — 1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் திகதி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி- பண்டாரநாயக்கா, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான இலஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு - நியமிக்கப்பட்டபொழுது நிறைவேற்றப்படவில்லை. தல்கொடப்பிட்டிய ஆணைக்குழு, விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2-ம் பிரிவின் பிரகாரமே நியமிக்கப்பட்டதாகும். ஆணைக்குழுவின் முடிவுகள் 1960-ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டன, ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் திரு. பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் ஆவர். அவர்கள்: ஹென்றி அபயவிக்கிரமா, எம். பி. டி. சொய்சா, ஆர். ஈ. ஜெயத்திலக்கா. சி. ஏ. எஸ். மரிக்கார், டி. பி. மொனங்குலாம், முதலியார் காரியப்பர்.

### 1960-ல் நடந்தது

1960-ம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திரு. எம். பி. டி. சொய்சாவும், திரு. டி. பி. மொனங்குலாமும் மீண்டும் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்பொழுது முதலியார் காரியப்பரும் ஒரு தொகுதியில் போட்டியிட்ட போதிலும் வெற்றிபெற முடியவில்லை.

புதிய பாராளுமன்றம் அன்று கூடிய சிறிது காலத்தில், எதிர்க்கட்சியினர் ஒரு இலஞ்ச குற்றச்சாட்டு மசோதாவைக் கொண்டு வந்து தெரிவு செய்யப்பட்ட இருவர்களையும் விலக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இம் மசோதா வருவதற்கு முன்னர் திருவாளர்கள் டி, சொய்சாவும், மொனங்குலாமும் அன்றைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் தூண்டுதலின் பேரில் தங்கள் பதவிகளை இராசிநாமாச் செய்து கொண்டனர். இந்த உதாரணத்தைநிச்சயம் முதலியார் காரியப்பரும் பின்பற்றியிருக்கவேண்டும்.

### திருத்தத்தின் பின்

இலங்கை அரசியற் சட்டம் 13(3) (K) பிரிவின் பிரகாரம் தல்கொடப்பிட்டிய ஆணைக்குழு மூன்றில்இரண்டு பங்கு வாக்குகளைப்பெற்ற பாராளுமன்றத் தீர்மானத்தின்படி நியமிக்கப்படாமையினுல் குடியுரிமை விசேட சட்டம் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று திருத்தப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி நிறைவேற்றப்பட்டாலே இவ்வாணைக் குழுவினுல் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அறுவரையும், 1959ம் ஆண்டு முதல் ஏழு வருட காலத்திற்கு அவர்களுடைய பெயர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து அழிப்பதற்கோ அல்லது தேர்தல்களில் வாக்களிப்பதைத் தடுப்பதற்கோ அல்லது உள்ளூராட்சி, பாராளுமன்றத் தேர்வுகளுக்கு வேட்பாளர்களாக நிற்பதை அல்லது மூதவை உறுப்பினராவதைத் தடுக்கவோ முடியும்.

### திருத்தம்

இம் மசோதாவின் பத்தாவது பகுதி இதை அமுல் நடத்துவதற்கு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று நிறைவெய்தியிருக்கவேண்டுமென்றும், அப்படியெனில், இலங்கை அரசியற் சட்டம் 13 (3) (K) பகுதியின் கீழ் பிரதிநிதிகள் சபையில் ஒரு தீர்மானத்தின் பிரகாரம் விசேட ஆணைக்குழு நியமிக்கப்படாது விடினும், குறிப்பிட்ட ஆறு நபர்களையும் தகுதியற்றவர்களாக்க முடியும்.

எது எப்படியாயினும் குடியுரிமைத் தடுப்பு விசேட மசோதாவின் பத்தாவது பகுதியின் சொற்பிரயோகத்தின்படி; இந்த அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் எந்த

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பனை ஆராய்ச்சி நிலையம்

## துரைரத்தினம் பிரேரணை பாராளுமன்றம் வருகிறது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு பனை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட வேண்டுமென ஒரு பிரேரணைக்கான முன்னறிவித்தலை பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. துரைரத்தினம் விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கிறார். இந்தப் பனை ஆராய்ச்சி நிலையம் கொழும்பிலுள்ள தெங்கு ஆராய்ச்சி நிலையம் போன்ற நிலையில் அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தெங்கு ஆராய்ச்சி நிலையம் தென்னை மரத்தின் சகல உறுப்புகளையும் ஆராய்ந்து அவற்றை என்ன விதத்தில் பதப்படுத்தி உபயோகிக்க முடியும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகிறது. இந்த தெங்கு ஆராச்சி நிலையத்தால் தெங்குப் பொருட்கைத்தொழில்கள் பல உதயமாகியுள்ளன.

இந்தத் தெங்கு ஆராய்ச்சி நிலையம் போன்ற ஒரு பனை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இலட்சக்கணக்கான பனைமரங்களின் உறுப்புக்கள் ஒருவித பயனுமின்றி வீண் போவதைத் தடுத்து நிறுத்தி என்ன விதங்களில் அவற்றைப் பயன்படுத்தமுடியும் என்பதை இந்த ஆராய்ச்சி நிலையம் ஆய்ந்தறிந்து வெளியிடும். முக்கியமாக குடிசைக்கைத்தொழில் பலவற்றிற்கும், சிறு கைத்தொழிற்சாலைகள் சிலவற்றிற்கும் இந்த ஆராய்ச்சி நிலையம் ஆக்கத்தைத் தரும்.

பனை ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துப் பராமரிக்க அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவை விட பன்மடங்கு அதிகமான நன்மை இந்த ஆய்வு நிலையத்தை அமைப்பதனால் ஏற்படும் என்பதை திரு. துரைரத்தினம் தனது வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தின் போது சேகரித்த தகவல்களுடன் விளக்கிக்காட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மலிவான விதத்தில் கருப்பணி சேகரிக்க யுக்திகள் கையாளுவதால் மலிவான விலையில் பனங்கட்டியும் பனங்கற்கண்டும் தயாரிப்பதுடன் முன்னர் பொலிகண்டியில் இருந்த சீனித் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலை கூட அமைக்க முடியுமெனவும், பனம்பழத்திலிருந்து பனைரசமும், எஞ்சும் தும்பிலிருந்து ஒரு விசேட ரகக் கயிறும் தயாரிக்க முடியுமென்றும், வேறு இறப்பர் உற்பத்திக்கு முக்கியமாகத் தேவைப்படும் அசிடிக் அமிலம் தயாரிக்க முடியுமெனவும் திரு. துரைரத்தினம் எடுத்துக்காட்டுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



மட்டக்களப்பு விமான நிலையத்தில் வைத்து மக்கள் திலகம் வரவேற்கப்பட்ட பொழுது மட்டக்களப்பு முதல்வர் அவர்களும் மக்கள் திலகமும் கட்டித்தழுவிக் கொள்ளும் காட்சி.

படம் : ராஜப்பன்

## காரியப்பர் நிலை என்ன?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நபரும் எந்தப் பிரிவிற்கும் இதற்குத் துணையாகவோ, அல்லது ஏற்புதலின்றியோ, அல்லது வேறு பட்டோ, எந்த நிறைவுச் சட்டத்திற்கு அல்லது இலங்கை அரசியற் சட்டத்திற்கு இருந்தாலும், இவ்வதிகாரச் சட்டம் (குடியுரிமைத் தடுப்பு விசேட சட்டம்) அவற்றிற்கான இயைபை ஏற்படுத்துகிறது. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இம்மசோதாவின் இரண்டாவது வாசிப்பின் போது இப்பகுதி பற்றிக் குறிப்பிடுகையில் 'நீங்கள், சட்டவாதிகள் மணிக்கணக்காக வாதிடுவதற்கு இடமேற்படுத்துகிறீர்கள். அதாவது குறிப்பிட்ட இப்பகுதி சட்டத்தின் பிரிவுகளுடன் மாறுபடுவதற்குத் துணை போகிறது' என்றும், மேலும் அவ்வாறு சொற்பிரயோகம் செய்வதனால் தவறுகளையும், தப்பித்துக் கொள்ளும் விதிகளையும் ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள் !

### மீறினால்.........

ஆகவே, முதலியார் காரியப்பரைப் பொறுத்தவரையில் இச்சட்டம் பற்றிய ஆய்வை நீதிமன்றத்தின் மூலம் ஏற்படுத்தலாம். ஆனால் இந்த இடைகாலத்தில் பாராளுமன்றத்தில் அவரது ஆசனத்தைவைத்திருக்க முடியுமா? 'இல்லை' என்பதே இதற்கான நேரிடையான பதிலாகும். இலங்கை அரசியற் சட்டத்தின் 24 (d) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தில் ஒரு ஆசனம் காலியாவதற்கு, ஒரு உறுப்பினர் இலங்கை அரசியற் சட்டம் 13 (3) (K) பிரகாரம் தகுதியற்றிருக்க வேண்டும். அரசியற் சட்டத்தின் 24(2) பகுதி கூறுவதின் பிரகாரம் அங்ஙனம் ஒரு தொகுதி காலியாகும் பொழுது, பாராளுமன்றச் செயலதிகாரி மாதேசாதிபதிக்கு அறிவித்து, அவர் (மாதேசாதிபதி) அரசாங்க வர்த்தமானி மூலம் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் அக்காலியிடத்தை நிரப்புவதற்கு.

குடியுரிமைத் தடுப்பு மசோதா விசேட சட்டம் மூதவையில் நிறைவுபெற்று மாதேசாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றதும் கல்முனைத்தொகுதி காலியாகி விட்டதாக அரசியற் சட்டம் 24 (2) பிரிவின்படி பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு புதிய தேர்தல் கட்டாயமாக நடத்தப்படும். முதலியார் காரியப்பர் பாராளுமன்றத்திற்குள் செல்ல முயற்சித்தல் சபாநாயகர் அவரை வெளியேற்றும் வண்ணம் படைக்கலச் சேவிதருக்கு கட்டளையிடுவார்.

### அன்றைய உதாரணம்

திரு. டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கத்தின் காலத்தில் (1947-48) முதலியார் காரியப்பர் மீது இங்ஙனம் ஒரு இலஞ்சக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டபொழுது அவர் [illegible] அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில் அரசாங்கத்தின் நலன் கருதி கோட்டார் தன்னை குற்றமற்றவன் என்று காணும் வரை தனது பதவியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் வண்ணம் எழுதியது நினைவு கூரத் தக்கதாகும். இப்பொழுதும் முதலியார் காரியப்பர் அதே வழி முறையைக் கடைப்பிடிக்கக் கூடாதா? அதாவது தனது பதவியைத் துறந்து முழுமை பெற்ற நீதி மன்றத்தின் மூலம் தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முனையக் கூடாதா?

## 'விமான ஓட்டி-சரோஜாதேவி'



மட்டக்களப்பு விசயத்தின் போது சரோஜாதேவி விமானம் ஓட்டினர்.

## 'விமான ஓட்டி-எம். ஜி. ஆர்.'



மட்டக்களப்பு விசயத்தின் போது எம். ஜி. ஆர். விமானம் ஓட்டினர்.

## 'மறக்க....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியில் தோட்டத் தொழிலாளர்களின் ஆர்வம். இந்த இரண்டையுமே, எனக்கு முன் எம்மாத்திரம்' என்று சவால் விடுவதாக அமைந்தது மட்டக்களப்பு யாழ்ப்பாணப் பகுதி மக்களின் எழுச்சியும், ஆர்வமும்மிக்க பாராட்டுகள். ஆனால் எங்களைப் பொறுத்த அளவில் எங்கும் மக்களின் கரைகாண முடியாத மகிழ்ச்சி வெள்ளத்தைத்தான் காண முடிந்தது.


நாங்கள் எங்களின் தா[illegible]கத்திலிருந்து வரும் பொழுது சாதாரணக்கலைஞர்களாக அரசாங்க விதிகளின்படி கட்டிய ஆடைகளோடும் மாற்றிக் கொள்ள சில உடைகளோடும் வந்தோம். ஆனால் இன்று பெருஞ்செல்வத்தைப் பெற்றுச் செல்வர்களாகத் திரும்புகிறோம். இந்தச் செல்வத்தை எடுத்துக்கொண்டுபோகக் கூடாது என்று எந்த அரசும் ஆணையிட முடியாது. அரசுகளின் ஆணைக்கு உட்படாத மகத்தான செல்வம். ஆம்; இலட்சோப இலட்சம் மக்கள்வாரிவாரிவழங்கிய அன்புச் செல்வம் அழியாச் செல்வம். அத்தகைய செல்வத்தை சுமக்க முடியாமல் பெரும் சுமையுடன், ஆனால் அளவிடற்கரிய மகிழ்ச்சியுடன் சுமந்து செல்கிறோம். சென்று வருகிறோம். இலங்கை வாழ் மக்களே எங்கள் பால் அன்பைச் சொரிந்த இரசிகப் பெருமக்களே நல்ல இதயத்தோடு எங்களை வரவேற்றும் பாராட்டிப் பரிசுகள் வழங்கிய பெரியோர்களே சென்று வருகின்றோம். உங்களை மீண்டும் சந்திக்க வருவேன் என்ற நம்பிக்கையோடு விடை பெற்றுக் கொள்கிறேன்.

## தமிழ் மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]பெயர்ப்புகளுக்கு உதவி அளிக்க அப்பிரிவுக்கு ஆணை இட வேண்டுமெனவும் கேட்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.


ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்



இதனை தலைக்கு வைத்துவரின் தலைவலி, கண்வலி, காதுவலி, செவிடு, கண் பார்வை மட்டு, உச்சி, கண், கை, கால், திரேக எரிச்சல், காதடைப்பு, பீனிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாக வளரச் செய்யும்.

புட்டில் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனாம்.

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு,

கொழும்பு-11.



'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"

விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!

ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?

வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'

ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.

128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துண்டு

## சசு. வரதராஜன்

**வீட்டு நிலைமையை நன்குணர்ந்து செயற்படும் ஓர் உத்தம மகனை, நமக்கு இச் சிறுகதை அறிமுகப்படுத்துகின்றது. ஒரு சேட்டு வாங்குவதற்காக வாழைக் குலை விற்று வந்த பணத்தைத் தியாகம் செய்யும் மணியம்—**

**அவனை வெகு உருக்கமாக நம்முன் நிறுத்துகிறார், இப் புதிய இளம் எழுத்தாளர்.**

**எமது சிறுகதை**

மணியம் இன்று என்றுமில்லாதவாறு புதிய உற்சாகத்துடன் தோட்டத்திற்கு சென்றான். பிஞ்சிலிருந்து காயாகி கனியாகப் போகின்ற அவ்வாழைக் குலையை இன்று சந்தைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று சென்றவன் பற்பல கற்பனைக் கோட்டைகளை கட்டத் தயங்கவில்லை. சென்ற தீபாவலிக்கு தந்தையார் வாங்கிக் கொடுத்த அச் சேட்டையே துவைத்துத் துவைத்துப்போட்ட மணியத்தின் சேட்டு கிழிந்து ஒரு மாதமாகிறது. குசேலர் கண்டாலே தனக்குள் பெருமைப் படக்கூடிய அளவில் இருந்த அச்சேட்டை அணியும் மணியம் வயதிலும் கல்வியிலும் சிறியவனல்ல. ஜீ.சீ.ஈ. பரீட்சையை பாஸ் பண்ணிவிட்டு சர்வகலாசாலை புகுமுக வகுப்பில் கல்விகற்கும் மாணவன் பற்றுக்குறைக்கு தந்தை தாயரின் பணத்தில் ஈடம்பமாக வாழ்ந்து நேரத்திற்கு ஒரு சேட்டு போடும் மாணவர்கள் மத்தியில் இவனும் ஓர் மாணவன். தந்தையாரின் பணக்கஸ்டத்தை உணர்ந்து அவரை பணம் கேட்க மனமின்றி இருந்த மணியத்தின் பெரும் தன்மையைக் கண்ட தகப்பனியபோது அதைத் தனக்கு அர்ப்பணித்த தந்தையின் பாசத்தைக் கண்டு மலைத்தான். நாதியற்ற சுற்றத்தில் தன்னை அலங்கரிக்க விரும்பாத மணியம் தன் புதுச் சேட்டை எண்ணி மகிழ்ச்சி அடைய முடியவில்லை. மாறாக அக்காசுக்காக எத்தொழிலையும் புரியத்தயங்காத எத்தனையோ வாழவழியற்ற குடும்பங்களை பற்றி எண்ணினான். பலவாறு சிந்தனையை படரவிட்டுக்கொண்டு சந்தையை அடைந்த மணியத்தை 'தம்பிவாழைக்குலையைச் சொல்லுபாப்பம்' என்ற சின்னப்புவின் குரல் இவ்வுலகத்திற்குகொண்டு வந்தது.

மணியம் பன்னிரண்டு ரூபாவுக்கு காணும் என்று கணக்குப் போட்டிருந்தான். ஆனால் 'அண்ணை பதினொரு ரூபா கொடுங்கோ' என்று சுன்னாகச் சந்தையின் பாணியில் சொன்னான். 'தம்பி சந்தைக்கு வந்து கனநாள் போல, சந்தையின்ரை நோக்கம் தெரியாது போலை, வைச்சுப் பார் தம்பி' என்று கூறிவிட்டு சின்னப்பு நகர்ந்தார். வேறு இருவர் வந்து இதையே கூறிவிட்டுச் சென்றனர். இது வழக்கமாக சந்தையில் நடக்கும் நாடகம்தான். ஆனால் புதி

நிரந்தரமாக அளிக்க முடிந்ததே தவிர பொருளாதாரப் பண்டமாற்று செய்ய முடியவில்லை.

'தம்பி ஆறு ரூபாதாறன். உங்காலை எல்லாம்பார்வாழைக்குலை கொழும்புக்கும் ஏற்றுமதி யில்லை' என்று கிழவன் கூறியபோதே மணியம் வெலவெலத்துப் போய் விட்டான்.

'கிழவனுக்கும் பண ஆசை பிடித்து விட்டது' என்ற ஒரு எண்ணத்தை வரவழைத்துக் கொண்டு அந் நம்பிக்கையில் 'அப்பு அது கொடுக்கவில்லை கிடக் கட்டும்' என்று சென்றான்

என்ன செய்ய முடியும். உழைத்தும் வாழ்வு சீர்குலைந்து கொண்டிருக்கும் ஏழைகளின் குமுறலோடு மணியத்தின் குமுறல் ஒன்றியதே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

கனகராசா மணியத்திற்கு கிட்ட வந்தபோது அவனைப் பிடித்து நசுக்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால் பின்னர் அவன் இதயம் பணம்தான் எவ்வழியில் ஒரு வரைப் போய் அடைகிறேன் என்று ஒவ்வொருவருக்கும் கூறினால் இன்று நாட்டில் மோசடி, களவு, கொள்ளை போன்றவை நடக்காதே.

'தம்பி அந்த விலைக்கு கொடுக்கிறதென்றால் எனக்குத்தா' என்று கூறிக் கொண்டு சென்றான்.

சிலர்வந்து ஐந்து, ஆறு ரூபா என்று கேட்டபோது தான் மணியத்திற்கு கிழவனின் நேர்மை என்னும் செல்வ வில்லை என்று கொழும்பு வியாபாரிகளின் அநியாயமும் புரிந்தது.

பணம்தான் செல்லும் இடமெல்லாம் தன் கூட கொடுமை பலாத்தகாரம், உருட்டு, மிறட்டு எல்லாவற்றையும் அழைத்துச் சென்று மனநீதி என்னும் மனிதனின் மங்காத செல்வத்தை விரட்டிவிடுகிறதே என்று எண்ணும் போது அவன் குமுறல் இரக்கமாகமாறியது. 'அப்பணத்தை போற்றி கும்பிடும் மனிதர்கள் மாறும் மட்

டன் தீர்ந்தது தெரியாது. மணியத்தின் தந்தையோ செக்கு மாடுகள் செக்கையே சுற்றிச் சுற்றிவருவது போல் மணியத்திடம் சேட்டுக்குப்போக மிகுதிக் காசை கேட்க மனமின்றி மணியத்தை வலம் வந்தார். ஏழமையில் துன்புறும் தன் மனத்தைப் போல் மணியத்தின் மனமும் கலங்கக் கூடாது என்று எண்ணினார். பாவம் அவர் அறியார் மணியத்தின் குமுறலை. தந்தையின் குமுறல் குடும்பம் என்ற குறுகிய பாசத்தால் மட்டும் ஏற்பட்டது. ஆனால் மணியத்தின் குமுறலோ நாட்டில் வாழும் எண்ணிறந்த வறியவர்களின் கஸ்டங்களையும் அவர்களுக்கு மற்றவர்கள் இழைக்கும் கொடுமைகளையும் கண்டு எழுந்தது.

தந்தைக்கு வீற்ற விலையைச் சொல்லி அவரைக் கஸ்டப்படவிட வேண்டாம் என்று எண்ணி பேசாமல் இருந்தான். அடுக்களைக்கு சாப்பிடச் சென்றபோதும் தாயார் எப்போது மணியம் வாழைக் குலையைப் பற்றிக் கதைக்கிறான் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். வாழ்ந்த இடத்தில் சுகம்

ஓர் ஏழமையிலும் எழுந்த நன்றிக்கண்ணீரை மகனுக்கும் மற்றையோருக்கும் தெரியாமல் விடுவதைத் தவிர அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சொந்த உழைப்பையே நம்பியிருந்த அவர் தன் நாதியற்ற சுற்றத்தின் பொறுப்பு ஒருபுறம் வாட்டிய போதும் மணியத்தை ஒருவாறு படிக்கவைத்தார். மணியமும் பொறுப்பு உணர்ந்து படித்து வருகிறான்.

பாழும் உலகம் தன் விசித்திரப் போக்குகளுக்குள் எத்தனை எத்தனை பேரை மடக்குகிறது. குடிக்க கஞ்சிக்கு வழி இல்லாத தந்தை தாயாரிடம் பணம் வாங்கி சிகரெட், படம் பார்க்கும் ரகம் தொடக்கம் சிநேகித சிநேகிதிகளுக்கு 'பொண்ஸ்' பவுடர், கியூடெக்ஸ், ஹேரெக்ஸ், டெட்றிலின் வரை கன்மானம் வழங்கும் ரகம் வரை வைத்திருக்கின்றது. இப்படிப்பட்ட தன் வகுப்புத் தோழர்களை எண்ணி இரங்கப்பட முடிந்ததே தவிர அவனுடைய ஏழ்மை வார்த்தையை அவர்கள் ஏற்றுமுடியவில்லை. மாறாக அவர்கள் நடத்தை அவனை புடம் போட்ட தங்கமாக மாற்றி வந்தது.

சேட்டிற்கு எட்டு ரூபாவும் மிகுதியை அக்கிழமைக் கூப்பன் எடுக்கலாம் என்று எண்ணிய அவன் மனதிற்கு வாழைக்குலையின் கனம்வலையூட்டியது. கடந்த முறை வளர்ப்புப் பின்னர் வெட்டிய குலையில் இதுதான் பெரிய குலை என்று எண்

தாக வங்க விற்க வருபவர்களை இவ்வார்த்தைகள் கலங்கச் செய்துவிடும். சந்தையில் அநுபவப்பட்டவர்களை இது ஒன்றும் செய்யாது.

கதிரேசு என்ற கிழவன் மணியத்தின் வீட்டிற்கு கிட்ட இருப்பவர். 'தம்பி என்னவில்லை. குலை சரியான மலிவு. சொல்லு பார்ப்பம்' என்று கேட்டார்.

'அப்பு பதினொரு ரூபா கொடு' என்று சொல்லிவிட்டு அவர் என்ன சொல்லுறார் என்று கேட்பதற்காக கிழவனை உற்றுப் பார்த்தான்.

வழக்கமாக மற்றவர்கள் எட்டு ரூபா பாத்தால் இக் கிழவன் ஏழரை ரூபாதான் பார்ப்பது வழக்கம். கிழமையில் மூன்று நாள் கூடும் சந்தையில் வரும் வருவாயைக் கொண்டு தானும் நடக்கப் பெலனற்ற அவன் மனைவியும் காலம் தள்ள வேண்டியிருந்தது. வாங்கிறவரிடம் ஐம்பது சதமும் விற்கிறவரிடம் ஐம்பது சதமுமாக உழைப்பது வழக்கம். கோயில், பூசை, ஏழைகள் என்றால் ஐம்பது சதத்தைவிட்டு எட்டு ரூபாவிற்கே விற்கக் கூடிய கனிந்த உள்ளம் படைத்த கிழவன் கதிரேசு. இவனுக்கு மணியத்தின் ஏதுவிபரமுறை கிடைப்பது உண்டு. ஆனால் பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்ற மணியத்தின் குடும்பம் அவ உள்ளம் கனிந்த பாசத்தையும் நன்றியையும் கதிரேசு தம்பதிகளுக்கு

பாடுபட்டு மாடாக உழைக்கும் கணக்காளரின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு கனகராசா, செல்வத்துரை என்ற இருவர் கையிலும் தான் உள்ளது. இருவரும் கூடி என்ன விலைக்கு வாழைக்குலை எடுக்கலாம், எவ்வளவு லாபம் அடிக்கலாம் என்று கணக்குப் போட்ட பின்னரே வாழைக்குலையை கொழும்புக்கு ஏற்று

வதற்கு தொடங்குவது உண்டு. சிலவேளைகளில் வெளியூர்களில் இருந்து வாழைக்குலை வாங்கவரும் முதலாளிமார் இவர்கள் விதித்த விதியை மாற்றியமைப்பதும் உண்டு. அப்படிப்பட்ட நேரங்களில் சில தோட்டக்காரரின் சந்தோஷம் முருகனின் கள்ளுக் கொட்டிலில் தொடங்கி தம்பித்துரையின் வடி சாராயம் மட்டும் செல்வதுண்டு. மணியத்தின் குடும்பமும் வேறு சில குடும்பங்களும் இவற்றைக் கண்டு நிலை இழப்பதில்லை.

இன்றும் கனகராசாவினுடையதும் செல்வத்துரையினதும் வேலைதான் [illegible] அவன் இதயக்குமுறல் அதிகரித்தது. பாவம் அவன்

டும் எத்தனை கனகராசாக்களும் செல்வத்துரைகளும் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என்று எண்ணியவாறு நின்றான்.

தம்பி வாழைக்குலைக்குச் சொல்லு பாப்பம் 'என்ற கனகராசாவின் மென்மொழி மணியத்திற்கு நாராசம் போல் விழுந்தாலும் வாழைக்குலை விற்க வேண்டும் என்ற உணர்வினால் 'பன்னிரண்டு ரூபா கொடுங்கோ' என்று தனது தூய மனத்தை தாழ்த்தாமல் விலையைக் கூறினான்.

'தம்பி ஆறுரூபா தாறன் அதற்குமேல் போகாது' என்று பரிந்து பேசுவது போல் போகினார்.

'நீங்கள் இருவரும் இருக்கேக்கை நாங்கள் எங்கு கூட விற்பது' என்று எண்ணியவாறு' உங்கை ஆறரை ரூபா கனபேர் கேட்டவை கொடுக்கவில்லை. ஏழுரூபா என்றால் எடுங்கோ' என்று கூறினான்

சுவ்வளவு பேரம் பேசிய பின்னர் கனகராசா அக்குலையை ஏழு ரூபாவுக் எடுத்துக் கொண்டு சென்றார்.

வீட்டை யடைந்த மணியம் பள்ளிக் கூடம் செல்லும் அவசரத்தில் வெளிக்கிட்டான். அவன் தாயின் கடைக்கு கூப்பன் எடுக்கலாம் தங்கராஜனிடம் ஒரு ரூபா வாங்கிசேட்டை எடுப்பம்' என்றிருந்தவனுக்கு அரிசி முதல் நாளு

பெறாத அத்தாய் வாழ்ம் கைப்பட்ட இடத்திலுக் பூரண இன்பத்தை அனுபவிக்க முடியவில்லை. பாவம் அவளால் இச்சிறிய துன்பத்தை தாங்க முடியும் என்ற துணிவில் 'தம்பி மிச்சக்காசு இருந்தால் தாவன் கூப்பன் எடுக்க வேணும்' என்று கேட்டாள்.

தந்தைக்கு எழாத துணிவு தாய்க்கு எழுந்ததை எண்ணி மகிழ்ந்தான். ஆனால் அம்மகிழ்ச்சி நீடித்து நிற்கவில்லை. 'அம்மா ஏழு ரூபாவுக்குத்தான் விற்றனான், இன்னும் ஒரு ரூபா தேவை' என்று சொன்னபோது அத்தாயுள்ளம் படாத படுபட்டதை மணியம் தாயின் முகத்தில் இருந்து கண்டு விட்டான்.

'ஏனம்மா அரிசியில்லையா?' என்று கேட்டான். 'இல்லைத்தம்பி இடக்குது அரிசி காசு கிடக்கேக்கை கூப்பனை எடுத்துவிட்டால் சுகம் அதுக்காகத்தான் கேட்டனான் எடுக்கிற நீ பார்த்து நல்ல சேட்டாக எடு' என் தனக்கே உரிய பாணியில் வீட்டு நிலையைப் மழுப்பினாள்.

மணியமும் அப்பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பி சாப்பாட்டில் கவனம் செலுத்துபவன் போல் உண்ணத் தொடங்கினான். தாயும் தன் பொறுப்புணர்ந்த மைந்தன் உண்ணும் அழகை அள்ளிப் பருகினாள்.

[13-ம் பக்கம் பார்க்க]

# எதற்காக இலங்கை வந்தேன்?

## பத்திரிகையாளர் மாநாட்டில் எம். ஜி. ஆர். விளக்கம்

**'இந்த நாட்டு மக்களுக்கு கலை மூலம் எதைச் செய்ய முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே, நான் இலங்கை வந்துள்ளேன்' என்று கடந்த வாரம் இங்கு வந்த மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் கூறினர்.**

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் காலிமுக ஹோட்டலில் கடந்த 21ம் திகதி மாலை ஆறு மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் புரட்சி நடிகர் அவர்களும், கன்னடத்துப் பைங்கிளி சரோசாதேவி அவர்களும் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு சிரித்த முகத்துடன் பதில் கூறினார்கள்.

### நோக்கம்

ஆரம்பத்தில் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தங்களின் இலங்கை விசயத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறுகையிலே:

'இலங்கையிலுள்ள சில நண்பர்களின் அழைப்பின் மீதே நாங்கள் இந்நாட்டுக்கு வந்துள்ளோம். இந்நாட்டிலிருந்து பணத்தையோ அல்லது விளம்பரத்தையோ பெற்றுச் செல்வதல்ல எமது நோக்கம். இவையிரண்டும் தமிழ் நாட்டில் 'போதும் போதும்' என்றளவிற்கு இருக்கிறது.

'இந்நாட்டு மக்களின் விருப்பம் என்ன? அவர்களின் இரசனை உணர்வு எத்தன்மையது? என்பதைத் தெரிந்து அவர்களுக்கு நான் ஈடுபட்டுள்ள கலையின் மூலம் எத்தகைய தொண்டையாற்றலாம் என்பதே எனது வருகையின் நோக்கமாகும்.

### இடதுசாரி ஏடுகளுக்கு சாட்டை

'முன்பும் சில தடவைகள் இந்நாட்டுக்கு வரவேண்டும் என்று விரும்பினேன், ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் இடங்கொடுக்கவில்லை. 'பணக்காரக் குடும்பம்' என்னும் படத்தின் சில காட்சிகளை இலங்கையில் எடுப்பதற்கு விரும்பி அனுமதி கோரிய பொழுது சரோசா தேவி அவர்களுக்கு மட்டுமே அனுமதி கிடைத்தது. அதனால், அப்பொழுது கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தையும் சூழ்நிலைகள் தடுத்துவிட்டன.


'நான் இந்த நாட்டுக்கு வருவதினால் பல கிளர்ச்சிகள் உருவாகக் கூடுமென்று இடதுசாரிச்சார்புடைய சில சிங்களத் தினசரிகள் செய்தி வெளியிட்டிருந்ததாக நண்பர்கள் மூலம் அறிந்தேன். இச்செய்தியை அறிந்ததும் பெரிதும் வருந்தினேன். அதே நேரத்தில் என்னை நினைத்து நானே ஆச்சரியப்படவும் செய்தேன்.

சில வாரங்களுக்கு முன்னர் எனது மனைவி இங்கு வர விரும்பினார். அப்பொழுது தமிழ் நாட்டிலிருந்து எனது நண்பர்கள் சிலர் குடும்பமாக இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார்கள். அவர்களுடன் எனது மனைவியையும் அனுப்பி வைத்தேன். இச்சம்பவத்தை சில இடதுசாரிப்பத்திரிகைகள் திரித்து, நான் இங்கு வந்து நடத்தவிருக்கும் கிளர்ச்சிக்கு முன்னேடியாக சில இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே அவர்கள் வந்ததாக செய்தி வெளியிட்டனவாம்.

### இறந்து விடுவதுமேல்

'இவற்றையிட்டு நான் ஒன்றை மட்டும் திடமாகக் கூறவிரும்புகிறேன். இலங்கைத் தீவு நான்பிறந்த நாடு. இந்த நாட்டிற்கு நான் வருவதால் பெரியதொரு கிளர்ச்சி ஏற்படுமென்றால், அதிலும் பார்க்க நான் இறந்து விடுவதை மேல் என்று கருதுகிறேன். இந்த உண்மையை அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

'நான் இந்த நாட்டில் உள்ள கண்டியென்ற இடத்தில் பிறந்தவன். பிறந்த ஆறுவது மாதம் கேரள நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டேன். அதற்குப் பின்னர் இப்பொழுது தான் வருகிறேன். இப்பொழுது, நான் பிறந்த இடம் எங்கே? அது எப்படியிருக்கிறது? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. என்றாலும் இந்த நாட்டு மக்கள் மீதும்,



இந்த நாட்டின் வளர்ச்சியிலும் எனக்குப் பற்று உண்டு. இந்த அளவிற்தான் எனக்கும் இந்த நாட்டிற்கும் தொடர்பு உண்டு என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

'ஆனால் கலைஞன் என்ற முறையில் மக்கள் சமுதாயத்துடன் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. அந்த வகையான உறவு ஈழத்து மக்களுடனும் எனக்கு உண்டு. இந்த ரீதியிலேயே எனது வருகையும் அமைந்துள்ளது.

### அண்ணா என் தலைவன்

'நான் தென்னகத்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப் படுகிறேன். இதை எங்கு சென்றாலும் பெருமையுடன் கூறிக்கொள்வேன். நான் இங்கு புறப்பட்டு வரும் பொழுது லட்சக்கணக்கான எனது கட்சி உறுப்பினர்களும், என் தலைவன் அறிஞர் அண்ணாவும் விமான நிலையத்திற்கு வந்து ஆசி கூறி வழியனுப்பி வைத்தார்கள். கலைத்துறை ... சென்றுவரும் வண்ணம் கூறிய அண்ணா, ஒரு செய்தியையும் இங்கு கூறும் வண்ணம் என்னைப் பணித்துள்ளார்.

'இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தென்னக தி. மு. கழகத்தின் கிளையல்ல. எமது கழகத்தின் கிளையென்றால், நாம் 'திராவிட நாடு' கோரிக்கை பற்றி சில மாற்றங்களைச் செய்த பொழுது இந்நாட்டுத் தி.மு.க. என்ன மாற்றத்தைச் செய்தது என்று கேட்க ஆசைப்படுகிறேன். எமது கழகம் சமூக மறுமலர்ச்சியில்கடைப் பிடிக்கும் சில கொள்கைகளை இங்கு உள்ள தி. மு. கழகமும் கடைப் பிடிக்கலாம். இதைக் கொண்டு இதனைக் கிளையென்று கூறிவிட முடியுமா? எனவே தான் இலங்கைத் தி. மு. க., தென்னகத் தி. மு. கழகத்தின் கிளையல்ல என்ற செய்தியைக் கூறும் வண்ணம் என்னை அண்ணா பணித்துள்ளார்.

### இலங்கையிலும் படம் எடுப்பேன்

'நான் வருமுன்னரே தீர்ப்புக் கூறுவதை விட்டு விட்டு, வந்து சென்ற பின்னர் தீர்ப்புக் கூறும் வண்ணம் இடதுசாரிப் பத்திரிகைகளைக் கேட்டுக் கொள்கிறேன். எனது இலங்கை வருகையில் மற்றுமொரு முக்கிய விடயம் உள்ளது என்பதையும் இப்பொழுது கூறிவைக்க விரும்புகிறேன். ஒரு தமிழ் மாணவன், தன் நண்பனுடன் உலகம் சுற்றுவதாகவும், அப்பொழுது அவன் பலவகைப் பட்ட இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் அனுபவிப்பதாகக் கொண்ட வீரம் மிக்க ஒரு கதையைப் படமாக்க ... முயற்சிகள் மலேசியாவில் நடைபெற்றுள்ளன. இப்படத்திற்குத் தேவையான சில வெளிப்புறக் காட்சிகளை இந்நாட்டிலும் படமாக்க முடியுமா என்பதையும் நான் பார்த்துக் கொள்ள விரும்புகிறேன்.'

### நாடு காக்கும் பணி

இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களின் பலதரப்பட்ட கேள்விகளுக்கும் சிரித்த முகத்துடன் எம். ஜி. ஆர். பதிலளிக்கையில் கூறியதாவது:

'அண்மையில்நடைபெற்ற-நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்திய-பாகிஸ்தான் போராட்டத்தில் நான் சார்ந்துள்ள தி. மு. க. நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் கொடுத்துள்ளது-கொடுக்க எச் சந்தர்ப்பத்திலும் தயாராகவிருக்கிறது. என்னைப் பொறுத்த மட்டில், நாட்டைக்காக்க எல்லையிற் போராடும் போர் வீரர்களுக்கு இரத்தம் வேண்டுமென்றதும், எனது உடம்பிலிருந்து கூடிய அளவு இரத்தத்தை எடுக்கும் வண்ணம் இராணுவ டாக்டருக்கு அறிவித்திருந்தேன். இதுவரை அவர்கள் என்னை அழைக்கவில்லை. நாடு திரும்பியதும் அதுவே எனது முதல் வேலையாகவும் இருக்கலாம். எனது பிரச்சாரத்தின் மூலம் நாட்டைக் காக்க பொது மக்களைத் தூண்டியுள்ளேன். இற்றைவரை ரூபா 35,000 கொடுத்துள்ளேன். மேலும் கொடுக்க இருக்கிறேன்.'

'எங்கள் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் உள்ள உறவுமுறையைப் பொறுத்த வரையில், இன்று நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவது என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை. ஆனால் இருகட்சிக்கும் உள்ள உறவுமுறை நீடிக்குமா என்பதை காலம்தான் கூற வேண்டும். இன்றைய நிலையில் மாற்றம் எதுவுமில்லை.

### சினிமா பற்றி...

சினிமாத்துறை பற்றிய பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு எம். ஜீ. ஆர். பதில் கூறுகையில்:

'வரலாற்றுப் படங்களிலும் பார்க்க சமூகப் படங்களின் மூலமே மக்கள் மத்தியில் கூடுதலான கருத்துப் பிரச்சாரத்தைச் செய்யலாம் என்று நம்புகிறோம். மக்களும் இன்று சமூகப் படங்களையே கூடுதலாக விரும்புகிறார்கள். அதனால் வரலாற்றுப் படங்கள் தோல்வியடைந்து விட்டன என்பது அர்த்தமல்ல. நான் நடிக்கும் படங்களில் வீரம் நிறைந்த காட்சிகளைச் சேர்ப்பதன் மூலம் மக்கள் வீரமுள்ளவர்களாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம்.'

'ஆங்கிலப் படங்களின் தரத்திற்கு தமிழ்ப் படங்கள் ஏன் தரம் உயர முடியவில்லை' யென்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்: 'தரம் என்றால் என்ன?' என்ற கேள்வியை எழுப்பி 'சிறந்த ஆங்கிலப் படங்களே எமது பார்வைக்குக் கிட்டுவதாகவும், அதே அளவில் சிறந்த தமிழ்ப் படங்களை ஒப்பிடும் பொழுது தமிழ்ப் படங்கள் எந்த வகையிலும் குறைந்தவனல்ல' என்றும் கூறினர். மேலும் தமிழ் இரசிகர்கள் மூன்று மணித்தியாலங்களுக்குத் தமிழ்ப் படங்கள் ஓட வேண்டும் என்று விரும்புவதால், சில தேவையற்ற காட்சிகளைப் புகுத்த வேண்டியிருக்கிறது' என்றும், 'தமிழ்ப் பண்பாட்டு முறைக்கு ஒட்டியே தமிழ்ப் படங்கள் எடுக்கப்படுவதாகவும், இந்த மரபை உணர்ந்து கொள்ளாதவர்களே தமிழ்ப் படங்கள் தரம் குன்றியிருக்கின்றன என்று கூறுகிறார்கள்' என்றார். 'உயர்ந்த உணர்ச்சிகரமான கட்டங்களை பாடல்கள் மூலம் அமைப்பதாகவும், இக்காட்சிகளில் நடிப்பது கலைஞனுக்கு சுலபமானது அல்ல' என்றும் விளக்கினர்.

### கருணாநிதியுடன் போட்டி

தனி நபர்களுடன் உள்ள உறவு முறைகள் பற்றிய சில கேள்விகளை அங்கு நின்ற பத்திரிகையாளர் அல்லாதார் சிலர் கேட்டபொழுது சிவாஜி கணேசனுடன் எத்தகைய பகைமையும் கிடையாது என்றும், ஆனால் தொழிற் துறையில் போட்டியுண்டு என்றும், அது அவசியம் என்றும் கூறினர்.

கலைஞர் கருணாநிதியும் தானும் தி. மு. கழகத்தை கட்டிக்காத்து வளர்ப்பதில் போட்டி போடுவதாகவும், அப்போட்டியைத் தவிர தங்களுக்கிடையில் வேறு போட்டிகள் எதுவும் இல்லையென்றும் அறுத்துறுத்தித் தெளிவுபடக் கூறினர்.

மக்கள் திலகத்தின் மீது கேள்விக் கணையைத் தொடுத்தது போதும் என்ற நிலையில் சரோசா தேவி மீதும் சில கேள்விகள் தொடுக்கப்பட்டன. முதற் கேள்வி அவர் திருமணம் பற்றியது. 'தாங்கள் ஒரு சினிமா நடிகையாகவிருப்பதால், ஒரு சினிமா நடிகரையோ அல்லது சினிமாக் கலை சம்பந்தப்பட்ட கலைஞரையோ திருமணம் செய்யும் எண்ணம் உண்டா?'

### சரோஜாதேவி கூறியது

இயல்பான பெண்மைக்குரிய நாணத்துடன் சற்று வெட்கமான ஒரு நிலையில் 'இதை நான் தீர்மானிக்க முடியாது' காலந்தான் பதில் கூறவேண்டும். என்றார்.

'வரலாற்றுப் படங்களிலா அல்லது சமூகப்படங்களிலா அதிகம் நடிக்க விரும்புகிறீர்கள்' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் 'பிடித்தமான பாத்திரம் கிடைத்தால் எத்தகைய படத்திலும் நடிக்கத் தயார்' என்று கூறினார். அடுத்து 'எந்த நடிகருடன் நடிப்பதை அல்லது எந்த நடிகரை நீங்கள் கூடுதலாக விரும்புகிறீர்கள்?' இக்கேள்வியைக் கேட்க வேண்டாம் என்று தடுத்த எம் ஜீ ஆர். அதற்கான காரணத்தைக் கூறுகையில்: 'என்னைப் பத்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் திலகத்துக்கு இலங்கை மக்கள் அளித்த மகத்தான வரவேற்பு

## ஈழத்தின் சரித்திரத்தில் இணையற்ற காட்சி இது

மக்கள் திலகம் இலங்கை வருகிறார் என்ற செய்தி பரவத்தொடங்கியதும் இலங்கை வாழ் மக்களனைவரது உள்ளங்களும் பரவசத்தால் பூரித்தன. வெண்திரையில வீறு கொண்டெழுந்து வீணர்களைச்சாடி, நீதியை நிலை நாட்டி, ஏழைக்கு வாழ்வும் எத்தர்களுக்குச் சாவும் கொடுக்கும் தீராதி திரபுருடனை நேரடியாகவே காணப்போகின்றோம் என்ற பேராசை இலங்கை மக்களின் இதயங்களிலே கொழுந்து விட்டெரியத் தொடங்கியது புரட்சி நடிகருக்கு பொன்னான வரவேற்பினை நல்கி ஈழம் விழாக் கோலம் பூண்டது.

புரட்சி நடிகர் ஈழம் வரவிருக்கிறார் என்றெல்லாம் முன்பு செய்திகளடிபடுவதுண்டு. ஆனால் முன்பிருந்த அரசாங்கம் தமிழகத்திலிருந்து எவர்வந்தாலும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கத்தலைப்பட்டது. ஆகவே மக்கள் திலகம வரக்கூடும் என்ற சபலமே அற்றுப் போயிருந்தது. தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும் நல்ல காலம் பூக்கிறது என்று நல்லவர்கள் கருதினர். உண்மையாகி விட்டது—சொல்லிலும் செயலிலும் சுத்தமார்க்க சீலரான ராமச்சந்திரனைகண் முன்னே காணுவதற்கு இலங்கை வளநாட்டின் இரசிகப்பெரு மக்கள் கொண்டிருந்தபேராசை ஈடேற தேசிய அரசாங்கம் வழிவிட்டது. ஆகவே தேசிய அரசாங்கத்தை மக்கள் பாராட்டுவதில் எதுவித தப்புமில்லை.

21-ம் தேதி வியாழக்கிழமை பகல் சரியாக 10-45 மணிக்கு இந்தியன் எயார்லைன்ஸ் விமானம் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அமைதியாகவும் அடக்கமாகவும் கட்டுப்பட்டு நின்று மக்கள் திலகத்தையும் சரோஜாதேவியையும் வாழ்த்துக் கூறிவரவேற்றனர். பொலீசாரின் பேருதவி மக்களின் ஆசையும் ஆர்வமும் வெறியாக வொட்டாமற் தடுத்துவிட்டது.

### எதிர்பாராத கூட்டம்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி புரட்சி நடிகரின் வருகை இடம் பெறுமல் ஒரு நாள் முன்னதாகவே இடம் பெற்றுவிட்டது. போதுமான பத்திரிகை அறிவித்தல்களில்லாத போதிலும், மக்கள் திரள் சேர்ந்து கொண்டது பேராச்சரியத்தையே அளித்தது.

தொகுப்பு:
ஈழந்தூரசன்

மேற்புறம் திறக்கப்பட்டுள்ள வண்டியில் புரட்சி நடிகரும் சரோஜாதேவியும்எதிர் நின்ற, வீதியின் இருமருங்கும் கடல் போல் அலை மோதிய அன்பு கனிந்த மக்களுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டு 12 மைல் தூரம் பவனி சென்றனர். காலிமுகக் கடற்கரையை ஒட்டிய விடுதியை அடைந்தனர்.

### அம்பலமான இரகசியம்

மதிய உணவுக்காக புதுச்செட்டித்தெருவிலுள்ள எம். ஜி. ஆர். அவர்களின் குடும்ப நண்பரான திரு. எஸ். சற்குருநாதன் அவர்களுடைய இல்லத்துக்குச் செல்ல விருப்பதி மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. ஆனால் எப்படியோ மக்கள் மோப்பம் பிடித்துவிட்டனர் ஏறத்தாழ பத்தாயிரம் பேர் அவ்வில்லத்துக்குச் செல்லும் தெருவில் முண்டியடித்துக் கொண்டு பல மணிநேரமாகக் காத்துக கிடந்தனர். போக்குவரத்தைச் சீராக்க முடியாமல் பொலீசார் திணடாடினர். ஒன்றரை மணியளவில் மக்கள் திலகமும் குழுவினரும் திரு. சற்குருநாதன் இல்லத்துக்கு வந்தனர் கூட்டத்தின் மத்தியிலிருந்துகுழுவினரை விடுவித்துக் கொள்ள மிகவும் பிரயத்தனப்பட்டனர் பொலீசார். கட்டிடத்தின் மாடியிலேறி நின்று மக்கள் திலகமும் சரோஜாதேவியும் மக்களின் ஆனந்த வரவேற்பை ஏற்றனர். மக்கள் திலகம் வாழ்க, புரட்சி நடிகரே வாழ்க, திராவிடத்தின் தீபமே வாழ்க அறிஞர் அண்ணாவின் தூதுவனே வருகஎன்பன போன்ற வாழ்த்தொலிகள் வான் முட்டியது.

அன்றுமாலை பத்திரிகையாளர்களை கால்பேஸ் ஹோட்டலில் வைத்து மக்கள் திலகம் சந்தித்தார். தமது இலங்கை வருகை முற்றிலும் கலாச்சாரத் தூதாக விருக்கின்றதேயன்றி வேறு எந்த வகையான அரசியல் அடிப்படையாகவும் இல்லை என்பதைத் தெளிவு படுத்தினார்.

### நிருபர்கள் மத்தியில்

தமிழகத்தில் தமக்குள்ள பொறுப்புகளும் பணிகளுமே மிகவும் அதிகமாக விருக்கும் போது இலங்கையில் தாம் ஒரு கட்சி சேர்க்கவோ, புகழ் தேடவோ அல்லது பணம் சம்பாதிக்கவோ வேண்டியது அவசியமில்லை என்று கூறினார்.

'இலங்கையிலுள்ள கண்டி மாநகரில் நான் பிறந்ததாக எப்போது அறிவிக்கப்பட்டேனே, அப்போதிருந்தே இந்நாட்டுக்கு வரவேண்டும் என்ற பேராசை எனக்கு ஏற்பட்டது. இப்பொழுது சந்தர்ப்பம சரியாக விருந்தமையினால் நானும் வருகை தரமுடிந்தது.

'இலங்கைக்கு நான் வந்த தன் நோக்கங்களுள் மிகவும் முக்கியமான தொன்றுண்டு. சர்வதேசச் சந்தையிலே இடம் பிடிக்க ஏற்ற ஒரு சிறந்த படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளேன். மலாயாவில் பிறந்த ஒருவன் பல நாடுகளுக்கும் சென்று இலங்கைக்கும் வந்துசேருகிறான். கால் நடையாகச் செல்லும் இவன் இலங்கையிலும் பல ஊர்களைப் பார்க்கிறான். இந்தக் கட்டங்களை இலங்கையிலேயே தயாரிக்கத் திட்ட மிட்டுள்ளேன். இங்குள்ள நடிகையர் நடிகர்கள் ஆகியோரின் துணையினையும் இதற்கு நாட விருக்கின்றேன்.

'மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து என்னை வழியனுப்பி வைக்கவந்த அறிஞர் அண்ணா எனக்கு பல கட்டளைகளைப் பிறப்பித்தார். தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் கலாச்சாரத் தூதுவனாகச் செல்லும் நீ, நல்ல பெயருடன் திரும்பிவா, என்று கூறினார். அப்படியே நான் நல்லவனாகத் திரும்ப இங்குள்ள நல்லவர்கள் அனைவரும் எனக்கு ஒத்தாசைபுரிவார்களாக.'

### முதற்பிரச்சினை

நிருபர்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் புரட்சி நடிகர் மிகவும்சுவையான பதில்களை அளித்தார். இந்திய அரசியல் பற்றியதெளிவான கருத்துக்களைக் கூறுமிடத்து, 'முதலாவது இந்தியாவின் பாதுகாப்பே மிக முக்கியமானது; ஏனைய கோரிக்கைகள் அனைத்தும் தற்பொழுது இரண்டாவது பட்சமேயாகும்,' என்று தெரியப்படுத்தினார்.

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்புக்கான பேட்டி ஒலிப் பதிவு நடைபெற்ற பின்னர், சினிமாஸ் லிமிட்டட் அதிபர் திரு. கே. குணரத்தினம் இரவு உணவளித்தார்.

புரட்சி நடிகரும் குழுவினரும் இலங்கை வருகிறார்கள் என்ற அடிபடத் தொடங்கியதுமே இலங்கை அடங்கி

(13-ம் பக்கம் பார்க்க)

# நல்ல தொண்டும் கலையும் பேதமகற்றும் மாமருந்து

'நாட்டின் பண்பாட்டுக்கமையவே கலை விருத்தியடையவேண்டும். தொண்டு செய்வதன் மூலமே தலைவனாகி அறிஞர் அண்ணா போன்று வழிகாட்டியாக முடியும். ஆகவே கலையும் பொதுத் தொண்டும் வளரவேண்டும். இவ்விரண்டு துறைகளின் மூலமும் மக்கள் மத்தியிலே பரவியுள்ள தேவையற்ற பேதங்களைப் பொடி செய்துவிடலாம்.' யாழ்ப்பாணம் விளையாட்டரங்கு கழகத்தில் வைத்து புரட்சி நடிகர் இவ்வாறு கூறினார்.



அநியாயக்காரனுக்கு அறிவு புகட்டும் ஆசானாக புரட்சி நடிகர் தோன்றுகிறார். சினிமாஸ் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நம்பியாருக்குச் சாட்டை அடி கொடுக்கிறார்.

காங்கேசந்துறை பட்டின சபையினரால் பலாலி விமானத்திடலில் பூரணகும்பம் வைத்து வரவேற்பளிக்கப்பட்டது. மழைமிகவும் கோரமாகப் பெய்தும் ஏறத்தாழ பத்தாயிரம் மக்கள்நனைந்து கொண்டே விமான நிலையத்தில் நின்றனர். 12 மைல் தொலைவிலுள்ள யாழ். விளையாட்டரங்குவரை மக்கள் வீதியில் இருமருங்கும் நின்றமையினால், மழையைப் பொருட்படுத்தாமல் அலங்கரிக்கப்பட்ட திறந்த 'ஜீப்' வண்டியிலேயே பவனி ஆரம்பமாகியது.

யாழ். விளையாட்டரங்க கழகநிதிக்காக விளையாட்டரங்கில் நிகழ்ந்த கலைவிழாவுக்கு எம். ஜி ஆர். அவர்களும் சரோஜா தேவியும் கலந்து கொண்டனர். தேவன் (யாழ்ப்பாணம்) கலைஞர்களையும் பொதுமக்களையும் வரவேற்ற பின்னர், நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா தலைமையுரை கூறினார். தமதுரையில் 'எம். ஜி. ஆர். அவர்கள் வெறும் சினிமாக் கலைஞர் மட்டுமல்ல ஒரு மாபெரும் கொடைவள்ளல் தாம் திரையிலும் மேடையிலும்போதிக்கும் கருத்துக்களை வாழ்விலும் கடைப்பிடிக்கும் நல்லவர்', என்று கூறினார்.

சரோஜாதேவி பதிலளித்த பின்னர் புரட்சி நடிகர் வான் முட்டிய வாழ்த்தொலிகை யொலிகளுக்கிடையே கருத்துரை வழங்கினார்.

'நல்லவன் என்று பெரியோர்களால் பாராட்டப்படும் வேளையில் உண்மையிலேயே பெருமிதமடைகிறேன். எந்த வகையிலோ விளம்பரம் எங்களுக்குக் கிடைத்து விடுகிறது. கலைஞர்களாக விருப்பதனால் விரைவில் புகழ்கிடைக்கிறது. ஆனால் நாங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் வாழக்கடமைப் பட்டுள்ளோம்.

'கலைஞர்கள் ஆசிரியர்களைப்போன்றவர்கள். அவர்கள் விடும் தப்பும் தவறும் தான் அவர்களிடத்தில் பயில்பவர்களிடத்தும், அவர்களைப் பார்ப்பவர்களிடத்தும் பிரதிபலித்து விடுகிறது. ஆகவே கலைஞன் எச்சரிக்கையோடு

(13ம் பக்கம் பார்க்க)

### தொடர் கட்டுரை தொடரவில்லை

எம். ஜி. ஆர்., சரோஜா தேவி இலங்கை வருகையையும், வரவேற்பு வைபவங்கள் பற்றிய விபரங்களையும் வெளியிடுவதனால், இவ் வாரம் ஈழத்தூரசன் எழுதும் 'நட்சத்திர மண்டலத்தில் 4×8 மாதங்கள்' இடம் பெறவில்லை. அடுத்த வாரம் முதல் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பாடும் தேனாட்டை மிதிக்க மகிழ்வூட்டுகிறது

## கலைவாணரின் நினைவும் பகுத்தறிவுக் குரலும்

'புரட்சிக்கவிஞரின்பாடலைக் கூறி என்னை இராவணனாக்கிவிட தோழர் இராசதுரை முயலுகிறார் போலும். ஆனால் பெயரளவில் நான் இராமச்சந்திரனாகவே வந்திருக்கிறேன். பகுத்தறிவு ஒளிபரப்ப முதன் முதலில் புறப்பட்டதும், கலைவாணரின் ஞாபகச் சின்னம் அமைந்துள்ளதுமான மீன்பாடும் தேன் நாட்டிலே காலடி வைக்க உண்மையிலேயே பெருமையடைகின்றேன்' இவ்வாறு மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் மட்டக்களப்பு மைதானத்தில் வைத்துக் கொடுக்கப்பட்ட பொதுவரவேற்புக்கு நன்றி தெரிவிக்கும் போது கூறினார்.

விசேடவிமானம் ஒன்றிலே மக்கள் திலகம் சரோஜாதேவி குழுவினர் மட்டக்களப்புக்கு 24-ம் தேதி பகல் 3 மணிக்குப் புறப்பட்டனர். 4.15க்கு விமானம் மட்டக்களப்பை அடைந்தது. முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை அவர்கள் புரட்சி நடிகரின் கழுத்திலே மாலை சூட்டினார். மக்கள் திலகம் அவரை வாரி அணைத்துக் கொண்டார். இரண்டாவது உறுப்பினர் வத்திப் சின்னலெப்பை, மூதவை உறுப்பினர் திரு. மூ. மாணிக்கம், நகரபிதா திரு. ஜே. எல். திசவீரசிங்கம், பட்டிருப்பு உறுப்பினரான திரு. சி. மூ. இராசமாணிக்கம், கற்குடா உறுப்பினர் திரு.கே. டபிள்யூ. தெய்வநாயகம் ஆகியோரும் மட்டக்களப்பு பிரமுகர்களும் மலர் மாலைகளைச் சூடி வரவேற்றனர். விமான நிலையத்தில் சாரணச்சிறுமியர் அணி வகுத்து நின்றனர். இங்கேயும் வரவேற்பு வைபவம் நடைபெற்ற மைதானத்திலும் சாரணச்சிறுவர்கள் மக்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை ஏற்று வெற்றிகரமாக்கினர்.

### ராஜபவனி

ஊர்வலத்தின் முன்பாக பொலீசார் அணி வகுத்து மோட்டார் சைக்கிளில் சென்றனர். பெரிய அரசியற் தலைவர்களுக்கு அளிக்கப்படும் மிக உயர்ந்த வரவேற்பு மட்டக்களப்பில் மக்கள் திலகத்துக்கும் சரோஜா தேவிக்கும் அளிக்கப்பட்டது.

தலைமை தாங்கிப் பேசிய திரு. செ. இராசதுரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதையான 'தென்திசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன் எந்தன் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குதடடா" என்பதைக் கூறி வரவேற்றார். சரோஜாதேவி பதிலளிக்கும் போது, இத்தகைய அன்பும் அடக்கமும் ஆர்வமும் அமைதியும் கொண்ட வரவேற்பு தமது மனத்தை விட்டு என்றுமே மறையாது என்று கூறினார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மக்கள் திலகம் கூறியதாவது:-

'மட்டக்களப்பு கலைவாணரின் நினைவுச்சின்னமான விபுலானந்தமண்டபத்தைத் தாங்கி நிற்கும் பிரதேசம் என்பதை அறிந்து இம்மண்ணிலே கால்வைக்க மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மீன்பாடும் தேனாடாம் இம்மாநகரம் எனக்குப் புதுமையான நகரமல்ல. பெரியார் ஈ. வே. ரா. வழியில் அறிஞர் அண்ணாவின் பாதையில் பகுத்தறிவுக் கொடியினையுயர்த்திய முதல் நாடு இம்மட்டக்களப்பு என்பது எனக்கு தெரிந்த விடயமே. அந்த ரீதியில் நாங்கள் அனைவரும் உறவினர்களே.

கட்டுப்பாடும் ஒழுங்கும் அன்பும் அமைதியும் கலந்த இம்மகத்தான வரவேற்பை எங்களுக்கு அளித்த உங்கள் அனைவரையும் நான் என்றும் நினைவு கூருவேன். இந்நாட்டுக்கு மென்மேலும் நான் வந்து என்னாலான பணிகளைப் புரிய நல்ல வாய்ப்புக்களை நல்குவீர்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.'

மட்டக்களப்பில் மழையில்லாத காரணத்தால் விழா மிகவும் சிறப்பாக அமைந்தது.

திரு. ஜோசப் நன்றி கூறினார். வாடிவீட்டில் நடைபெற்ற தேனீர் விருந்துக்குப் பின்னர் மீண்டும் விமானத்திலேறி யாழ்ப்பாணம் காங்கேசந்துறை விமான நிலையத்தை இரவு 7 மணியளவில் அடைந்தனர்.

## மக்கள் திலகத்துக்கு....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் ஒரே மழை பொழியத் தொடங்கி விட்டது. 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்ற பண்டையப் பாடலை இலங்கை மக்கள் "நல்லார் ஒருவர் வருவார், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுதே மழை" என்று மாற்றிப் பாடத்தொடங்கிவிட்டனர். 22ம் தேதி காலையில் இலங்கையின் தென்மேற்குக் கடற்கரையோரமாக புரட்சி நடிகர் குழுவினர் இடங்களைப் பார்க்கச் சென்று திரும்பினர்.

மாலையில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடிக நட்சத்திர விழா நடைபெற்றது. விளையாட்டரங்கின் உள்ளே கூடியிருந்த மக்களைப் பார்க்கிலும், வெளியே தெருக்களிலே இலட்சோப இலட்சம் மக்கள் கொட்டும் பெருமழையில் நனைந்து கொண்டு மக்கள் திலகத்துக்கும் சரோஜாதேவிக்கும் வாழ்த்துக் கூறக்காத்துக் கிடந்தனர்.

### கொட்டும் பெருமழையில்

விளையாட்டரங்கில் நடத்தப்படவிருந்த கலைநிகழ்ச்சிகள் எதுவுமே நடைபெறவில்லை. விழாவுக்குத் தலைமை தாங்கிய உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா உரை நிகழ்த்துகையில், 'எம். ஜி. ஆர். அவர்கள் உண்மையிலேயே மக்கள் கலைஞர்தான் என்பதற்கு அவரைப் பார்ப்பதற்காக பெருமழையிலும் நனைந்து கொண்டு இனமதபேதமின்றி மக்கள் பல்லாயிரக் கணக்கில் தெருக்களில் கூடி நிற்பதே சாட்சியாகும்' என்றார். கொழும்பு நகராண்மைக் கழகத்தலைவர் திரு. வின்சன்ட் பீரீஸ் அவர்களும் வாழ்த்துரை கூறி வரவேற்றார்.

கலைநிகழ்ச்சிகள் எதையுமே மக்கள் பார்வையிட விரும்பாது, மக்கள் திலகத்தையும் சரோஜாதேவியையும் காணவே துடித்தனர் என்பதை உணர்ந்த விழாக் குழுவினர், கொட்டும் மழையில் குடை பிடித்த வண்ணம் இருவரையும் மேடையேற்ற முயன்றனர். தம்மைப் பார்ப்பதற்காகவே பெருமழையையும் பொருட்படுத்தாமல் தோய்ந்து வடிந்து நிற்கும் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு நிற்கும் போது, தான் மட்டும் பாதுகாப்புத் தேடுவது தகாத செயலாகும் என்று கூறிக்கொண்டு குடையை அப்புறப்படுத்திவிட்டு திறந்த ஜீப் வண்டியிலேறி இருவரும் மக்கள் குழுமியிருந்த பகுதிகளுக்கெல்லாம் நனைந்து கொண்டே சென்றனர்.

23ம் திகதி நுவரெலியாவில் நடைபெற்ற மலைநாட்டு லட்சுமி தெரிவுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்றனர். தேர்வுக் குழுவில் சரோஜாதேவி ஒரு நீதிபதியாகவிருந்தார். முதலாவது இரண்டாவது மூன்றாவது பரிசுகளைப் பெற்றவர்களான, முறையே செல்வி எம். இராகம்மா (கொத்தமல்லி—கம்பளை), செல்வி கே. அழகம்மா (பதுளை), செல்வி என். தெய்வானை ஆகியவர்களுக்கான பரிசில்களை மக்கள் திலகம் வழங்கினார்.

பின்னர் உடப்புசலாவை சென்று பல தோட்டத் தொழிலாளர்களைக் கண்டனர்.

நுவரெலியாவில் நடந்த மேடைக் காட்சியில் ஒரு அங்கவீனர் நடக்க முடியாமற் சென்று எம். ஜி. ஆர். அவர்களின் பாதங்களைத் தொட்டு, தமது கஷ்டமான குடும்பச் சூழ்நிலையைக் கண்ணீரால் வெளியிட்டார். யாருடைய பணமோ மக்கள் திலகத்திடம் அப்போது ரூ 500 இருந்தது. அதனை அப்படியே எடுத்து அவரிடம் கொடுத்து விட்டார். பின்னர் அத்தொழிலாளி ஒரு சிங்களவர் என்று தெரியவந்தது.

## நல்ல தொண்டும்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

'கலை வளர்க்கும் கல்விமான்கள் நிறைந்த யாழ்ப்பாண நாட்டிலே நான் கலையைப்பற்றியோ, தமிழைப் பற்றியோ புகழ்ந்து கூறுவது முடியாது. நான் ஒரு கலைஞன் மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலிலும் சம்பந்தப் பட்டுள்ளவன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அறிஞர் அண்ணாவின் ஆணைக்கு அடங்கி நடக்கும் தொண்டனுமாவேன்.

'கலை அந்தந்த நாட்டுக்குரிய பண்பாட்டுக்கு ஒட்டியே பரிணமிக்கவேண்டும். தொண்டு புரிவதன் மூலம் ஒருவன் படிப்படியாக தலைவனாகி [illegible] பேரல், சிறந்த வழிகாட்டி [illegible] முடியும்.

'இங்குள்ள தலைவர்கள் நல்ல தொண்டர்களாக நாட்டுக்கும் மொழிக்கும் பணியாற்றியவர்களே. எங்களைப் போன்றவர்கள் இந்நாட்டுக்கு வருகைத்தரவும் இவர்களே உதவியுள்ளனர். மனிதனை மனிதனிடத்திலிருந்து பேதம்செய்து ஒற்றுமையைச் சிதறடிக்கவைக்கும் தீமைகளை அகற்ற, தலைவர்களும் தொண்டர்களும் பாடுபடவேண்டும்.'

யாழ். விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் வருவாயில் நான்கில் ஒரு பங்கை காங்கேசந்துறை பட்டினசபை ஏற்படுத்தியுள்ள புயல்நிவாரணநிதிக்கு வழங்கவேண்டுமென்று புரட்சி நடிகர் மேடையில் கூறினார்.

[illegible]வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் நடனமும் இடம்பெற்றது.

## எமது விமர்சனம்

என்டர்டெயின்மென்ட்ஸ் அளிக்கும்

## கலைக்கோவில்

தயாரிப்பு : பாக்கியலட்சுமி புரொடக்ஷன்ஸ்

தமிழகத்தின் தனியுடமையான வீணைக்காக ஸ்ரீதர் ஒரு திரைக் கதையை உருவாக்கி ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திக் கொண்டார். பலதரப்பட்ட ரசனைகளையுடைய படங்களை அளித்த ஸ்ரீதர் முற்றிலும் கலையம்சம் கொண்ட கலைக்கோயிலைத் தயாரித்து கலாபிமானிகளின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டார்.

வீணையின் இசையிலே லயித்து, தமது வாழ்வை வீணைக்காகவே அர்ப்பணித்துவிட்ட நித்தியானந்தம் தாம் ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடாமலிருந்தார். அவருடைய பெயர் கூறவும் வீணைக்கு புத்துயிரளிக்கவும் அவருக்கு வாரிசு கிடையாதே என்று ஏங்கிய நிலையிலிருக்கும் போது கண்ணன் என்னும் அனாதை அவரை அடைகிறான். வீணையில் தமக்குத் தெரிந்த அத்தனை கலை நுணுக்கங்களையும் கண்ணனுக்குப் புகட்டி அவனை அத்துறையில் மேதையாக்கி விடுகிறார்.

தனது மருமகளையும் அவனுக்குத் துணையாக்கி, அவனையும் சுவீகாரம் எடுத்துக் கொண்டார். தந்தை கலைத் துறையில் இருக்கும் வரை, வீணையில் புகழ் கிடைக்க முடியாது என்பதை துர்ப்புத்திமதியினால் கண்டு கொண்ட கண்ணன் பல தீய வழிகளில் சென்று பெரியவரின் மனதைப் புண்படுத்துகிறான். வேறோர் நடனமாதிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து குடியிலும் உழலுகிறான்.



இறுதியில் நோய்வாய்ப்பட்டு தந்தையின் தியாகத்தில் தனயன் திறமையை மீண்டும் பெறுகிறான்.

தியாகமே உருவான கலைஞர் நித்தியானந்தமாக எஸ். வி. சுப்பையா தோன்றுகிறார். உணர்ச்சிகளை வெளிக்காட்டி வீணை இசையினை வழங்கும் போதும் இரசனையில் திளைக்கும் போதும் மிகவும் உயிரோட்டமான நடிப்பை வெளிப்படுத்துகிறார். கண்ணனாக முத்துராமனும், மனைவியாக சந்திரகாந்தாவும், நடன நங்கையாக ராஜ்ஸ்ரீயும் தோன்றுகின்றனர். சபாக் காரியதரிசியாக வந்து சக்கை போடு போடுகிறார் நாகேஷ்.

"தேவியர் இருவர் முருகனுக்கு" என்று கவிஞர் எழுதிய பாடலுக்கு விஸ்வநாதன்-ராமமூர்த்தியின் இசையும், சுசீலாவின் குரலும் மிகவும் சிறப்பாகவுள்ளன. பாடலைப் படமாக்கியுள்ள கோணங்கள் உச்சமாக அமைந்துள்ளன.

மற்றும்பல முரளிகிருஷ்ணா பாடும் 'தங்கரதம் வந்தது', சீர்காழி கோவிந்தராஜன் பாடும் 'அறிவெனும் கல்வி' ஆகிய பாடல்களும் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டுள்ளன. சிட்டி பாபுவின் வீணைகானம் தெவிட்டாத விருந்து.

ஒரு புதிய சூழ்நிலையில் அமைந்த இப்படத்துக்குக் கலைஞர்களும் கலை ஆர்வம் கொண்ட இரசிகர்களும் பெரிதும் ஆதரவளிப்பார்கள் என்பது திண்ணம்.

—நாதன்

## கண்ணதாசன் படத்தில் எம். ஜி. ஆர்.

கவிஞர் கண்ணதாசன் தயாரிக்கவிருக்கும் திரைப்படம் ஒன்றில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தோன்றவிருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இப்படம் யுத்த சம்பந்தமான படமாகவிருக்கும் என்று தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் நாம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேடியான கதை இலக்கியங்கள் வளர்வுற்றன. இவைகள் நீண்ட நெடுங் கதைகளாக மட்டுமல்லாமல், சிறு கதைகளாகவும் தோன்றின. சிறுகதை உருவத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் மேலைத் தேசத்தவர்களே. பிரான்ஸ் நாட்டு மாப்பசான், சிறுகதையின் பிதாமகராக இன்றும் மதிக்கப்படுகிறார். மாப்பசானைத் தொடர்ந்து மேற்கு நாடுகளில் பல சிறுகாதாசிரியர்கள் தோன்றினர். இக்கால கட்டத்தில் தமிழ் இலக்கியத்தின் ஒரு உருவமான சிறுகதை இலக்கியத்தை-தமிழ் மொழியில் படைத்தவர் வ. வே. சு. ஐயராவர். இவர் இந்திய துணைக் கண்டத்தில் அக்காலத்தில் நிகழ்ந்த சுதந்திர இயக்கத்தைப் பின்னணியாகவும், சமுதாயத்தில் ஏற்பட்ட மூடக்கொள்கைகளை வெளியிடும் கருவியாகவும் சிறுகதை இலக்கியத்தை மேற்கொண்டனர். ஆனல் இந்த உணர்ச்சியைத் தொடர்ந்தும் பின் எழுதிய சிறு கதாசிரியர்கள் தமது சிறுகதை இலக்கியத்துக்குள் வடித்துக் காட்டினர். இந்த நிலை தொடர்ந்து சென்றது.

### மறுமலர்ச்சியாளர்

தென்னகத்து எழுத்தாளர்களைப் பின் பற்றி ஈழத்தில் சிறுகதை இலக்கியத்தைப் படைத்த பெருமை இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், சம்பந்தன் ஆகியோரைச் சாரும், இவர்களுடன் தொடர்ந்து, அ. செ. முருகானந்தன், தி. வரதராசன், சு. இராசநாயகன் ஆகியோர் மறுமலர்ச்சிக் கழகத்தை ஆரம்பித்து இலக்கிய சேவை செய்தனர்.

இவர்களைத் தொடர்ந்து, சிறுகதை இலக்கியம் ஈழத்தில் இளம் எழுத்தாளர்களை எழுதத் தூண்டியது. அதன் பலனாகப் பல சிறுகதையாசிரியர்கள் எம்மிடையே தோன்றினர்.

ஆனல் 1948-ம் ஆண்டில் ஈழம் சுதந்திரம் அடைந்த பின்புதான் எழுத்தாளர்களின் பட்டியல் நீண்டு செல்கின்றது. இவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதோ அன்றேல் இலக்கியத்தரத்தை விமர்சிப்பதோ சாத்தியமானதல்ல. ஆனல் இவர்கள் இலக்கியத்தில் இடம்பெறக் கூடிய அளவுக்குச் சேவை செய்து இடம்பெறக் கூடிய அளவுக்குச் சேவை செய்துவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனல் அதுவரை இந்தியப் பத்திரிகைகளை அடியொற்றி நின்று தமது ஆக்கங்களைச் செய்து வந்தவர்கள் போலன்றி தனித்து நாட்டின் பழக்க வழக்கப் பண்பாட்டை ஒட்டிய ஆக்கங்களைச் செய்ய முயன்றனர். அந்த முயற்சியில் இறங்கியவர்கள் பலர்.

இந்த நாட்டில் இலக்கியத்தின் அம்சமான சிறு கதை இலக்கியம் தனக்கென ஒரு தனிப்பாணியில் வளரத் தொடங்கியது.

### எமது நிலை

தமிழகத்தில் கு. ப. ரா., புதுமைப்பித்தன், லா. ச. ரா., தி.ஜானகிராமன், சிதம்பரரகுநாதன் ஆகிய சிறுகதைச் சிற்பிகளின் இடத்தை இவர்கள் எட்டாவிட்டாலும், ஈழநாட்டின் தனித்துவ நிலையைப் பிரதிபலிக்கக் கூடிய ஆக்கங்களை இவர்கள் படைத்திருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இந்த நன்முயற்சி இன்று பட்டியல் நீண்டதான எழுத்தாளர்களை உருவாக்கித் தந்திருக்கிறது. அதிலே தாம் தாம் வரித்துக்கொண்ட அரசியல் கோட்பாடுகளுக்கு அமைந்து பிரச்சார இலக்கியமாகக்கொள்ள முனைந்தவர்களைக் கழித்துவிட்டால், சிறுகதையின் சிறப்புக்கு மட்டும் உயர்விந்த இலக்கிய அந்தஸ்தை நிறுவிய சிலரை யாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

கவிதைத் துறையில் ஈழம் என்றும் பின் தங்கிய நிலையில் இல்லை. இன்றைய தமிழகத்தில் இல்லாத நல்ல வளர்ச்சியை ஈழம் பெற்றிருக்கின்றது என்பது மறைக்க முடியாத உண்மை. விமர்சனம், கட்டுரை, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகள் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இங்கு இருக்கின்றது என்பதை நாம் மறுத்துவிடுவதற்கில்லை.

## மத்திய வங்கியில் இலக்கிய மன்றம்

தலை நகரிலுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களை அவ்வத் திணைக்களங்களில் தமிழ் இலக்கிய மன்றங்கள் உருவாகிவருவது வாசகர்கள் அறிந்ததே. ஏற்றுமதி இறக்குமதித் திணைக்கள இலக்கிய மன்றம் பெரிய அளவில் பாரதி விழா ஒன்றைக் கொழும்பில் நடாத்தியதைத் தொடர்ந்து, இதுவரை தமிழ் இலக்கிய மன்றங்களை நிறுவ முற்படாத திணைக்களங்களும் இப்பொழுது இத்தகைய மன்றங்களை நிறுவ முற்பட்டுள்ளன.

கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கியில் உள்ள தமிழ் ஊழியர்கள் 'மத்திய வங்கித் தமிழ் இலக்கிய மன்றம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவியதுடன் ஏனைய மன்றங்களுக்கு முன்மாதிரியாக ஒரு பெண்ணை மன்றத்தின் தலைவி (செல்வி புஸ்பா காசிப்பிள்ளை) யாக்கியுள்ளார்கள்.

மன்றச் செயலாளராக திரு. எஸ். துரைசிங்கமும், துணைச் செயலாளராக செல்வி பெ. பிள்ளைநாயகமும், பொருளாளராக திரு. குமாரசாமியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## சமாதான நீதவானக நியமனம்



மினுவாங்கொட பிறீ லங்கா இன்டஸ்ட்ரீஸ், நிறுவனத்தைச் சேர்ந்த திரு. கதிரவேலு தர்மலிங்கம் நீர்கொழும்பு மாவட்ட சமாதான நீதவானக அரசாங்கத்தால் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் அகில இலங்கை சிறு கைத்தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவரும், சாதி சமயப் பாகுபாடற்ற ஓர் சமூகத் தொண்டனுமாவார்.

## புறாணி செல்லும் பீட்டர் மாஸ்டர்



யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் தமிழரசுக் கோட்டையென்று வர்ணிக்கப்படும் கன்டிக்குழி வட்டார மாநகர உறுப்பினர் திரு. பீ. ச. சோமசுந்தரம் கணித ஆசிரியராகப் பணிபுரியும் பொருட்டு தூரக் கிழக்கிலுள்ள புறாணிக்குச் செல்லவிருக்கிறார். புறாணிக்குச் செல்லும் காரணத்தால் யாழ்ப்பாணம் புனித யோவான் கல்லூரியின் ஆசிரியர் பதவியில் இருந்து ஏற்கனவே இளைப்பாறிவிட்ட திரு. சோமசுந்தரம் கடந்த வார இறுதியில் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தைத் தொடர்ந்து தமது மாநகர உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

1961-ம் வருடத்தில் இருந்து கன்டிக்குழி வட்டாரத்தில் உறுப்பினராக விளங்கி வந்திருக்கும் திரு. சோமசுந்தரம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சொந்தக்காரர் பரம்பரையில் உதித்த கிறீத்துவ பாதிரியார் சுவாம் சங்கரப்பிள்ளை சோமசுந்தரத்தின் புதல்வராவார். திரு. சோமசுந்தரத்தின் தாயார் தமிழறிஞர் ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் வழி வந்தவர். நல்ல தமிழ்க் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் தமிழார்வம் மிக்க இவர் எடுத்துக் கொண்ட ஊக்கமே யாழ். மாநகர சபை தன் சகல கருமங்களையும் தமிழ்மொழியில் நடத்தி வருவதற்குக் காரணமாகும்.

திரு. சோமசுந்தரம் மாத்தளையில் புனித. தோமா கல்லூரியிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் சிறிது காலம் கணித ஆசிரியராகக் கடமையாற்றியிருக்கிறார். 'சதுரங்க' விளையாட்டில் அதிக ஈடுபாடுள்ள இவர் பல தடவைகளில் அகில யாழ்ப்பாண வீரராகத் தெரியப்பட்டார். இவ்வருடம் நடைபெற்ற வித்தாச்சியாகக் கிண்ணத்துக்கான போட்டியிலும் இவரே முதற் பரிசு பெற்ருா.

ஆரம்ப காலம் தொட்டே தமிழரசுக்கட்சியின் விடுதலை இயக்கங்களில் தீவிர பங்கு கொண்டு உழைத்து வந்திருப்பவரான இவர் 'நெருக்கடி காலங்களில் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டு, கட்சியின் பெருந் தலைவர்கள் யாவரும் தடுப்புக்காவலில்வைக்கப்பட்ட வேளைகளில் விடுதலை இயக்கம் தடைப்படாது தொடர்ந்து நடைபெறுவதற்குப் பெரிதும் காரணமாக விருந்தவர். சிங்கள சிறி எதிர்ப்பு வழக்கில் தமது துணைவியாருடன் சிறைத் தண்டனையையும் அனுபவித்திருக்கிறார்.

பட்டதாரி ஆசிரியராதலால் சிறையில் அவருக்கு உயர் வகுப்பில் இருக்க சிறை அதிகாரிகள் வசதி செய்து கொடுத்த போதும் சாதாரண சிறைக் கைதிகளாகச் சென்ற தொண்டரில் தானும் ஒரு தொண்டராக இருக்க விரும்பிய பீட்டர் உயர் வகுப்பில் வைக்கப்படுவதற்கு மறுத்துவிட்டார். கட்சியின் கட்டளைகளை நிறைவேற்றுவாரே யன்றி எக்காலத்தும் கட்டளை குறித்து கேள்வி எழுப்பாதவர் இவர். கடந்த இரு மாநகரசபைத் தேர்தல்களிலும் தமிழரசு வேட்பாளராக கன்டிக்குழி வட்டாரத்தில் தேர்வுக்கு நின்று அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று கன்டிக்குழி வட்டாரத்தைத் தமிழரசுக் கோட்டை என்று எதிரிகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்தவர். தமிழரசுத் தந்தையைப் போல சாதுவான இவர் தமது தலைவரைப் போல் அரசியலிலும் நேர்மையைக் கடைப்பிடித்து மக்கள் ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார். திரு. சோமசுந்தரத்தின் புறாணி விசயம் இலங்கைத் தமிழரசுக் கட்சி வட்டாரத்தினருக்கு பெரு நட்டமாகும் என்றாலும் தவறாகாது.என்றாலும் அவரின் நோக்கம் வெற்றிபெற வாழ்த்துவோமாக.

## மக்கள் குரல்

### 'வேதாளத்'திற்கு நன்றி

'வேதாளம்' எழுதும் 'இலக்கிய உலகம்' நம் மனதைக் கவர்கின்றது. 'கடுகு சிறிது காரம் பெரிது' என்பார்கள். அது போல சுதந்திரனின் 16 பக்கங்களில் வரும் விடயங்களுள் மிகச் சிறிதாகக்காணப்படும் அந்த இலக்கிய உலகு நம் கண்களை முதலில் கவர்ந்திழுக்கும் சக்தி கொண்டிருக்கின்றது.

இலக்கிய உலகில் உண்மையை உள்ளவாறு கூறும் வேதாளத்தின் மனத்திண்மையை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். பாராட்டவேண்டியவர்களை உளமாரப் பாராட்டும் வேதாளம், தவறுகளையும் சுட்டிக் காட்டுவதைக் கண்டு நான் மகிழ்கின்றேன். ஈழத்து இலக்கிய உலகம் வளர வேதாளம் செய்யும் பணி பாராட்டற்குரியது.

—இ. யோகேஸ்வரி,
மூளாய், சுழிபுரம்.

## தமிழரசார் பங்குபற்ற வேண்டும்

அடுத்த ஆண்டு சித்திரைத் திங்களில் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு கொழும்பு விவேகானந்த சபையும், கொழும்புத் தமிழ்ச் சங்கமும், [illegible] சைவ பரிபாலன [illegible] முறையே ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்பி வைக்க விருப்பதாக வெளிவந்த செய்தி அறிந்து மகிழ்கிறேன். அதே நேரத்தில் எமது நாட்டுத் தமிழ் பேசுமினத்தின் ஒரே உயிராய் விளங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு பிரதிநிதியையும், நாம் அங்கம் வகிக்கும் தேசிய அரசாங்கம் ஒரு பிரதிநிதியையும் அனுப்பி வைத்தல் அவசியமாகும்.

அரசாங்கத்தின் சார்பில் ஒரே தமிழமைச்சரான திரு. திருச்செல்வம் அவர்களை அனுப்பி வைப்பது சாலவும் பொருத்தமானதாகும். இ. த. அ. கட்சியின் சார்பில் மட்டுமல்லாது, இலங்கைத் தமிழறிஞர்கள் சார்பிலும் கலந்து கொள்ளும் ஆற்றலையும், திறமையையும் ஒருங்கே பெற்றவர் செந்தமிழ் கலைமணி திரு. கா. பொ. இரத்தினம் என்பதை யாரும் மறுப்பவர். அவர்களை கொழும்பு விவேகானந்தசபை தனது பிரதிநிதியாக அனுப்ப முடிவு செய்திருப்பதால் கட்சியின் பிரதிநிதியாக கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை அனுப்பி வைக்க வேண்டும். இது இ. த. அ. கட்சியின் தலையாய கடமையாகும். கட்சியின் ஆட்சிக் குழு இது பற்றிக் கூடி உடன் முடிவெடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

[illegible]

## பொருளாதார...

(7ம்-பக்கத் தொடர்ச்சி)

தரத்தை உயர்த்த முனைகின்ற திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். இத்தகைய திட்டங்களின் ஆரம்ப காலம் சற்று கஷ்டமான நிலையை உருவாக்கும். ஆனல் மக்களின் வாழ்க்கைத் தரம் நிலையானதாக அமைய இதுவே நிரந்தர வழியாகும் இதற்கு மக்களின் தியாகமும் அவசியம். அரசியலாரின் தீவிர நோக்கமும் அவசியம். ஆகவே பொருளாதார வளர்ச்சியை முதல் நோக்காகக் கொண்ட திட்டங்கள் உருவாக சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கைச் செலவு குறையும்.

தேசிய அரசாங்கம் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் உருவாக்கப் போவதாக அறிவித்துள்ள 'ஐந்தாண்டுத் திட்டத்தில்' இத்தகைய குறைபாடுகள் நிச்சயமாக இருக்க மாட்டாது என்று நம்புகிறோம். அந்த ஐந்தாண்டுத் திட்டம் பொருளாதார வளர்ச்சியை முதல் நோக்காகக் கொண்டதாக அமையட்டும். அப்பொழுது தான் நாட்டில் நிலையான ஒரு வாழ்க்கை முறை அமைந்து ஓரளவு பொருளியற் சமத்துவம் தோன்ற முடியும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

## எதற்காக...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திக் கூறினல் அது உண்மைக்கு மாறாக அதிகப்படியான ஒன்றாக இருக்கும், தான் அல்ல என்று கூறுவதை இச்சந்தர்ப்பத்தில் அவர் விரும்ப மாட்டார், ஆகவே இக் கேள்வி தவிர்ந்த வேறு எதையும் அவரிடம் (சுரோசாதேவி) கேளுங்கள்' என்றார்.

ஒன்றரை மணி நேரங்களுக்கு மேலாக கலகலப்பாக நடைபெற்ற இச்சந்திப்பு பத்திரிகையாளர்களுக்கும் மக்கள் திலகத்திற்கும் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

தொகுப்பு : பூங்குன்றன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## பாரோர் போற்றும் பெரியார்கள் (5)

# வின்ஸ்டன் சர்ச்சில்

—அன்ரனி பெர்ணண்டோ—

நூலசிறந்த ஆங்கில நூலாசிரியராக இருந்து இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்றதோடு அரசியல் மேதை என்றும் புகழ்பெற்றார் இங்கிலாந்தின் பிரதமராகவிருந்த சர். வின்ஸ்டன் சர்ச்சில். அக்ஸ்போர்ட்டில் பிளென்கெம் அரண்மனையில் ஒரு வீட்டில் 1874ம் ஆண்டு நவம்பர் 30ம் திகதி இவர் பிறந்தார். ஆங்கிலேயரான ரண்டோல் பிரபுவும் அமெரிக்கப் பெண்ணான ஜெனி பெண்மணியாவும் இவரது பெற்றோர்களாவர்.

சர்ச்சிலின் தந்தை சிலகாலம் இங்கிலாந்தின் நிதி அமைச்சராகப் பணிபுரிந்தவர். செல்வம் கொழிக்கும் இந்தப் பிரபுவின் குடும்பத்தில் சர்ச்சில் தான் மூத்த புதல்வன் இவர் சிறுவயதில் துடுக்குத்தனமும் துணிச்சலும் நிறைந்தவராக இருந்தார். மற்றச் சிறுவர்களைப் போல் இவரும் பள்ளிக்கூடம் போய்வந்தார் எனினும் இவருக்குப் படிப்பு என்பது கொஞ்சமாவது மூளையில் ஏறவில்லை. வரலாற்று நூல்களை வாசிப்பதில் மட்டும் ஏனோ மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். வாசிப்பதை வாசித்துவிட்டுச் சும்மா இருந்தாரா? அதுதான் இல்லை அவற்றிலுள்ள போர்முறைகளைக் கவனமாக வாசித்துவிட்டு விளையாட்டாகச் சண்டைகள் செய்து பார்க்கவும் தொடங்கிவிட்டார்.

சர்ச்சிலும் தன்னைப்போல் நிதி அமைச்சராக வர வேண்டும் என்பது தந்தையின் ஆசை. எனவே தன் மகன் படிப்பில் கவனமின்றி உதவாக்கரையாக வளர்வதைக் கண்டு அவருக்குத் துக்கமாக இருந்தது. சண்டைப் பிரியனான இவன் ஒரு போர் வீரனாகியாவது நாட்டுக்குப் பயன்படட்டும் என்று அவர் சர்ச்சிலை இராணுவப் பள்ளிக்கூடமொன்றில் சேர்த்துவிட்டார். போர்முறைகளில் நன்கு பயிற்சிபெற்றுத் தேறிய சர்ச்சில் விரைவில் குதிரைப்படைத் தலைவராகிவிட்டார்.

சர்ச்சில் ஒரு சிறந்த போர்வீரனாக விளங்கியதோடு போர்முனைச் செய்திகளைச் சுவைபடப் பத்திரிகைகளில் எழுதிப் பணமும் புகழும் சம்பாதித்தார். நிறைய எழுதியும் பேசியும் அனுபவப்பட்டதின் பயனாக இவர் நாளடைவில் புதுப்புதுச் சொற்களை எடுத்தாண்டு பேசியும் எழுதியும் மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தார். ஆங்கிலச் சொற்களை அதிகமாக எடுத்தாண்ட பெருமை இவருக்குத்தான் உண்டு. சர்ச்சில் பெருந்தொகையான புத்தகங்களை எழுதிக் குவித்தவர் 1953ம் ஆண்டு இவருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கிடைத்தது.

இராணுவ வாழ்க்கையில் அலுப்புத்தட்டியதோ என்னவோ இருபத்தியாறாவது வயதைத் தாண்டும்போது சர்ச்சில் அரசியலில் மோகம் கொண்டுவிட்டார். உடனே தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினராக வெற்றிபெற்றார். சில வருடங்களுக்குள்ளேயே அமைச்சராகும் வாய்ப்பைப் பெற்ற இவர் விரைவில் கடற்படை அமைச்சர் பதவியைப் பெற்றுப் பின்னர் வர்த்தக அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் பணியாற்றினார். மகன் நிதி அமைச்சரானதைப் பார்த்து மகிழும் பாக்கியம் கிட்டுமுன்பே சர்ச்சிலின் தந்தை இறந்து போனதுதான் பெருங்குறையாக இருந்தது. அவர் உயிருடன் இருந்திருந்தால் தனது உதவாக்கரை மகன் பின்னர் பிரதம அமைச்சராகவும் இருந்து செய்த சாதனைகளைக் கண்டு பூரித்துப் போயிருப்பார்.

சிறந்த சிந்தனையாளர் சர்ச்சில். அத்தோடு துணிச்சல், நேர்மை, அன்பு, பண்பு யாவும் நிறையப் பெற்றவர். 1908ம் ஆண்டு இவருக்கு மிகப் பொருத்தமான கிளமென்ரைன் என்ற பெண்மணி மனைவியாக வந்து வாய்த்திருந்தார். கணவனும் மனைவியும் சேர்ந்து யுத்த காலத்தில் புரிந்த அரும்பணியை இங்கிலாந்து தேசம் என்றுமே மறவாது. தொண்ணூறு வயது வரை உயிருடனிருந்த பழுத்த அரசியல்வாதியான வின்ஸ்டன் சர்ச்சில் 1965 சனவரி 24ம் தேதி காலமானார்.

## 'மாணவ மணி'

கொழும்பு சாந்தி சேகர் கல்லூரி மாணவர்கள் வெளியிடும் 'மாணவமணி' என்ற கையெழுத்துப் பத்திரிகையின் இரண்டாவது இதழ் கிடைக்கப் பெற்றேன். அழகான முறையில் அமைந்திருக்கும் இவ்விதழில் குறிப்பிடக்கூடியளவு விடயங்கள் இல்லை யென்பதைக் குறிப்பிட்டேயாகவேண்டும். இச்சிறிய இதழுக்கு ஒரு பெரிய தொடர்கதை தேவைதானா என்பதை மாணவர்கள் தீர்மானிக்கட்டும்.

—வளர்மதி மாமா

விநோத சொல் வேட்டைப் போட்டி முடிவும், சரியான விடைகளும் அடுத்த இதழில் வெளியாகும்.

- உங்கள் பகுதியான வளர்மதியில் பிரசுரிப்பதற்கு சிறு கட்டுரைகள், நகைச்சுவைக் கதைகள், விடுவிடைகள், சுவையான செய்திகள் தேவைப்படுகின்றன.
- ஒவ்வொரு விடயமும் முழு அளவு தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
- தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாகவும், நிறைய இடைவெளிகள் விட்டும் எழுத வேண்டும். இவற்றையனுப்பும் கடித உறையின் வலது மூலையில் அனுப்பும் விடயம் கட்டுரையா, கதையா, விடுவிடையா, செய்தியா என்பதைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்ப்போம்.

# கல்வியே கருந்தனம்

## ஊக்கமுடன் படித்திடணும் தம்பி!

செ. குணரத்தினம்

காக்கையைப் போல் சேர்ந்து வாழு தம்பி—உனது
கவலை யெல்லாம் மாண்டு போகும் தம்பி
வாக்கினிலே உண்மை வேண்டும் தம்பி—இதை
வளர்கையிலே கற்றுடணும் தம்பி!

இளமையிலே பழகுகின்ற பழக்கம்—பின்பு
இறக்கும் வரை வருவதனால் தம்பி,
உலகினிலே நல்லவற்றைக் கேட்டு—இன்றே
ஊக்கமுடன் படித்துடணும் தம்பி!

சின்னவன் நீ யென்றாலும் தம்பி—நீ
செய்வதெல்லாம் நல்லதாய்ச் செய் தம்பி
உன்னைப் போன்ற சிறுவர்களின் கையில்—இந்த
உலகம் நாளை மாறிவிடும் தம்பி!

காலமெல்லாம் வீணாகத் தம்பி—நீ
கழித்து விட்டு, நடுத் தெருவில் நாளை
அலைமிட்டு அலைந்திடாதே தம்பி!—இன்றே
ஊக்கமுடன் படித்திடணும் தம்பி!

## நல்ல பேனாவாம்!

—'நவாலியூர்க் கவிராயர்'—

பேனாவாம் நல்ல பேனாவாம்
புனையும் பொருள் பேனாவாம்!
வானைத் தீட்டும் மையினால்
வண்ணச் சிவப்பு பச்சையால்,
பேனா கொண்டே எழுதலாம்
பெரும் போரைக்கூட மூட்டலாம்!

பேனாவாம் நல்ல பேனாவாம்
பள்ளி செல்லும் மாணவர்,
நினைவில் நிற்கும் பேனாவாம்!
நாவல்லார், உயர் பாவல்லார்
சேனைக்கா வல்லாரைத் தானுமிது,
சிறை செய்யும் பேனாவாம்!

பேனாவாம் திறம் பேனாவாம்
பாருக்குள் புதுப் பேனாவாம்!
பேனாக்கள் பல தோன்றுமுன்னே
பண்டையோர் பட்சி இறகையே,
புனைந்திடப் பொருள் கொண்டனர்
புரிவீரே பள்ளிப் பாலர்காள்!

பேனாவாம் அரும் பேனாவாம்
புனையுங் கருவி பேனாவாம்!
நினைவெனும் அந்த நிழலுக்கு
நீங்காத நற்றுருக் கொடுத்து,
புனைந்திடும் பல கதைகளைப்
பாருக்குள் சில பேனாக்கள்!

## ஒரு துண்டு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியில் இருந்து திரும்பிய மணியம் அடுப்படியில் ஒருவரும் இல்லை என்று அறிந்த பின்னர் அரிசியைப் பார்த்தான். அங்கு அரிசியில்லை. தனக்கு ஏற்படும்மகிழ்ச்சியை யாரோ பசி என்று தட்டிப் பறிப்பது போல் இருந்தது.

தந்தையிடம் சென்று 'அப்பு நான் பார்த்த சேட்டு கிடைக்கவில்லை. வாறகிழமைதான் அப்படிச்சேட்டுவருமாம்' என்று கூறிக் கொண்டு பணத்தைக் கொடுத்தான். தந்தைக்கு அப்பன் எடுக்க என்று கொல்லிக கொடுத்தால் அவரும் அம்மாவும் துன்பப்படுவார்கள் என்று எண்ணிப் அப்பொய்யைச் சொன்னான். ஆனால் அவருக்கு அவன் வார்த்தைகள் வாளோ ஒரு துண்டு தசை என்று கேட்டு உயிர் இருக்க மட்டும் வெட்டுவது போல் இருந்தது. மகன் தனது இன்பங்களைத் துறந்தது மட்டுமல்லாமல் தங்களுடைய ஆறுதலுக்காக பொய் கூடச் சொல்லப் பண்ணிய தன் ஏழமையை எண்ணி கண்ணீர் விட்டு அழுவதை அன்று அவரால் நிறுத்திவிட முடியவில்லை.

## முகத்தில்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இடமுண்டு. இது 'பயறியா' வியாதியின் ஆரம்பம். பல்முரசை அழுத்தித் தேய்க்க வேண்டும்.

துவர்ப்பு, காரம், கசப்புள்ள ஆலம் விழுது, வேப்பங்குச்சி, ஆமணக்கம் குச்சி இவற்றால் தேய்த்தல் நன்று.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் கசாயத்தால் வாய் கொப்பளித்தல் நன்று.

இருந்த போதிலும் பல் வைத்தியரைக் கலந்து சிகிச்சை பெறல் சிறந்தது.

உணவு வகையில் கவனம் செலுத்தவும்.

செல்வி பரமேஸ்வரி,
புன்னாலைக்கட்டுவன்.

கே: எனது தம்பிக்கு வயது 9. பிறந்து ஒரு வருடத்தின் பின்பு கண் வெள்ளை முளியில் கறுப்பு புள்ளி தோன்றி வரவரப் பெருக்கின்றது. கண் பார்வை நன்று. ஆலோசனை தருக!

ப: இதைப் பற்றி நீங்கள் கவலையடைய வேண்டாம். இருந்தும் உங்கள் சந்தேகத்தை நிவிர்த்தி செய்ய சிறந்த கண் வைத்தியரைக் கலந்து ஆலோசித்தல் சிறந்தது.

திருமதி இ. மகேஸ்வரி,
யாழ்ப்பாணம்.

கே: உரிய காலத்தில் மணமாகிய எனக்கு பிள்ளைகள் இல்லை. வயிற்றுக்கு கீழ்ப்பாகங்களிலும், கைகளிலும் சொறிவு. இதனால் எனக்கும் கணவருக்கும் மனவேதனை.

ப: இப்படியான நிலையில் கணவனுக்கும் வேதனை ஏற்படவே செய்யும். கவலையை விடவும். சலவை அழுக்கின் காரணமாக இப்படியான சர்ம வியாதி ஏற்படுகின்றது. தகுந்த வைத்தியரிடம் காட்டியே சிகிச்சை பெற வேண்டும்.

எஸ். கணபதிப்பிள்ளை,
கோண்டாவில்.

கே: எனது மகனுக்கு 4 வயது 7 மாதம். அடிக்கடி வலிப்பு வருகின்றது. இந்நேரத்தில் கண்முளி உள் செருகுகின்றது. வாய் திறக்க முடியாமல் பூட்டுப் படுகின்றது. மாதம் ஒரு முறை வருகின்றது. ஆலோசனை கூறவும்.

ப: வலிப்பு ஒரு வியாதியல்ல. இது வேறு வியாதிகளின் இலட்சணமாக ஏற்படுகின்றது. அதிகமாக குழந்தைகளுக்கு ஆகார சம்பந்தமான அவயவங்களில் ஏற்படும் மாற்றங்களினாலும் குடற் கிருமித் தொந்தரவுகளினாலும் ஏற்படுகின்றது. அல்லது மூளைக்கவசதாபிதத்தினாலும் ஏற்படலாம்.

கொடுக்கும் உணவை அளவறிந்து கொடுப்பதோடு நன்கு ஒழுங்காக மலம் போகின்றதா எனவும் கவனிக்கவும். அத்துடன் சிறுபிள்ளை வைத்திய நிபுணரை அணுகுதல் நன்று.

'இராசா',
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

கே: ..............................?

ப: நீர் கட்டாயம் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியின் மேக நோய் பகுதிக்குச் சென்று சிகிச்சை பெறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வெற்றிகரமான

# 2வது வாரம்

இது கலைஞர் ஸ்ரீதரின் கலை விருந்து !

சென்ட்ரல் ஈரோஸ் ராணி
(மருதானை) [பாமன்கடை] [யாழ்ப்பாணம்]

ஜோதி ராஜேஸ்வரா
[திருமலை] [மட்டக்களப்பு]


லிபேர்டி லிபேர்டி
[பதுளை] [அட்டன்]

முத்துராமன் ★ எஸ். வி. சுப்பையா ★ சந்திரகாந்தா
ராஜஸ்ரீ ★ நாகேஷ் ★ ஜெயந்தி
வி. கோபாலகிருஷ்ணன்

மற்றும் பலர் நடித்த

பாக்கியலக்ஷ்மி புரொடக்ஷன்ஸ்

# கலைக் கோவில்



பாடல்கள்:
கண்ணதாசன்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி

பின்னணி:
சீர்காழி கோவிந்தராஜன்
பி. பி. ஸ்ரீநிவாஸ், பி. சுசீலா,
பாலமுரளி கிருஷ்ணா,
எல். ஆர். ஈஸ்வரி

கதை, வசனம், டைரக்ஷன்:

ஸ்ரீதர்

● ஆயிரத்தில் ஒரு படம்

● இதயத்திலிருந்து நீங்கா அழகு திரை யோவியம்

அனைவரும் பார்த்து மகிழ வேண்டிய அற்புதக் கலா சிருஷ்டி!

---

# மக்கள் திலகத்துக்கும் சரோஜாதேவிக்கும்

## ஈழ மக்கள் அளித்த வரவேற்புடன்

இருவரும் இணைந்து தோன்றும்
இணையற்ற படத்துக்கான வரவேற்பும்
போட்டி போடுகிறது!

விஜயா கம்பைன்ஸ்

# எங்க வீட்டுப் பிள்ளை

(ஈஸ்ட்மென் கலர்)

புரட்சி நடிகர் **எம். ஜி. ராமச்சந்திரன்** (இரட்டை வேடங்களில்)
சரோஜாதேவி, நம்பியார், பண்டரிபாய், ரத்னா, ரங்கராவ்,
தங்கவேலு, நாகேஷ், பேபி சகிலா
நடித்தது



கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா [வெள்ளவத்தை] — நவா [கொம்பனித்தெரு] — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) — வெம்பிளி (கண்டி) — ராஜா (யாழ்ப்பாணம்) — தீவொலி (நுவரெலியா) — ராஜ் (நீர்கொழும்பு)

---

இறுதி வாரம்

எல்பின்ஸ்டன் — ரெக்ஸி

இணையற்ற 4வது வாரம்!

இம்பீரியல் (மட்டக்களப்பு) — ஓடியன் (கண்டி)

வின்சர் யாழ்ப்பாணம் 5-வது வாரம்

குளிர்ச்சியூட்டப்பட்ட (கொழும்பு) ரீகலில்
வார நாட்களில் காலை 10 மணிக்கு

ஒருமுறை பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும்
தியேட்டர்களை முற்றுகையிடுகின்றனர்!

திகைப்பூட்டும் திகில் காட்சிகளும்,
ரம்மியமான பாடல்களும்,
புதுமையான அம்சங்களும் கொண்ட

# புதிய பறவை

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி, நாகேஷ், வி. கே. ராமசாமி
நடித்தது.



# வெகு விரைவில்

எஸ். எஸ். ராஜேந்திரன்,
விஜயகுமாரி,
எம். ஆர். ராதா,
தங்கவேலு
ஆகியோர் தோன்றும்

# உல்லாசப் பயணம்

---

இப் பத்திரிகை இலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194ம், இலக்கத்தில் 1965-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org